# ஆசியாவும்

# உலக

# சமாதானமும்

வெ. சாமிநாத சர்மா

பிரபஞ்ச ஜோதி பி...

14170
4936
XXV
MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHAIYAR LIBRARY MADRAS-41.
1961

உலகத்தில் நிலையான அமைதி நிலவ வேண்டுமானால் அதற்கு ஆசியா தான் வழிகாட்ட வேண்டும், அதற்குத்தான் அந்தத் தகுதி உண்டு என்பதை இந்நூல் ஆதாரபூர்வமாக எடுத்துக் கூறுகிறது. ஆசியாவின் பூர்வீகம், அதன் நாகரிகச் சிறப்பு, ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமுள்ள தாரதம்மியங்கள், சமாதான இயக்கத்தின் சரித்திரம் சமாதானத்திற்காகச் செய்யவேண்டிய காரியங்கள் யாவும் இதில் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச ஜோதி பிரசுரம் — 12.

# ஆசியாவும்
# உலக சமாதானமும்

எழுதியது :

வெ. சாமிநாத சர்மா

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

சென்னை :: புதுக்கோட்டை

முதற் பதிப்பு: நவம்பர் 1947.
இரண்டாம் பதிப்பு: டிஸம்பர் 1953.
மூன்றும் பதிப்பு: ஜனவரி 1961.
உரிமை: மங்களம்-சாமிநாதன் டிரஸ்ட்டைச் சேர்ந்தது.

விற்பனை, விநியோகம்:
பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்
புதுக்கோட்டை :: திருச்சி ஜில்லா

ஆசிரியர்:
12, ஸர் முகம்மது உஸ்மான் ரோடு
தியாகராயநகர் :: சென்னை

விலை: இரண்டு ரூபாய் ஐம்பது நயாபைசா

Printed at Gitanjali Press (Private) Ltd., Pudukkottai—9-60.

# பொருளடக்கம்


பக்கம்

பிரசுராலயத்தின் வார்த்தை ... ... 5

வாசகர்களுக்கு — முதற் பதிப்பு ... 6

,, — இரண்டாம் பதிப்பு ... 7

,, — மூன்றும் பதிப்பு ... 8

1. ஆசியாவின் பழமை ... ... 9

2. ஆசியாவின் தகுதி ... ... 22

3. ஐரோப்பாவும் ஆசியாவும் ... 50

4. சமாதான முயற்சிகள் ... ... 57

5. சமாதானத்திற்கு வழி ... ... 82

அனுபந்தம் —

1. ஆசிய நாடுகளைப்பற்றிய விவரங்கள் ... 110

2. துணை நூல்கள் ... ... 112

3. பொருட் குறிப்பு ... ... 113

# பிரசுராலயத்தின் வார்த்தை

(முதற் பதிப்பு)

ஆசியாவும் உலக சமாதானமும் என்ற இந்நூல், எங்கள் ஆசிரியர் சர்மாஜி, பெங்களூரில் நிகழ்த்திய ஒரு பிரசங்கத்தின் விரிந்த உரை. அவருடைய தீர்க்க திருஷ்டி கொண்ட இந்தச் சரித்திர ஆராய்ச்சியை, ஆசிய மக்களின் பெருமையை எடுத்துரைக்கும் சான்றுகள் நிறைந்த இந்த சிருஷ்டியை, பிரபஞ்ச ஜோதி பிரசுரங்களின் தன்மையை எடுத்துக் காட்டும் இந்தத் தொகுப்பை, உலகனைத்தையும் தமிழில் காண வேண்டுமென்று அவாவுற்றிருக்கும் அன்பர்களுக்கு அளித்து, அவர்களின் ஆசியைப் பெற வேண்டுமென்பதே எமது விருப்பம்.



பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்.

# வாசகர்களுக்கு

(முதற் பதிப்பு)

உலகத்திலுள்ள எந்த ஒரு நாடும் இனி தனித்து வாழ முடியாது. சுதந்திரமாக வாழ்தலென்று சொன்னால் தனித்து வாழ்தல் என்ற அர்த்தம் இனி செல்லுபடியாகாது. மற்ற நாடுகளின்மீது நம்பிக்கை கொள்ளுதல், மற்ற நாடுகளுடன் ஒத்துழைத்தல், இவைகளின் மூலந்தான் இனி எந்த ஒரு நாடும் தன்னுடைய சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். இதற்கு இன்றியமையாது வேண்டப்படுபவை, மற்ற நாடுகளைப்பற்றிய அறிவு, மற்ற நாடுகளுடன் தொடர்பு ஆகியவையேயாம். ஆசிய நாடுகளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும். அவைகளோடு தொடர்புகொள்ள வேண்டுமென்ற ஓர் ஆசையை இந்தச் சிறிய நூல் எனது தமிழ்ச் சகோதரர்களிடையே உண்டுபண்ணுமானால் அஃது என்னுடைய பாக்கியம் என்று கருதுவேன்.

இந்தியா சுதந்திரமடைந்துவிட்டது. ஆசியா ஒன்றுபட்டுவிட்டது. "அன்பரெல்லாம் இன்பம் அருந்திட" உலகத்தில் சாந்தி நிலவுவதாக!

சுதந்திரத்
திருநாள்
15—8—1947

# வாசகர்களுக்கு

(இரண்டாம் பதிப்பு)

இந்த நூலின் முதற் பதிப்பு வெளியான பிறகு, ஆசிய நாடுகளின் மத்தியில், ஏன்? உலக வல்லரசுகளின் மத்தியில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துகொண்டு வருகிறது. இந்தியாவை நன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் உலக மக்களிடையே அதிகப்பட்டுக் கொண்டு வருகிறது. இவையிரண்டும் நமக்குப் பெருமை தரக்கூடிய விஷயங்களல்லவா?

இவை இரண்டுக்கும் காரணம் என்ன? இந்தியா, நேரிய நோக்குடன் சமாதான பாதையில் சென்றுகொண்டிருப்பதுதான். இப்படிச் சென்றுகொண்டிருக்கிற வரையில், இதற்கு யாரிடமிருந்தும் எவ்விதமான ஆபத்தும் ஏற்படாதென்பது உறுதி.

ஆசியாவுக்கு, இந்தியா வழி காட்டப்போகிறதென்று நூலின் கடைசியில் கூறியுள்ளோம். ஆசியாவுக்குமட்டுமல்ல, உலகத்திற்கு இந்தியா வழி காட்டிக்கொண்டு வருகிறது என்று இந்த இரண்டாம் பதிப்பின் முகவுரையில், தலை நிமிர்ந்துகொண்டு கூறுகிறோம்.

**தியாகராயநகர்,**
**சென்னை**
**1—12—1953**

## வாசகர்களுக்கு


(மூன்றாம் பதிப்பு)

இந்த மூன்றாம் பதிப்பு வெளியாகும் தருணத்தில், ஆசிய நாடுகள் பல, சுதந்திர வாழ்வெய்தியதன் காரணமாக, உலக அரசியல் அரங்கத்தில் தனி மதிப்புப் பெற்று விளங்குவது யாவரும் அறிந்ததே. இந்த நிலையில், ஆசிய நாடுகள் பலவற்றின் வரலாற்றையும், மக்களின் வாழ்க்கையையும் தமிழர்கள் அறிமுகம் செய்துகொள்ள வேண்டியது மிக அவசியம். இந்தப் பணியைச் செய்ய சரித்திர ஆராய்ச்சித் துறையில் ஈடுபட்டுள்ள அன்பர்கள் முன்வர வேண்டுமென்பது என் பிரார்த்தனை.


தியாகராயநகர்,
சென்னை
31—12—1960

வெ. சாமிநாதன்

மகாத்மா
காந்தி




ஆசிய நாகரிகத்தின் பிரதிநிதி ;
சமாதான தேவதையின் தூதர்.




ஆல்ப்ரெட் நோபெல்

ஆல்ப்ரெட் நோபெல் (*1833—1896*) ஸ்விடன் தேசத்தைச் சேர்ந்த ஒரு **விஞ்ஞான** சாஸ்திரி, வெடிமருந்து வகைகளைக் கண்டுபிடித்தவன். இவைகளை உற்பத்தி செய்து ஏராளமான பணம் சம்பாதித்தான். சுமார் பதினேழரை லட்சம் பவுன் கொண்ட ஒரு நிதியை ஏற்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை நோபெல் பரிசுகளென்று வழங்கும்படியாக ஏற்பாடு செய்தவன். முதல் முதல் இந்தப் பரிசு 1901-ஆம் வருஷம் வழங்கப்பட்டது. இந்த ஒவ்வொரு பரிசின் மதிப்பு சுமார் ஆறுயிரத்து ஐந்நூறு பவுன். விஞ்ஞானம், ரசாயனம், வைத்தியம், இலக்கியம், உலக சமாதானம் ஆகிய ஐந்து துறைகளிலும் முறையே சிறந்த ஆராய்ச்சி செய்தவர்களுக்கோ, அரிய நூல்கள் எழுதியவர்களுக்கோ, தொண்டு புரிந்தவர்களுக்கோ, பிரதி வருஷமும் இந்தப் பரிசு அளிக்கப்படுகிறது.

## ஆண்ட்ரு கார்னிஜி



ஆண்ட்ரு கார்னிஜி (1835—1919) ஸ்காத்லாந்தில் பிறந்து அமெரிக்கா சென்று குடியேறியவன்; சுய முயற்சியால் முன்னுக்கு வந்தவன். அநேக எஃகுத் தொழிற்சாலைகளை ஆரம்பித்துத் திறம்பட நடத்தி அதன் மூலம் நிறையப் பணஞ் சம்பாதித்தான். அப்படிச் சம்பாதித்த பணத்தை பல நல்ல காரியங்களுக்கு—சிறப்பாக கல்வி அபிவிருத்திக்காகவும் உலக சமாதானத்திற்காகவும்—கொடுத்தான்.




எலிஹூ
புர்ரிட்

எலிஹூ புர்ரிட் (1810–1879) இவன் கருமாரத் தொழில் செய்துவந்த ஓர் அமெரிக்கன் ; பல மொழிப் புலவன். "உலக சகோதரத்வ சங்கம்" என்ற ஒரு சங்கத்தை ஸ்தாபித்து, அதன் மூலம் உலகத்தில் நிலையான சமாதானம் நிலவ வேண்டுமென்று பாடுபட்டவன். சமாதான காங்கிரஸ்களைக் கூட்டியவன்.



## ஸோபியா மசூதி

துருக்கியின் தலைநகராகிய கான்ஸ்ட்டாண்ட்டிநோபிள் என்று அழைக்கப்படுகிற இஸ்த்தாம்பூலிலுள்ள இந்த ஸோபியா மசூதி முதலில் ஒரு கிறிஸ்த்துவ தேவாலயமாக இருந்தது. இந்த ஆலயத்தைக் கட்டியது ஜுஸ்ட்டினியன் (கி. பி. 527—565) என்ற அரசன். கான்ஸ்ட்டாண்டிநோபிள், 1453-ம் வருஷம் துருக்கியருடைய ஆதிக்கத்துக்குட்பட்ட பிறகு இந்தத் தேவாலயம் மசூதியாக மாற்றப்பட்டது. இதன் சிற்ப வேலைப்பாடு மிகவும் அருமையானது.



கோல்கும்பஸ்

பிஜப்பூரிலுள்ள இந்த கோல்கும்பஸ், பிஜப்பூர் சுல்தான்களில் ஒருவனான முகம்மது அடில்ஷா (1626-1655) வினால் கட்டப்பெற்றது. சதுரவடிவமாயமைந்துள்ளது. ஒவ்வொரு பக்கத்து மூலேயிலும் ஒவ்வொரு ஸ்தூபி விகிதம் நான்கு ஸ்தூபிகள் இருக்கின்றன. இந்த ஒவ்வொன்றும் ஏழு மாடிகளுடையது. கட்டிடத்தின் முன்பாகத்தில் 94 அடி நீளமும், 88 அடி அகலமும் உள்ள ஒரு நுழைவாயில் இருக்கிறது. கட்டிடத்தின் மத்தியில் 135 சச்சதுர அடியுடைய


மண்டபம் இருக்கிறது. இந்த மண்டபத்திற்கு மேலே உருண்டை வடிவமான விமானம் (கும்பம்) அமைக்கப் பட்டிருக்கிறது. இதனால்தான் இதற்கு கோல்கும்பஸ் என்று பெயர் வந்தது. இந்த விமானத்தின் குறுக்களவு 124 அடி. ஒவ்வொரு ஸ்தூபியிலிருந்து விமானத்திற்கு இணைப்பும் உண்டு. விமானத்தின் உட்புறத்தில் அகலமான உத்தளம் இருக்கிறது. இதன் ஒரு பக்கத்தில் ஏற்படுகிற சிறிய சப்தம் எதிர்ப் பக்கத்தில் பெரிதாக எதிரொலி கொடுக்கிறது. அதுதான் அந்தக் கட்டிடத்தின் விந்தை.

பிஜப்பூர், பம்பாய் மாகாணத்தில், எம். எஸ். எம். ரெயில்வே பாதையில் ஷோலாப்பூர் ஸ்டேஷனுக்கு 68-வது மைலில் உள்ளது.




## சுக்கூர் அணை

சுக்கூர் அணையென்றும், பம்பாய் கவர்னராயிருந்த (1918–1923) ஸர் ஜார்ஜ் லாயிட் காலத்தில் தொடங்கப் பெற்றதால், லாயிட் அணையென்றும் இஃது அழைக்கப் படுகிறது. சுக்கூர் என்பது, சிந்து மாகாணத்திலுள்ள சுக்கூர் ஜில்லாவின் தலைநகரம். இந்த நகரத்திற்குச் சுமார் மூன்று மைல் மேற்கில் மேற்படி அணை இருக்கிறது. இது 1923-ஆம் வருஷம் தொடங்கி 1932-ஆம் வருஷம்முடிக்கப் பெற்றது. சிந்து நதியைத் தடுத்துக் கட்டப்பெற்றிருக்கும் இந்த அணையானது சுமார் ஒரு மைல் நீளமுள்ளது. இந்தத் தேக்கத்திலிருந்து ஏழு பெரிய வாய்க்கால்கள் பிரிந்து சென்று சுமார் அறுபது லட்சம் ஏக்ராக்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனர்.




## தாஜ் மகால்

மொகலாய சக்ரவர்த்தி ஷாஜஹான், (கி. பி. 1628–58) தன் மனைவி மும்தாஜ் பேகத்தின் ஞாபகார்த்தமாக எழுப்பிய கட்டிடம் இது. இதனால்தான் இதற்கு தாஜ்மகால் என்ற பெயர் வைக்கப்பட்டது. வெள்ளைச் சலவைக் கற்களாலாகியது. இதனைக் கட்டி முடிக்கச் சுமார் இருபது வருஷ காலம் பிடித்தது என்றும், ஏறக்குறைய இருபதினாயிரம் பேர் வேலை செய்தனரென்றும் உத்தேசமாக மூன்று கோடி ரூபாய்க்கு மேல் செலவாயிற்றென்றும் கூறுவர். இந்த தாஜ்மகால் கட்டிடம் ஆக்ரா நகரில் யமுனை நதிக்கரையிலிருக்கிறது. உலக அதிசயங்களில் இதுவும் ஒன்று.




## பிரமிட் கோபுரங்கள்

கோபுரங்கள் மாதிரி கருங்கற்களைக் கொண்டும் செங்கற்களைக் கொண்டும் நிர்மாணிக்கப்பெற்றிருக்கிற இந்த பிரமிட்டுகள் பலவற்றை எகிப்தில் காணலாம். இவை எகிப்திய மன்னர்களின் கல்லறைகள் மீது கட்டப்பெற்றவை. இவற்றுள் முக்கியமானவை கெய்ரோ நகரத்திற்கு நான்கு மைல் தூரத்திலுள்ள கிஸே என்ற இடத்தில் இருக்கின்றன. இங்கு ஒன்பது பிரமிட்டுக்களைக் காணலாம். இவற்றில் மிகப் பெரியது, சுமார் 480 அடி உயரமுடையதாயும், சுமார் 775 சதுர அடி அடித்தளமுடையதாயும் இருக்கிறது. இவை கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 3750 வருஷங்களுக்கு முன் கட்டப்பெற்றவை.



## சீனப் பெருஞ்சுவர்

தார்த்தாரியர்களுடைய படையெடுப்பைத் தடுக்கும் பொருட்டு சீனாவின் வடக்குப் பக்கத்தில் ஹுவாங்தி என்ற அரசனால் (கி. மு. 221 217) கட்டப்பெற்ற பெருஞ்சுவர் இது இதன் நீளம் சுமார் ஆயிரத்தறுநூறு மைல். சுமார் மூன்று லட்சம் பேர் இதனைக் கட்டி முடிக்க உபயோகிக்கப்பட்டனர். பல மலைகள். ஆறுகள் முதலியவைகளைக் கடந்து செல்கிற இந்தச் சுவர் ஆகாய விமானத்திலிருந்து பார்க்கிறபோது ஒரு பாம்புபோல் இருக்கிறது இதன் மேல்பாகம் செப்பனிடப்பெற்ற ஒரு பாதையாக அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்மீது மோட்டார் முதலியன தாராளமாகச் செல்லலாம்: சுவரின் நெடுகிலும், இருநூறு கஜத்திற்கு ஒரு காவல் பரண் விகிதம் கட்டப்பெற்றிருக்கிறது. சில இடங்களில் இப்பொழுது இந்தச் சுவர் சிதிலமடைந்திருந்த போதிலும் அநேக இடங்களில் கெட்டியாகவும் போக்குவரத்துக்குத் தகுதியுடையதாகவும் இருக்கிறது.



மௌஸோலியம்

## மௌஸோலியம்

தற்போது துருக்கியின் ஒரு பகுதியாயுள்ள அனட்டோலியா மாகாணமும், அதனோடு ஒட்டிய சில பிரதேசங்களும் சேர்ந்து ஆசியா மைனர் அல்லது சின்ன ஆசியா என்று அழைக்கப்படுகிறது. ஆதியில் இந்தச் சிறு பகுதியைத்தான் ஆசியா என்று அழைத்து வந்தார்கள். பின்னர் பூகோள அறிவு விருத்தியாக, ஆசியா கண்டத்திற்கும் இந்த ஆசியாவுக்கும் வித்தியாசம் காட்டவேண்டி, இதனை சின்ன ஆசியா என்று அழைக்கலாயினர். இந்தச் சின்ன ஆசியாவில் ஒரு பகுதி, கிறிஸ்து சகத்திற்கு முந்தி காரியா என்ற பெயரால் அழைக்கப்பட்டு ஒரு சுதந்திர ராஜ்யமாக இருந்தது இந்த ராஜ்யத்தை ஆண்டுவந்த மௌஸோலெஸ் என்ற பிரபல மன்னனுடைய ஞாபகச் சின்னமாக அவன் மனைவி அர்ட்டமீஷ்யா என்பவள், ஹாலிகார்ஸஸ்ஸஸ் என்ற நகரத்தில், (தற்போது இது புத்ரும் என்ற பெயரால் வழங்கப்படுகிறது) கி மு. 353-ம் வருஷம் கட்டப்பெற்ற சமாதியே இது. இதிலிருந்து தான் மௌஸோலியம் என்ற பெயர் வழங்கப்படுகிறது. இஃது உலக அதிசயங்களில் ஒன்று.




தொங்கும் தோட்டம்

# தொங்கும் தோட்டம்

பாபிலோனை ஆண்டுவந்த நெபுசாட்ரெஸ்ஸார் (கி. மு. 604—561) என்ற மன்னனால் இந்தத் தோட்டம் நிர்மாணிக்கப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. இது சுமார் நான்கு ஏக்கரா விஸ்தீரணமுடையது; எழுபத்தைந்து அடி உயரமுள்ளது; பல மாடிகளாக அமைக்கப்பெற்றது இந்த மாடிகளில் மண்ணை நிரப்பி பலவகை செடி கொடிகளையும் வளர்த்துவரச் செய்தான் மேற்படி நெபுசாட்ரெஸ்ஸார் மன்னன். யூப்ரெட்டீஸ் நதியிலிருந்து தண்ணீரை, ஒரு விசையினால் குழாய் மூலம் மேல் மாடிக்கு ஏற்றி, அங்கிருந்து தோட்டத்தின் எல்லாப் பாகங்களுக்கும் பாயும்படி செய்தான். இந்தத் தோட்டத்தில் பல விசையூற்றுக்களும் விருந்து மண்டபங்களும் அமைக்கப் பட்டிருக்கின்றன. இஃது உலக அதிசயங்களிலொன்று.

இப்பொழுதுள்ள ஈராக் தேசத்தில் ஒரு பகுதிதான் முன்னர் பாபிலோனியா ராஜ்யமாக இருந்தது. இதன் தலைநகரமாகிய பாபிலோனில்தான் இந்தத் தோட்டம் நிர்மாணிக்கப்பட்டது. பாபிலோன் நகரம் இப்பொழுது யூப்ரெட்டீஸ் நதிக் கரையில் சாதாரண ஒரு சிறு நகரமாயிருக்கிறது. இந்தத் தொங்கும் தோட்டத்தை மாடித் தோட்டமென்றும் சொல்வதுண்டு. இங்கேயுள்ள மரங்கள் முதலியன தழைத்து பூமி பக்கம் வளைந்திருப்பதால், கீழேயிருந்து பார்ப்பவர்களுக்கு ஆகாயத்திலிருந்து தொங்குவனபோல் தெரிகின்றனவென்றும், இதனால் தான் தொங்கும் தோட்டமென்று அழைக்கப் பெற்றதென்றும் கூறுவர்.



**அலெக்ஸாந்திரியா கலங்கரை விளக்கம்**

எகிப்தின் தலைநகராகிய கெய்ரோவுக்கு நேர் வடக்கேயுள்ள அலெக்ஸாந்திரியா துறைமுகத்தைச் சேர்ந்த பாரோஸ் என்ற சிறு தீவில் உள்ள இந்தக் கலங்கரை விளக்கம் கி. மு. 331-ஆம் வருஷம் கட்டப் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. நூற்றுக் கணக்கான வருஷங்களாக உக்கிரமான அலைமோதிக் கொண்டிருந்தும், இந்த விளக்கம் நிலைத்து நிற்பது ஆச்சரியம்.

# 1. ஆசியாவின் பழமை

ஒரே நிலப்பரப்பை இரண்டு கண்டங்களென்று பிரித்து வைத்தார்கள். பிரித்தது யார், எப்பொழுது பிரித்தார்கள், ஏன் பிரித்தார்கள் என்ற விவரங்கள் தெரியவில்லை. கிரீஸ் தேசத்திலிருந்த சில அறிஞர்கள், எப்பொழுதோ ஒரு காலத்தில் ஒரு நாள் காலையில் எழுந்திருந்து சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்தார்களாம். என்ன தோன்றியதோ அவர்களுக்கு, சூரியன் பக்கமாயுள்ள பிரதேசத்திற்கு 'அசு' என்றும், எதிர்ப்புறமாயுள்ள பிரதேசத்திற்கு 'எரேப்' என்றும் முறையே பெயர் வைத்தார்களாம்.[1] 'அசு' என்றால் சூரியன் உதிக்கும் பக்கமென்றும், 'எரேப்' என்றால் சூரியன் அஸ்தமிக்கின்ற பக்கமென்றும் அர்த்தம். இந்த இரண்டு வார்த்தைகளும் எந்த பாஷையைச் சேர்ந்தவை யென்பதும் சரியாகத் தெரியவில்லை. ஆனால் அஸ்ஸிரியா தேசத்துப் புராதனச் சின்னங்களில் இந்த இரண்டு வார்த்தைகளும் காணப்படுகின்றனவென்றும், இவை மேலே சொன்ன அர்த்தத்திலேயே உபயோகிக்கப்பட்டிருக்கின்றனவென்றும் சரித்திர நிபுணர்கள் கூறுகிறார்கள். ஆக 'அசு' என்பது ஆசியாவாயிற்று; எரேப்' என்பது ஐரோப்பாவாயிற்று. இது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. இவ்விரண்டு பெயர்களின் மூலந்தான் தெரியவில்லை. இதற்காக நாம் வெட்கப்படவேண்டியதுமில்லை. ஏனென்றால் கி. மு. ஐந்தாவது நூற்றாண்டிலே வாழ்ந்த பிரபல கிரேக்க சரித்திராசிரியனான ஹெரோடோட்டஸ்[2] என்பவனே, தனக்கு இது தெரியவில்லையென்று கூறுகிறான். இதனால்

---

1 Asu-( the land of ) the rising sun ; Ereb-(the land of ) the setting sun.

2 Herodotus கி மு. 484-425.

அவன் காலத்திற்கு எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முந்தி, இந்த ஆசிய ஐரோப்பியப் பிரிவினை ஏற்பட்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஆரம்பத்தில் கிரேக்கர்கள், தங்களுக்குக் கிழக்கிலுள்ள ஒரு சிறிய பிரதேசத்தையே ஆசியாவென்று அழைத்தனர். பின்னர் பூகோள சாஸ்திர அறிவு விருத்தியாக, விருத்தியாக, இந்தப் பிரதேசத்தின் எல்லையும் விரிந்து வந்தது.

ஆசியா பல வர்ணங்களுடைய ஒரு மலர்; பன்மை யாகத் தோற்றமளிக்கும் ஒருமை; பல கண்டங்களை யுடைய ஒரு கண்டம். ஆசியாவில் பல மொழிகள், பல மதங்கள், பல நிறங்கள், பல நாகரிகங்கள் பரவி நிற்கின் றன. இருந்தாலும் இவற்றின் அடிப்படை ஒன்றே; இவை வெளியிடும் உண்மை ஒன்றே; இவை நாடுகின்ற நலனும் ஒன்றே.

ஆசியாவைத் தவிர்த்த மற்ற நான்கு கண்டங்களி லும் பெரும்பாலும் ஒரே மதத்தினரும், ஒரே நிறத்தி னரும், ஒரே நாகரிகத்தினருமான ஜனங்கள் வசிக்கிறார் கள். ஆனால் இவர்கள் வெவ்வேறு நலன்களை நாடுகின்ற வர்களாயிருக்கிறார்கள்; வெவ்வேறு இனத்தினர் போலவே பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நடந்து கொள்கி றார்கள். ஆசியாவுக்கும் அதை விடுத்த மற்ற உலகத் திற்குமுள்ள வித்தியாசம் இது.

இருபதாவது நூற்றுண்டின் இடைக்காலம் வரையில் ஆசியாவை இரண்டு பிரிவுகளாக்கிப் பேசிவந்தனர் சிலர். ஆசியா கண்டத்திலுள்ள ருஷ்யப் பகுதியையும் துருக்கி யையும் சேர்த்து ஐரோப்பிய ஆசியாவென்றும், மற்ற நாடுகள் அனைத்தையும் சேர்த்து ஆசிய ஆசியாவென்றும், பேசினர். பத்தொன்பதாவது நூற்றுண்டு தொடக்கத்தி லிருந்து ஐரோப்பாவின் கிழக்கெல்லையிலும் ஆசியாவின் மேற்கெல்லையிலும் நடைபெற்றிருக்கிற அரசியல் சம்ப வங்களைத் தொகுத்துப் பார்க்கிறபோது இப்படி இரண் டாகப் பிரித்துப் பேசியது பொருத்தமாகவே இருந்தது,

ஆனால் இருபதாவது நூற்றண்டின் இடைக்காலத்தி லிருந்து இந்தப் பிரிவினை, இப்படிப் பிரித்துப் பேசுவது அவசியமற்றதாகிவிட்டது. ஆசியாவிலுள்ள சகல நாடு களும் ஒரே குரலில் பேசத் தொடங்கிவிட்டன. 1947-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் மூன்றுவது வாரம் டெல்லிமா நகரத்தில் கூடிய ஆசிய நல்லுறவு மகாநாட்டில் முதல் குரலைக் கேட்டோமல்லவா?

ஆசியா என்று சொன்னல் அதில் எகிப்தும் சேர்ந் திருக்கிறதென்பதே அர்த்தம். பூகோள சாஸ்திர ரீதியாக, எகிப்து, தனியான ஒரு கண்டத்தில் — ஆப்ரிக்காவில் — இருக்கிறதென்று சொல்லலாமாயினும், சரித்திர ரீதியா கப் பார்க்கிறபோது அஃது ஆசியாவைச் சேர்ந்ததாகவே இருக்கிறது. ஆசியாவிலுள்ள நாடுகளுக்கும் அதற்கும் நீண்ட காலமாகவே நெருங்கிய கலாசாரத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. எகிப்தின் புராதன காலத்துச் சரித்திரக் காட்சிகள் பலவும் ஆசிய மண்ணிலேயே நடை பெற்றிருக்கின்றன. ஆசியாவில் தோன்றி மறைந்த நாகரிகங்கள், நின்று நிலவுகின்ற நாகரிகங்கள் ஆகிய இவற்றின் அடிப்படையான அமிசங்களும் எகிப்திய நாகரிகத்தின் அடிப்படையான அமிசங்களும் ஒன்றுகவே இருக்கின்றன. சிறப்பாக இந்தியா, சீன ஆகிய இரண்டு நாடுகளுக்கும் எகிப்துக்கும் பலவித ஒற்றுமைகள் உண்டு. மூன்றும் புராதனப் பெருமை வாய்ந்தவை; சிருஷ்டி சக்தியுடையவை. மூன்றும் அந்நிய ஆதிக்கத்தின் கீழ் அரைபட்டவை; ஆயினும் அழிந்தும் அழிபடாத தேசங்கள். இத்தகைய ஒற்றுமையான பல அமிசங்கள் இருப்பதனால்தான், மேலே சொல்லப்பெற்ற ஆசிய நல் லுறவு மகாநாட்டில் எகிப்து இடம் பெற்றது; அதன் நடவடிக்கைகளில் எகிப்தியப் பிரதிநிதிகள் பரிபூரண மாகப் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

பொதுவாகக் கீழ்நாடு அல்லது கிழக்கு நாடு என்று சொன்னல் அஃது ஆசியாவையே குறிக்கிறது. இந்தக்

கீழ்நாட்டை, சமீப கிழக்குப் பிரதேசமென்றும் தூர கிழக்குப் பிரதேசமென்றும் இரண்டு பிரிவாகப் பிரிப்ப துண்டு. இந்தியாவுக்கு மேற்குப் புறமாயுள்ள நாடுகள் யாவும், அதாவது ஆப்கனிஸ்தானத்திலிருந்து துருக்கி வரையிலுள்ள நாடுகள் பலவும், சமீப கிழக்குப் பிரதேச மென்று அழைக்கப் பெறுகின்றது இந்தப் பிரதேசத்தில் எகிப்தும் அடங்கும். இந்தியா, சீனு, ஜப்பான் இவைகளைச் சேர்ந்தாற்போலுள்ள தேசங்கள், தீவுகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து தூர கிழக்குப் பிரதேசம் என்ற பெயரைப் பெறுகின்றது.[1]

இங்ஙனம் ஆசியாவை மேற்குக்கிழக்காகப் பிரித்துப் பேசியபோதிலும், அதன்கண் ஆதிகாலந் தொட்டு நிகழ்ந்து வந்திருக்கின்ற பெரும்பற்றுன குடியேற்றங்கள், அரசர்களின் படையெடுப்புகள் இவையெல்லாம் பெரும்பாலும் வடக்கு தெற்காகவோ தெற்கு வடக்காகவோ தான் நடைபெற்றிருக்கின்றன. மத்திய ஆசியாவிலிருந்து ஆரியர்கள் வடக்கும் தெற்குமாகப் பரவினர்கள் என்று சொல்லப்படுகின்றதல்லவா அந்தக் காலத்திலிருந்து பாபர் இந்தியாவை நோக்கிப் படையெடுத்து வந்த காலம் (1525-ஆம் வருஷம்) வரையில் ஆசிய சரித்திரத்தின் ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை தெரிய வரும்.

உலகத்திலுள்ள மற்ற நான்கு கண்டங்களைக் காட்டிலும் ஆசியாதான் உருவத்திலும் ஜனத்தொகையிலும் பெரியது. உலகத்தின் மொத்த விஸ்தீரணம்: 5,57,86,000 சதுர மைல்; ஆசியாவின் விஸ்தீரணம்; 1,64,29 987 சதுர மைல். உலகத்தின் மொத்த ஜனத்தொகை:

1 மேனுட்டாருடைய அரசியல் ஆதிக்கம் கீழ்நாட்டில ஏற்பட்டு வலுக்க ஆரமபித்த காலததிலிருநது, கீழ்நாட்டை, சமீப கிழககுப் பிரதேசமென்றும், மத்திய கிழக்குப் பிரதேசமென்றும், தூரகிழககுப் பிரதேசமென்றும், கிழக்கிந் தியத் தீவுப் பிரதேசமெனறும் இப்படிப் பலவகையாக, அவசியத்தை அனுசரித்தும் சநதர்ப்பத்தை யொட்டியும் நுணுக்கமான பிரிவினைகளை ஏற்படுததிப் பேசுவது அரசியலவாதிகளின் வழக்கமாயிருந்து வருகிறது.

22,19,764 ஆயிரம்; ஆசியாவின் ஜனத்தொகை: 12,24,132 ஆயிரம். உலகத்தின் மொத்த விஸ்தீரணத்தில் மூன்றில் ஒரு பங்கு விஸ்தீரணமுடையதாகவும், ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்ட ஜனத்தொகையுடையதாகவும் ஆசியா இருக்கிறது. எனவே பரிமாணத்திலும் ஜனப்பெருக்கத்திலும் முதல் ஸ்தானம் வகிப்பது ஆசியாதான்.

உலகத்து அதிசயங்களுள் பெரும்பாலான அதிசயங்கள் தன்னிடத்தில் இருக்கின்றன என்று ஆசியா சொல்லிக் கொள்ளுமானால், அது, வயதிலும் அனுபவத்திலும் முதிர்ந்த ஒரு தாயார், ஒரு சிறு பெண்ணினிடம் தற்பெருமை பேசிக் கொள்வது போலிருக்கிறதென்று சிலர் கருதக் கூடுமாயினும், அந்த அதிசயங்களைப் பற்றிச் சுருக்கமாக இங்குச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகத்துப் புராதன கால அதிசயங்கள் ஏழு என்று சொல்வார்கள். இவை தவிர நவீன கால அதிசயங்கள் பல உண்டு. இவையுள் பெரும்பாலன ஆசியாவில் இருக்கின்றன. சீனுவின் பெருஞ்சுவர் என்ன, எகிப்தின் பிரமிட் கோபுரங்கள் என்ன, பாபிலோனியாவின் தொங்கும் தோட்டங்களென்ன, சின்ன ஆசியாவிலுள்ள மௌஸோலியம் என்ன, பாரோஸ் தீவிலுள்ள—அலெக்ஸாந்திரியா துறைமுகத்தைச் சேர்ந்த—கலங்கரை விளக்கமென்ன, இவையெல்லாம் ஆசியாவில், அதன் புராதனப் பெருமைக்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன. இவை தவிர, இந்தியாவில் ஆக்ராவிலுள்ள தாஜ்மகால், பிஜப்பூரிலுள்ள கோல்கும்பஸ், சுக்கூரில் உள்ள லாயிட் அணைக்கட்டு, சீனுவில் இரண்டாயிரம் பண்டிதர்கள் சேர்ந்து மூன்று வருஷ காலம் இடைவிடாது உழைத்துத் தயாரித்த சீனப் பேரகராதி, கி. மு. 486-ஆம் வருஷத்தில் தொடங்கித் தோண்டப்பெற்ற 1,200 மைல் நீளமுள்ள பெருவாய்க்கால், யுன்னுன் மாகாணத்திலுள்ள குன்மிங்

நகரத்தில் ஆரம்பித்து பர்மாவிலுள்ள லாஷியோ நகரத்தில் வந்து முடிகின்ற 772 மைல் நீளமுள்ள பர்மா ரோட், நான்கிங் நகரத்திலுள்ள பீங்கான் கோபுரம், துருக்கியில் இஸ்த்தாம்பூலிலுள்ள ஸோபியா மசூதி ஆகிய இவையும், இவைபோன்ற இன்னும் பல நவீன அதிசயங்களும் ஆசியாவில் இருக்கின்றன.

ஆசியாவின் பழமை வெகு ஆழமானது. ஸ்தூலமாகவோ மேற்போக்காகவோ பார்த்தால் அதன் ஆழம் எளிதிலே புலப்படாது. சாதாரணமாக ஐரோப்பிய சரித்திராசிரியர்கள், சிறப்பாக இந்திய இளைஞர்களின் உபயோகத்திற்கென்று எழுதும் பிரிட்டிஷ் சரித்திராசிரியர்கள், உலகத்து முக்கியமான ராஜ்யங்களின் உன்னதமான காலம், கிறிஸ்து சகாப்தத்திலிருந்துதான் தொடங்குகிறதென்ற தோரணையில் எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள். இப்படி இவர்கள் எழுதுவதற்கும் பேசுவதற்கும் எவ்வித நோக்கத்தையும் நாம் கற்பிக்க விரும்பவில்லை. இவர்களுடைய சரித்திர திருஷ்டி, கிரீஸ், ரோம் இவற்றிற்கு அப்பாற் செல்லாததுதான் இதற்குக் காரணம். இன்றைய ஐரோப்பிய நாகரிகத்தின் மேலான அமிசங்கள் பலவும் கிரீஸிலிருந்தும் ரோமாபுரியிலிருந்தும் கிடைத்த நன்கொடைகளே என்பது இவர்கள் நம்பிக்கை. ஆனால் உண்மையில் கிரேக்க நாகரிகமும் ரோம நாகரிகமும் ஆசிய நாகரிகங்களின் அடுத்த சந்ததிகளே. "கிரேக்க ரோம கலாசாரப் பண்புகள் பலவும், ஆசிய நாகரிகங்களைப் பின்னணியாகவும் அடிப்படையாகவும் கொண்டிருக்கின்றன" என்கிறான் வில் ட்யூரண்ட்[1] என்னும் அமெரிக்க அறிஞன்.

கிறிஸ்து நாதர் பிறப்பதற்கு ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னரேயே ஆசியாவில் அநேக சாம்ராஜ்யங்கள் தங்கமான வாழ்வு நடத்திக் கொண்டு வந்திருக்கின்றன. பார்க்கப் போனால், கிறிஸ்து பிறப்பதற்கு ஒரு

1 Will Durant.

சில நூற்றுண்டுகளுக்கு முன்னரிருந்தே இந்த ஆசிய சாம்ராஜ்யங்களின் பிற்பகல் வாழ்க்கை தொடங்கிவிட்டதென்று சொல்லவேண்டியிருக்கிறது. எகிப்திய சாம்ராஜ்யத்தின் உன்னத வாழ்வு, கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முந்தியே—சரியாக கி. மு. 1050-ஆம் வருஷத்திலிருந்து — மங்கத் தொடங்கிவிட்டது. பாபிலோனிய ஏகாதிபத்தியத்தின் அஸ்தமன வாழ்வு, இரண்டாவது நெபுகாட்நெஸ்ஸார்[1] மன்னனிலிருந்து—கி. மு. 561-ஆம் வருஷத்திலிருந்து—ஆரம்பித்துவிட்டது. அஸ்ஸிரியா ராஜ்யம் கி மு. 605-ஆம் வருஷத்திலேயே இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. யூத சாம்ராஜ்யம், கி. மு. 937-ஆம் வருஷத்திலிருந்து சறுக்க ஆரம்பித்து; பாபிலோனிய மன்னனை இரண்டாவது நெபுகாட்நெஸ்ஸார், கி. மு. 586-ஆம் வருஷம் ஜெருசலேம் நகரத்தை ஆக்கிரமித்துக் கொண்டதோடு அழிந்து போய்விட்டது. பாரசீக ஏகாதிபத்தியம் மகா அலெக்ஸாந்தரின் படையெடுப்புக்கு முன்னமேயே—கி மு. 446-ஆம் வருஷத்திலிருந்தே — நிலை குலைந்து போயிருந்தது. இதனல் தான் மகா அலெக்ஸாந்தர் அதனைச் சுலபமாக ஆக்கிரமித்துக்கொண்டான். சீன சாம்ராஜ்யம் கி. மு. 600-ஆம் வருஷத்திலேயே சுக்கு நூருகச் சிதறிப் போய்விட்டது. சுக்கு நூருக என்று சொல்வது மிகைபடச் சொல்வதில்லை. ஆ-பாங் என்ற ஓர் அரசன், தன்னுடைய படையெடுப்புகளில் துணை செய்த முக்கியஸ்தர்களைச் சன்மானிக்கிறவகையில் தன்னுடைய ராஜ்யத்தின் பெரும்பகுதியை 1,773 பிரிவுகளாகப் பிரித்துக் கொடுத்தான். இவர்களத்தனை பேரும் பின்னர் அந்த மன்னனின் ஆதிக்கத்திற்கு விரோதிகளானூர்கள். சீனு முழுவதுமே சீர் குலைந்து போயிருந்தது. இந்த நிலையில்தான் லாவோத்ஸே, கன்பூஷியஸ் ஆகிய ஞானிகள் தோன்றினூர்கள். கி. மு. 327-ஆம் வருஷம் மகா அலெக்ஸாந்தர் இந்தியாவின்மீது படையெடுத்து

---

1 Nebuchadnezzar II கி. மு. 605 561.

வந்தபோழ்து, அதன்—இந்தியாவின்—புகழ்ச் சூரியன் சாய ஆரம்பித்துவிட்டிருந்தான். "அலெக்ஸாந்தர், காலங் கழித்தே இந்தியாவுக்கு வந்தான். அவன் வருவதற்கு வெகு காலத்திற்கு முந்தியே, இந்திய சமுதாயமானது, தனது அகநோக்கில் தனிநிலைமை யடைந்திருந்தது. அதன் வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள் யாவும், வெளியுலகத்தின் வாழ்க்கை நியதிக்குப் பொருத்தமற்றதாயிருந்தது" என்கிறான் ஓர் ஆசிரியன்.

இவை தவிர, ஹிட்டைட்டிஸ் என்ன, பொனீஷியா என்ன, சுமேர் என்ன, அக்காட் என்ன,[1] இப்படிப்பட்ட சிறிய ராஜ்யங்கள், உச்ச நிலையிலே அநேக வருஷ காலம் இருந்துவிட்டு, கிறிஸ்துவ சகத்திற்கு முன்னரேயே வீழ்ந்து போயின. இங்ஙனம் ஆசிய சாம்ராஜ்யங்கள் பலவும், கிறிஸ்துவ சகத்திற்கு முந்தியே பூரண வாழ்க்கையையும் வாழ்ந்துவிட்டிருந்தன. கிறிஸ்துவ சகத் தொடக்கத்தில் இவற்றுள் இறந்தவை போக இருந்தவை, முதுமையெய்தி, அந்த முதுமைக்கு அறிகுறிகளான ஆட்டம், அசதி இவைகளோடு கூடியனவாயிருந்தன என்றே சொல்லவேண்டும்.

பழமையானவையெல்லாம் பெருமையுடையனவல்ல. உண்மை. ஆசியாவை அதன் பழமைக்காக யாரும் பாராட்ட வேண்டியதில்லை. இந்தப் பாராட்டுதலை அது யாரிடமிருந்தும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஆழமான அதன் பழமையிலிருந்து கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷங்களுக்காக அதற்கு யாரும் நன்றி செலுத்த வேண்டும். இன்று நாம் நாகரிக வசதிகளென்று எவை எவைகளை உபயோகித்துக் கொண்டிருக்கிறோமோ, நல்வாழ்க்கை நடத்துவதற்குத் துணைக் கருவிகள் என்று எவை எவைகளைக் கருதிக் கொண்டிருக்கிறோமோ, அவை யாவும் ஆசியாவின் சிருஷ்டிகள்தான். ஏன், நாகரிகத்தின் சிருஷ்டிக்களமே ஆசியாதானே?

1 Hitties, Phoenicia, Sumer, Akkad.

ஆசியா, பிற்கால சந்ததியாருக்கு, இன்றைய உலகத்தினருக்கு வழங்கியிருக்கும் பொருள்கள்தான் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வாசகர்கள் ஆவலுடையவர்களா யிருப்பார்களல்லவா? எண்ணும் எழுத்தும், இங்கியும் காகிதமும், புத்தகங்களும் புத்தகசாலைகளும், ஆரம்பப் பள்ளிக்கூடங்களும் உயர்தரக் கல்லூரிகளும், இலக்கியமும் சங்கீதமும், காவியமும் ஓவியமும், கணித சாஸ்திரமும் வான சாஸ்திரமும், திசையறி கருவியும் காலங்காட்டும் கடிகாரமும், அச்சுத் தொழிலும் தச்சுத் தொழில் முதலிய தொழில்களும், கண்ணுடியும் பீங்கானும், தேயிலைப் பானமும் மது வகைகளும், உடம்பில் அணியும் நகைகளும் பூசும் வாசனைகளும், உடுத்துகின்ற பட்டும் ஏறுகின்ற வாகனுதிகளும், விவசாயமும் வியாபாரமும், நாணயச் செலாவணியும் நோட்டுச் செலாவணியும், போக்குவரத்து வசதிகளும், தபால் வசதிகளும், சதுரங்க ஆட்டமும், குதிரைப் பந்து விளையாட்டும், ஒருவன் ஒருத்தியோடு வாழவேண்டுமென்ற நியதியும், பரம் பொருள் ஒன்று என்ற கொள்கையும், இவைபோன்ற இன்னும் பலவும் ஆசியாவிலிருந்து பிறந்தவையே. கி. மு. நாலாயிரத்திருநூறு வருஷத்திற்கு முன்னரேயே எகிப்தில், ஜனங்கள், நாள் கிழமைகளை அறிய காலண்டரை உபயோகப்படுத்தி வந்தார்கள்; முணு முணுக்காமல் அரசாங்கத்திற்கு வருமான வரி செலுத்தி வந்தார்கள். கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் அறுநூறு வருஷங்களுக்கு முன்னே அஸ்ஸிரியாவை ஆண்ட அஷுர்பாணிபால்[1] என்ற அரசன், நினேவே[2] என்ற தனது தலைநகரத்தில் பெரியதொரு புத்தகசாலை வைத்திருந்தான். இந்தியாவிலும், சீனுவிலும் இத்தகைய புத்தகசாலைகள் இதற்கு முன்னரேயே இருந்தனவென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இன்று சிவில் சட்டங்களென்றும் கிரிமினல் சட்டங்களென்றும் சொல்கிறோம். ஆனால் கிறிஸ்து சகத்திற்கு இரண்டாயிரம் வருஷங்

1 Ashurbanipal கி. மு. 668-625.

2 Nineveh.

களுக்கு முந்தியே பாபிலோனியாவில் ஆண்ட ஹாம்முராபி[1] என்ற அரசன், சிறந்ததொரு சட்டத்தை இயற்றி வைத்திருக்கிறான். இங்ஙனமே அஸ்ஸிரியாவிலும் இந்தியாவிலும் ஜன சமுதாயத்தின் ஒழுங்கிற்கும் ஒழுக்கத்திற்கும் உறுதுணையாயிருக்கப்பட்ட சட்ட திட்டங்கள் இருந்திருக்கின்றன. முதன்முதலாக உழவுக்குக் குதிரையை உபயோகித்தது ஆசியாதான்; ஆகாரத்தைச் சமைத்துச் சாப்பிடத் தொடங்கியது ஆசியாதான்; வெடிமருந்தைக் கண்டு பிடித்தது ஆசியா (சீனாவில்) தான்; பூகோள படம் தயாரித்தது ஆசியா (பாபிலோனியாவில்) தான். இவ்வளவென்ன? முதன் முதலாகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்ததுகூட ஆசியாவில் (எகிப்தில்) தான்! செங்கல் வீடுகட்டி அதிலே வாழவும், நோய்தீர மருந்து உபயோகிக்கவும், கடலிலே கப்பல் செலுத்தவும், உலகத்தினருக்குக் கற்றுக் கொடுத்தவர்கள் ஆசிய மக்களே. ஹெரோடோட்டஸ் என்பவனை 'சரித்திரத்தின் தந்தை' என்று சொல்வர் மேனாட்டார். ஆனால் அவனுக்குப் பல நூற்றாண்டுகள் முந்தியே ஆசியாவில் அறிஞர் பலர் நுணுக்கமான சரித்திரங்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். கி. மு. 555-ஆம் வருஷத்திலிருந்து 538-ஆம் வருஷம் வரை—பதினேழு வருஷ காலம்—பாபிலோனியாவை ஆண்ட நபோனிடஸ்[2] என்ற அரசன், சரித்திர ஆராய்ச்சியிலும் பூமியிலிருந்து புராதனச் சின்னங்களைத் தோண்டியெடுத்துப் பரிசோதனை செய்வதிலும் தன் ஆட்சிக்காலம் பூராவையும் கழித்தான். தனிப்பட்ட மனிதர்கள், பரஸ்பரம் ஒருவருக்கொருவர் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பது முதல், ஓர் அரசாங்கத்திற்கும் மற்றோர் அரசாங்கத்திற்கும் எத்தகைய உறவுமுறை இருக்கவேண்டும், ஒன்றுக்கொன்று எப்படி கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்பது வரையில் சகலமானவற்றிற்கும். அதாவது அறவாழ்க்கைக்கும் அரசியல் வாழ்க்

1 Hammurabi கி. மு. 2123-2081.

2 Nabonidus.

கைக்கும் ஆசியாவே வழிகாட்டியா யிருந்து வந்திருக்கிறது. உலகத்திலேயே முதன்முதலாக தீர்க்கதரிசிகள் தோன்றியதும் ஆசியாவிலேதான் கிறிஸ்துவ சகாப்தத்திற்கு இரண்டாயிரம் வருஷங்களுக்கு முந்தி இப்புவெர், நெபெர் ரோஹு[1] என்னும் பெயருடைய தீர்க்கதரிசிகள் இருவர் எகிப்தில் தோன்றி தங்கள் காலத்து அரசர்களுக்கு அறவுரைகள் வழங்கி யிருக்கிறார்கள்; தங்களுக்குப் பின்னாடி என்ன நடக்கப் போகிறதென்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புண்ணிய நாடாகிய இந்தியாவில் எத்தனையோ புண்ணியாத்மாக்கள், மகாத்மாக்கள் அவதரித்திருக்கிறார்கள் என்பதை நாம் சொல்லாமலே வாசகர்கள் தெரிந்து கொள்வார்கள். மகான்களின் உற்பத்தி ஸ்தானமல்லவோ இந்தியா? இங்ஙனம் ஆசியா எதிலும் முதன்மை வகித்து வந்திருக்கிறது.

ஒரு நாகரிகத்தின் முழுத்தன்மையையும் அறிந்து கொள்ளவேண்டுமானால், அதனைப் பல நிலைகளிலிருந்து பார்க்க வேண்டுமென்று சொல்வார்கள். இப்படிப் பல நிலைகளுக்கும் பொருந்துகிற நாகரிகந்தான் முழு நாகரிகம். அரசியல் அமைப்பு, சமுதாய ஒழுங்கு, பொருளாதார ஏற்பாடு, இலக்கிய சிருஷ்டி, கலை வளர்ச்சி, ஆத்மீக உன்னதி, இப்படி எந்த நிலையிலிருந்து பார்த்தாலும் ஆசிய நாகரிகம் முழு நாகரிகமாக இருக்கிறது.

இப்படி முழு நாகரிகமா யிருப்பதனாலேயே அதனை அறிந்துகொள்வது சிறிது சிரமசாத்தியமாக இருக்கிறது. அந்நியர்கள், அதாவது ஆசிய நாகரிகத்திற்குப் புறம்பானவர்கள், அதனைப்பற்றித் தவறாக வியாக்கியானம் செய்கிறார்களென்றால், அஃது அவர்களுடைய பக்குவமின்மையையே காட்டுகிறது. ஏனென்றால் அவர்கள், நாகரிகத்தை முழுசாகப் பாராதவர்கள்; அரை குறையாகப் பார்த்துப் பழகியவர்கள். அவர்கள் ஆசிய நாகரிகத்தை ஸ்தூலமாகத்தான் பார்க்கிறார்கள். அதில்

1 Ipuwer and Never-rohu.

சூட்சும சக்திகள் பல அடங்கியிருக்கின்றன என்பதை அவர்கள் அறியார்கள்.

ஆசியாவின் நாகரிகம் மட்டுமென்ன, அதில் ஓடுகின்ற நதிகள், ஓங்கி நிற்கும் மலைகள், வானுற வளர்ந்திருக்கும் விருட்சங்கள் ஆகிய பலவும் சூட்சும சக்தியுடையனவாகவும் சூட்சும அர்த்தமுடையனவாகவும் இருக்கின்றனவென்று கூறலாம். ஜீவநதிகளான சிந்துவும் கங்கையும், ஹோயாங்கோவும் யாங்க்ட்ஸிகியாங்கும், யூப்ரெட்டிஸூம் டைக்ரிஸூம், நைல் நதியும், பெருநிலங்களை வளம்படுத்தும் பெருந்தகையனவாக மட்டும் இல்லை; போக்குவரத்து மார்க்கங்களாக மட்டும் இல்லை; அநேக நாகரிகங்களின் சிருஷ்டி ஸ்தலங்களாகவும் இருந்திருக்கின்றன. இமயம், ஹிந்துகுஷ், சினுய், ஆல்ட்டாய் போன்ற பல மலைகள், ஆறுகளின் உற்பத்தி ஸ்தானங்களாக மட்டும் இல்லை; பல்வகை மூலப்பொருள்களின் பெட்டகமாக மட்டுமில்லை; ஒன்றான பரம்பொருளோடு ஒன்றுபட்டிருக்கிற மகா புருஷர்களின் தவ பூமிகளாகவும் உபதேச மேடைகளாகவும் இருந்திருக்கின்றன. அரசும் ஆலும், கமுகும் தெங்கும் போன்ற உயர்விருட்சங்கள், அண்டினோர்க்கு உண்டிதரும் கலயங்களாக மட்டும் இல்லை; வெப்பத்தைத் தடுத்துத் தட்பத்தை அளிக்கும் ஸ்தானங்களாக மட்டும் இல்லை; ஞான ஒளிதரும் மோன விளக்குகளாயிருந்திருக்கின்றன.

உலகத்தின் சகல மதங்களுக்கும் பிறப்பிடமாயுள்ளது ஆசியா. இந்த மதங்களின் மூல புருஷர்களத்தனை பேரும் அவதரித்ததும் மதப் பிரசாரஞ் செய்ததும் ஆசியாவிலேதான். உலகத்தின் மூலை முடுக்குகளிலேயுள்ள எந்த மதத்தினரும், தங்கள் மன மாசுகளைக் கழுவிக் கொள்ள ஆசியாவுக்குத்தான் யாத்திரையாக வருகிறார்கள். ஆசிய மண்ணின் ஒவ்வொரு பொடியும் புனிதமானது. "பொன்னையும் வெள்ளியையும் காட்டிலும் ஆசியாவின் தூசி மண் எனக்குச் சிரேஷ்டமானது"

என்கிறார் கேசவ சந்திர சேனர் என்னும் வங்க நாட்டறிஞர்.[1]

சகல மதங்களுக்கும் பிறப்பிடமாயிருப்பது மட்டும் ஆசியாவின் விசேஷமல்ல; அந்தச் சகல மதங்களையும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரிகள் போல் வாழும்படி செய்திருக்கிறதே அதுதான் ஆசியாவின் விசேஷம். கிளைகள் பலவாறாலும் அடிமரம் ஒன்றாயிருப்பதுபோல், மதங்கள் பலவாறாலும், அவை புறப்பட்டுச் சென்றிருக்கிற திசைகள் வேறுவேறாலும் அவற்றின் அடிப்படை ஒன்றுதான் என்ற உண்மையை ஆசியா அங்கீகரித்துக் கொண்டு அதை அனுஷ்டித்தும் வந்திருக்கிறது.

1 இவர் காலம்: 1838-1884.

# 2. ஆசியாவின் தகுதி

உலகத்தைச் சமாதானக் கோயிலுக்கு அழைத்துச் செல்லக் கூடியவர் யார்? இதனைக் கடமையாகக் கருதிச் செய்யக் கூடியவர் யார்? யாருக்கு இந்தத் தகுதி உண்டு? ஆசிய மாதா தான்; அவள் ஒருத்திக்குத் தான் இந்தத் தகுதி உண்டு மற்றத் தேசத் தாய்மார்களைக் காட்டிலும் அவள் மூத்தவள், பழம்பெருந்தேவி என்பதற்காக அவளுக்கு இந்தத் தகுதி உண்டு என்று நாம் சொல்லவில்லை. அவளுடைய பூர்விகத்தை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்பதற்காக அவளுடைய பழமையைப் பற்றிச் சென்ற அத்தியாயத்தில் சிறிது கூறினோமே தவிர அவளுடைய தகுதியை நிலை நாட்டுவதற்காகவல்ல. அவளுடைய தகுதி, அவளுடைய சிருஷ்டி சக்தியிலே, பரநல எண்ணத்திலே, வாழ்க்கையைப் பிரித்துப் பாராமல் தொகுத்துப் பார்க்கின்ற பழக்கத்திலே, இவை போன்ற இன்னும் பல தன்மைகளிலே இருக்கிறது. மற்றும் அநாதிகாலந் தொட்டு ஆசியாதான், உலகத்திலே நிலையான அமைதி நிலவ வேண்டுமென்று கோஷித்துக்கொண்டு வந்திருக்கிறது; கோரிக்கொண்டு வந்திருக்கிறது. சாந்தி வாசகம் ஆசியாவின் சொந்த வாசகம். அமைதி கோரும் உரிமை அதற்குப் பரம்பரையாகவே இருக்கிறது

ஆனால் ஆசியா கோருகின்ற அமைதி, ஜீவனற்ற அமைதியல்ல; ஜீவனுள்ள அமைதி. லண்டன் மாநகரத்திலுள்ள வெஸ்ட்மினிஸ்ட்டர் மாதா கோயிலை,[1] மௌனக் கோயிலென்றும் அமைதிக் கோயிலென்றும் சொல்வார்கள். ஆனால் அங்குக் குடி கொண்டிருக்கும் மௌனம், மரணத்தினுடைய மௌனம்; அமைதி, சவக்குழியி

1 West minister Abbey.

னுடைய அமைதி. இங்கிலாந்தின் இறந்து போன அரசர்கள், தங்களுடைய பகைமைகளையெல்லாம் மறந்துவிட்டு, மௌனமாக, அமைதியாக, சகோதரர்கள்போல் ஒருவர் பக்கத்தில் ஒருவராக அங்குப் படுத்திருக்கிறார்கள். அவர்களுடைய சகோதர உறவு பிதிரு லோகத்திற்கு ஏற்றதே தவிர பூலோகத்திற்குப் பொருந்தியதல்ல

ஆசியா, இத்தகைய மௌனத்தை, அமைதியை, சகோதர உறவைக் கோரவில்லை; நாடவுமில்லை. அது ஞான நிறைவினின்றெழும் மௌனத்தை, செயல் வேகத்தினின்று பிறக்கும் அமைதியை, ஒரு தாய் வயிற்றுப் பிறந்த சகோதர உறவைக் கோருகிறது; நாடுகிறது. "ஆசியா, எதனைத் தன்னுடைய பொதுவான லட்சியமாகக் கொண்டிருக்கிறதோ அஃது, அந்த அமைதி, ஒன்றுமில்லாமையினால் ஏற்படுகின்ற அமைதியல்ல; போர்த்தன்மையும் சிருஷ்டி சக்தியுமுடைய மனித ஆத்மாவானது மேனிலைக்குச் செல்கின்றபோது விளைகின்ற அமைதி" என்பது ஒரு வாக்கு.

நாகரிகம் பிறந்தது ஆசியாவிலேதான். மனிதன் மனிதத் தன்மையில் வளர்ச்சியடைந்தது ஆசியாவில்தான். முடிவில்லாத சத்தியத்தின் முடிவைக் காண வேண்டுமென்று மனிதன் முயற்சி எடுத்துக்கொண்டது ஆசியாவில்தான். அப்படியே தர்மத்தினுடைய அஸ்திவாரத்தின் அடியிலே சென்று பார்க்க மனிதன் விழைந்ததும் ஆசியாவில்தான். ஆத்மா அமரத்தன்மையுடையது, அது சூரியனைப் போல் எல்லோரிடத்திலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது என்ற பேருண்மையை மனிதன் தெரிந்து கொண்டதும், தெரிவித்துக் கொண்டதும் ஆசியாவில்தான். ஒரு மேனாட்டு ஆசிரியன் கூறுகிறான்:-
"ஆசியாவின் புராதன நாகரிகங்கள்தான், அதாவது எகிப்திய, பாபிலோனிய, ஹிட்டைட்டிஸ், அஸ்ஸிரிய, பர்ஷிய, இந்திய, சீன, ஹீப்ரு நாகரிகங்கள்தான், சரித்திரத்தில் புகக்கூடிய அளவு பலமான ஒரு கலாசாரத்தை,

ஒரு பண்பாட்டை முதன்முதலாக நிர்மாணம் செய்தன. எழுத்துக்களையும் எழுதுவதையும் முதன் முதலாகக் கொண்டிருந்தவை அவைதான். இதனால் பிற்கால சந்ததிகளுக்குப் பயன்படக்கூடிய வகையில் தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்துவிட்டுப் போதல் அவைகளுக்குச் சாத்தியமாயிருந்தது. லௌகிகபரமான ஒரு கலாசாரத்தை அவைதான் முதன் முதலாக அபிவிருத்தி செய்தன. இதன் விளைவாக, சிந்தனை செய்வதற்கும் கலை வளர்ச்சிக்கும் இன்றியமையாது வேண்டப்படுகின்ற ஓய்வு அவைகளுக்குக் கிடைத்தது. அவைகளிடத்தில் — அந்த ஆசிய நாகரிகங்களிடத்தில் — தேசிய வாழ்வும் சர்வதேசீய வாழ்வும் செழுமையுற்றிருந்தன. இதனால் அந்த நாகரிகங்களின் மக்களுக்கு, தங்களைப் பற்றியும், தங்களுக்கும் மற்றச் சகோதர மக்களுக்கும் இருக்க வேண்டிய சம்பந்தங்களைப் பற்றியும், தங்கள் சமூக அமைப்பைப் பற்றியும் தீவிரமாகச் சிந்தனை செய்வது சாத்தியமாயிருந்தது.''

யார் சிருஷ்டிக்கிறார்களோ அவர்களால்தான் அந்தச் சிருஷ்டியைக் காப்பாற்றமுடியும். சிருஷ்டியினுடைய மகத்துவம், சிருஷ்டியின்போது உண்டாகிற வேதனை, அவைகளையெல்லாம் அவர்கள் நன்கு அறிவார்களாதலினால், அவர்களால்தான் அந்தப் பொறுப்பை உணரமுடியும். பொறுப்பை உணருகிறவர்கள்தான் கடமையை ஒழுங்காகச் செய்துகொண்டு போவார்கள். ஆகவே இன்றைய நாகரிகத்தை, அரசியல் சூழ்ச்சிகளினால் கறைப்படாதிருக்கும்படிக்கும் அணுச் சக்தியினால் அழிந்துபடாமலிருக்கும்படிக்கும் காப்பாற்ற வேண்டியது ஆசியாவின் கடமையாகும்.

உலகத்திலுள்ள எல்லாப் பிரதேசங்களையும் விட்டுவிட்டு ஆசியாவில் நாகரிகம் பிறப்பானேன் என்று வாசகர்கள் கேட்கலாம். அதனுடைய இயற்கை அமைப்புதான் இதற்குக் காரணம். நாகரிகம் பிறப்பதற்கு ஏற்ற

விதமாக ஆசியாவின் இயற்கைநிலை இருக்கிறது. எப்படி யென்றால், ஆசியாவின் பெரும்பாகம் சம சீதோஷ்ணப் பிரதேசம். பருவ மழைக்குக் குறைவில்லை. செழுமை யான மண்ணும், நைல், யூப்ரெட்டீஸ், டைக்ரிஸ், கங்கை, ஹோயாங்கோ ஆகிய இப்படிப்பட்ட நதிகளும், நிலவளத் திற்குத் துணை புரிவனவாயிருக்கின்றன. இவையெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறபோது, உணவுப் பொருள்கள் நிறைய விளைவதற்குக் கேட்பானேன்? உலகமனைத்திற் கும் உணவு வழங்கக்கூடிய தானியக் களஞ்சியமாக ஆசியா இருப்பதற்குக் காரணம் இதுதான். சமீபத்தில் எடுக்கப்பெற்ற புள்ளி விவரங்களைப் பரிசீலனை செய்து பார்த்தால் இது நன்கு தெரியவரும்.

இங்ஙனம் உணவுப் பொருள்கள் நிறைய விளைவதற்கு இயற்கை பெரிய துணையாயிருப்பதனால், ஜனங்கள், தங்கள் அன்றாட வாழ்க்கைக்கு அதிகமான உழைப்பை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லாதவர்களாகிறார் கள். இவர்களுக்கு நிறைய ஓய்வு கிடைக்கிறது. இந்த ஓய்வு, அறிவை விருத்தி செய்து கொள்வதில் உபயோக மாகிறது. நாகரிகம் பிறக்கிறது.

கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் நானூற்று ஐம்பது வருஷங்களுக்கு முந்தி எகிப்தியர்களுடைய தினசரி வாழ்க்கை, எப்படி அதிக உழைப்பை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் நடைபெற்று வந்தது என்ப தைப்பற்றி ஹெரோடோட்டஸ் என்ற கிரேக்க சரித்தி ராசிரியன் பின்வருமாறு வருணிக்கிறான்:—

"மற்றவர்களைக் காட்டிலும் அவர்கள்—எகிப்தியர் கள்—குறைவாக உழைத்துப் !பூமியின் பலன்களை அனு பவிக்கிறார்கள். பயிர் விளைவுக்கு முன்னடி செய்யப்பட வேண்டிய உழுதல், வெட்டுதல், கொத்துதல் முதலிய எந்தவிதமான சிரமங்களும் அவர்களுக்கு இல்லை. (நைல்) நதி, தானாகப் பிரவாகமெடுத்து ஓடிவருகிறது; நிலங்

களில் பாய்கிறது. பிரவாகம் குறைந்தவுடன், அவரவர்களும் தங்கள் நிலங்களில் தானியங்களைத் தெளிக்கிறார்கள். தெளித்து விட்டுப் பன்றிகளை ஓட்டுகிறார்கள். அவைகள் மிதிப்பதனால் விதைகள் பூமியில் நன்றாக அழுந்திவிடுகின்றன. அறுவடை காலம் வரை காத்திருந்து பின்னர் அறுவடை செய்து கொண்டுவிடுகிறார்கள்.

ஆசிய நாகரிகங்கள் பலவும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டவை. விவசாய நாகரிகங்கள் என்று தான் இவைகளைச் சொல்வார்கள் ஆதிகாலத்திலிருந்து ஜனங்களுடைய முக்கிய ஜீவனோபாயம் விவசாயமாகவே இருந்துவந்திருக்கிறது தங்களுடைய நித்திய வாழ்க்கை ஒழுங்காக நடைபெற்றுக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காகவே, ஜனங்கள், விவசாயத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற வெயில், மழை, காற்று இவைகளைத் தெய்வங்களாக வழிபட்டு வந்தார்கள்; கால் நடைகளைப் போற்றி வந்தார்கள். ஆசியாவின் எல்லாநாட்டு மக்களும் பசுவைப் போற்றிவந்திருப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது அவர்கள் தினசரி உபயோகித்த பழமொழிகள், கடவுளை நோக்கிப் பாடிய தோத்திரப் பாடல்கள், கற்பனை உலகத்திலிருந்து எழுந்த கவிதைகள் ஆகிய யாவும் விவசாயத்தையே மையமாகக் கொண்டிருந்தன. சுமார் நாலாயிரம் வருஷங்களுக்கு முந்திய சீனப் பாடல்களில் இரண்டைக் கேளுங்கள் :—

> "அதோ அந்தக் களைகளை அப்புறப்படுத்துங்கள்;
> இதோ இந்த மரத்தின் அடிக்கட்டையைத் தோண்டி எடுங்கள் ;
>
> உழு படையினால் மண் கட்டிகளை உடையுங்கள்;
> மண்வெட்டிகளை எடுத்துக்கொண்டு ஆயிரக் கணக்கில் வாருங்கள் ;
>
> கணவாய்களில் இறங்குவோம் ; மலைகள் மீது ஏறுவோம்.................."

* * *

"மேகங்கள் சுருண்டு சுருண்டு செல்கின்றன பாருங்கள் ;

மெல்லிய மழைத்துளிகள் எவ்வளவு தெம்பை உண்டுபண்ணுகின்றன ?

மழை, முதலில் பொது நிலங்கள் மீது பொழியட்டும் ;

பின்னர் நமது நிலங்கள்மீது விழட்டும் ;

அதோ அந்தத் தானியக் கதிர்களை அறுக்க வேண்டாம் ;

இதோ இந்தத் தானியக் கட்டுகளை அப்படியே விட்டுவிடுங்கள் ;

இங்கே சில தானியங்களை வையுங்கள், விதவைகளின் உபயோகத்திற்காக ;

அங்கே சில மூலிகைகளை விட்டு வையுங்கள் அவர்கள் நோய் தீர்வதற்காக...................."

திருக்குறள் ஆசிரியர், கடவுள் வாழ்த்துக்கு அடுத்தபடியாக வான்சிறப்பையே கூறுகிறார் அறஞ்செய்வதற்கும், பொருள் சேர்ப்பதற்கும், இன்பம் துய்ப்பதற்கும் ஏதுவாயிருப்பது மழையே. இந்த மழை, தானே உணவாகவும் உணவுப் பொருள்கள் உண்டாவதற்குக் காரணமாகவும் இருக்கிறது. இதனாலேயே மழைக்குச் சிறப்புக் கொடுத்திருக்கிறார் வள்ளுவனார். மழைக்குச் சிறப்புக் கொடுத்தலாவது என்ன? விவசாயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திச் சொன்னதேயாகும். மற்றும், உழுதுண்டு வாழ்வதைத்தான் வாழ்வு என்று சொல்கிறார் வள்ளுவர். ஏனென்றால் அந்த வாழ்க்கையில் இனிமை இருக்கிறது; அமைதி இருக்கிறது; நிறைவு இருக்கிறது. நிறைவுடையதுதான் வாழ்க்கை ; நல்வாழ்க்கை. எனவே நல்வாழ்க்கை நடத்துவதற்கு மூலமாயிருப்பது விவசாயம் "சீரைத் தேடின் ஏரைத் தேடு" என்பது நமது முன்னோர் வாசகம்.

ஆசிய மக்கள் நிறைவுடைய வாழ்க்கையை நடத்தினார்களென்று சொன்னால், அவர்கள் எவ்விதக் குறையும் இல்லாமலிருந்தார்களென்பதே அர்த்தம். குறை இருந்தால், அந்தக் குறையை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டி உழைப்பதும் போராடுவதும் அவசியமாகும். ஆனால் ஆசிய மக்களுக்குக் காலம் நெடுகிலும் இந்த உழைப்பிற்கும் போராட்டத்திற்கும் அவசியமே இல்லாமற் போய்விட்டது. இயற்கையோடு போராடி தங்கள் வாழ்க்கையை நடத்தவேண்டிய நிலைமை அவர்களுக்கு எப்பொழுதும் ஏற்பட்டதே கிடையாது. எந்த ஒரு தன்மையும், அவசியம் ஏற்படுகிறபோது தான் வெளிப்படுகிறது. அவசியம் இல்லாதபோது அந்தத் தன்மையும் இருந்த இடம் தெரியாமல் ஒடுங்கிப் போய்விடுகிறது. ஆசிய மக்களுக்கு, பிழைப்பு நிமித்தம் போராடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை; அமைதியாக வாழ்க்கையை நடத்திக்கொண்டு செல்வதற்கான அனுகூலங்கள் பலவும் அவர்களுக்கு இருந்தன. இதனால் அவர்களிடத்தில் போர்த் தன்மையே இல்லாமற் போய்விட்டது. அதாவது மற்றவர்களைக் கஷ்டப்படுத்தித் தாங்கள் சுகம்பெற வேண்டிய அவசியமே அவர்களுக்கு ஏற்படவில்லை. தீய சக்திகளை அழித்து நல்ல சக்திகளைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் போராடி இருக்கிறார்கள்; மற்றவர்கள் வாழவேண்டுமென்பதற்காகத் தாங்கள் அழிந்து போகிற வரை போராடியிருக்கிறார்கள். ஆனால், தங்களுக்காக, தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்வதற்காக, தங்கள் ஆசையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக, அவர்கள் எந்தக் காலத்திலும் போராடியதே இல்லை.

ஆசிய மக்கள், போரிடும் சுபாவமில்லாதவர்கள், ஐரோப்பிய மக்களைக் காட்டிலும் அடங்கின சுபாவமுடையவர்கள் என்று கிறிஸ்து பிறப்பதற்கு நானூறு வருஷங்களுக்கு முந்தியே அரிஸ்ட்டாட்டல்[1] என்ற கிரேக்க அறிஞன் சொல்லியிருக்கிறான். "பொதுவாக,

---

1 Aristotle கி. மு. 384-322.

சீதளப் பிரதேசங்களிலுள்ள ஜனங்கள், சிறப்பாக ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் எதற்கும் அஞ்சாதவர்களாக இருக்கிறார்கள்; ஆனால் திறமையிலும் அறிவிலும் குறைவுடையவர்களா யிருக்கிறார்கள். இதனால் இவர்கள் அநேகமாக சுதந்திர முடையவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அரசியலில் வளர்ச்சியடையாதவர்களாகவும் மற்றவர்களை ஆளுகின்ற திறமை இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். ஆசிய மக்களுக்குத் திறமையும் அறிவும் இருக்கின்றன. ஆனால் அஞ்சாத் தன்மையில் குறைவுடையவர்களா யிருக்கிறார்கள். இதனால் தான் இவர்கள் மற்றவர்களுக்கு ஆட்பட்டிருக்கும் பிரஜைகளாகவும், அடிமைகளாகவும் இருக்கிறார்கள்."[1] அரிஸ்ட்டாட்டலுடைய இந்த அபிப்பிராயத்தை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை; ஏற்றுக் கொள்ளவும் முடியாது. ஆசிய மக்கள் எப்பொழுதுமே அமைதியான வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்கள், சமாதானப் பிரியர்களாயிருந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே அரிஸ்ட்டாட்டலினுடைய இந்த அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டினோம்.

ஓய்வும் அமைதியும் நிறைந்த இடத்தில் கலைகள் செழித்து வளர்வதற்குக் கேட்பானேன்? ஜனங்களுடைய வாழ்க்கையே கலை மயமாகிவிட்டது. கலை மயமாகி விட்டது என்றால் என்ன அர்த்தம்? வாழ்க்கையானது அழகாகவும் இனிமையாகவும் இன்பகரமாகவும் நடைபெற்றது என்பதுதான். இன்றுகூட பர்மிய மக்களின் அன்றட வாழ்க்கையைக் கூர்ந்து கவனிப்போமானால், அவர்களுடைய நடை, உடை, பாவனைகள் யாவும் கலைமயமாக விளங்குவதைக் காணலாம். பொதுவாக ஆசிய மக்கள் அனைவருமே, சங்கீதம், சிற்பம், நாட்டியம் ஆகிய நுண் கலைகளில் பூரணமாக ஈடுபடுகிறவர்கள். உதாரணமாக சங்கீதத்திலே சீன மக்களுக்கிருக்கும் ஈடுபாட்டைப்பற்றி

1 Aristotle கி. மு. 384-322.

ஒரு சீன அறிஞன் பின்வருமாறு கூறுகிறான் :—"சீனர்கள் சங்கீதத்திற்குப் பிறக்காவிட்டாலும், சங்கீதத்தினால் போஷிக்கப்படுகிறவர்கள்; சங்கீதத்தை மணந்து கொள்கிறவர்கள்; சங்கீதத்திலேயே புதைக்கப்படுகிறவர்கள். அவர்கள் சங்கீதத்திற்குத் தொழுகிறார்கள்; சங்கீதத்திற்கு வேலை செய்கிறார்கள்; சங்கீதத்திற்கு விற்கிறார்கள்; சங்கீதத்திற்குப் படிக்கவும் செய்கிறார்கள்."

சங்கீதம், சிற்பம் ஆகிய மேற்சொன்ன நுண்கலைகளில் யார் அதிகமான ஈடுபாடுடையவர்களாயிருக்கிறார்களோ அவர்கள் உயரிய பண்பாடுகள் பலவும் நிறைந்தவர்களாயிருப்பார்களென்பது நிச்சயம். அவர்களுடைய அறிவு, உலகத்தோடு ஒட்ட ஒழுகும். அவர்களுடைய இதயம், உலகனைத்தையும் கட்டித் தழுவும். அவர்களுக்கு, தான் வேறு, தன்னைத் தவிர்த்த மற்றவர் வேறு என்ற வேற்றுமையே கிடையாது. அவர்கள், இன்னா செய்தார்க்கும் இனியவே செய்வர்; மற்றவர்கள் இன்புறக் கண்டு தாங்கள் இன்புறுவர்.

இந்தப் பண்பாடு எங்கிருந்து பிறந்தது? மண்ணிலிருந்து. எப்படி நாகரிகம் என்று சொன்னால் அது நகரத்தை யொட்டியது என்ற கருத்து நமக்கு ஏற்படுகிறதோ அதுபோல பண்பாடு என்று சொன்னால் அது மண்ணை யொட்டியது என்ற எண்ணமே நமக்கு உண்டாகிறது. மண்ணிலே உழைக்கிறவர்கள்தான், மண்ணினால் பிழைக்கிறவர்கள்தான், உண்மையான வாழ்க்கையை நடத்துகிறவர்கள். உழைப்பிலே இன்பங் காண்பவர்கள் யாரோ அவர்கள் வாழ்க்கையின் இனிமையை நுகரும் ஆற்றல் பெற்றவர்கள். அவர்கள், பிறர் பொருளின்மீது ஆசைப்படமாட்டார்கள்; மற்றவர்களை அடிமைகொள்ள மாட்டார்கள். நல்குரவு என்பது அவர்களிடத்தில் நெருங்காது. தன் மதிப்பு உணர்ச்சி அவர்களிடத்தில் தலைசிறந்து நிற்கும். அவர்கள் எப்படி நிலத்தை ஆழமாக உழுது அதிலிருந்து நல்ல பலனைக் காண்கிறார்களோ அது

போல் வாழ்க்கையை ஆழமாகப் பார்த்து அதன் நிறைவு களை யுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்க்கையென்பது, சில மணி நேரம் எரிந்துவிட்டு அணைந்துபோகிற விளக்கல்ல; அணையா விளக்கு; அமர ஜோதி. இதனால் நித்தியமாயுள்ளவை எவையோ, அவற்றிலேயே அவர்கள் அதிகமாக ஈடுபடுகிறார்கள்.

இந்தப் பண்பாடு என்பது என்ன? இங்ஙனமே நாகரிகம் என்றால் என்ன? இவ்விரண்டினையும் பற்றி இங்குச் சிறிது வியாக்கியானம் செய்து காட்ட விரும்புகிறோம். இவ்விரண்டும் ஒன்றே என்பது நமது கருத்து. வேண்டுமானால் முன்னதை மொட்டு என்றும் பின்னதை மலர் என்றும் கூறலாம். "நாகரிகமென்பது குடியானவர் குடிசையில் ஆரம்பிக்கிறது; ஆனால், அது நகரங்களில் மலர்கிறது" என்கிறான் ஓர் அமெரிக்க அறிஞன். அக வாழ்க்கையின் நிறைவு பண்பாடு என்றும், புறவாழ்க்கையின் நிறைவு நாகரிகம் என்றும் சிலர் பிரித்துக் கூறுவர். இதில் தவறொன்றுமில்லை. வாழ்க்கையைக் கூறு கூறாகப் பகுத்துப் பார்ப்போருக்கு இது சரிதான். ஆனால் வாழ்க்கையை மொத்தமாகப் பார்ப்போருக்கு இரண்டும் — பண்பாடும் நாகரிகமும் — ஒன்றாகவே தெரியும். அக வாழ்க்கையின் நிறைவுதானே புற வாழ்க்கையின் நிறைவு? ஒன்றில் குறைவு இருந்து மற்றொன்று நிறைவுடையதாயிருந்தால் அந்த வாழ்க்கை எப்படி உண்மையான வாழ்க்கையாகும்? பூரண வாழ்க்கையாகும்?

எகிப்திலுள்ள பிரமிட் கோபுரங்களைப் பார்த்து, இவை, எகிப்தின் நாகரிகத்தைக் காட்டுகின்றன என்று சொல்கிறோம். சீனர்கள் மனிதத் தன்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறவர்கள்; அவர்களோடு எந்த விவகாரம் நடத்தினாலும் அவர்களுடைய மனிதத் தன்மைக்குப் பங்கம் வராமல் நடத்தவேண்டும். இதனைச் சீனர்களுடைய பண்பாடு என்று சொல்கிறோம். பர்மியர் போன்ற சில ஜாதியார் உடம்பெல்லாம் பச்சை குத்திக் கொள்

கிறார்கள். இதனை அவர்களுடைய நாகரிகம் என்கிறோம். திபேத்தில் ஒரு ஸ்திரீ பல புருஷர்களை விவாகம் செய்து கொள்ளலாமென்ற வழக்கம் இருக்கிறது. இஃது அவர்களுடைய பண்பாடு என்று கூறுகிறோம்.

அப்படியானால் பண்பாடு, நாகரிகம் என்ற இரண்டும் எதைக் குறிக்கின்றன? பொருளையா, சுபாவத்தையா, பழக்க வழக்கத்தையா, எதைக் குறிக்கின்றன என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு அறிஞர் பலரும் அவரவர்களுடைய புத்திக்கும் யுக்திக்கும் தகுந்தபடி பதில் சொல்லிக்கொண்டு போகிறார்கள். ஒரு ஜாதியாருடைய சிருஷ்டி சக்தியில்தான் அவர்களுடைய நாகரிகம் இருக்கிறதென்பர் சிலர்; ஒரு சமூகத்தார் அன்றாட வாழ்க்கையை எப்படி நடத்துகிறார்களென்பதைப் பொறுத்துத்தான் அவர்களுடைய பண்பாட்டை நிர்ணயிக்க வேண்டுமென்பர் வேறு சிலர். இந்தப் பலவித வியாக்கியானங்களில் நாம் இப்பொழுது பிரவேசிக்க வேண்டியதில்லை. பண்பாடு என்பதும் நாகரிகம் என்பதும் எந்த அடிப்படையின்மீது நிலைபெற்றிருக்கின்றன என்பதை மட்டும் இங்குச் சுருக்கமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறோம்.

உலகத்திலுள்ள பொருள்களை மூன்று வகையாகப் பிரிப்பர் அறிஞர். சில பொருள்கள் இருக்கின்றன. அவற்றை அவைகளின் உபயோகத்திற்காக வைத்துக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக தச்சன் உளியைத் துக் கொண்டிருக்கிறான். எதற்காக? அதன் அழகுக்காகவா? இல்லை; உபயோகத்திற்காக. உபயோகமில்லாவிட்டால் அதனை எறிந்துவிடத் தயார். இங்ஙனம் அநேக பொருள்களை அவைகளின் உபயோகத்திற்காக மட்டுமே வைத்துக் கொண்டிருக்கிறோம்.

இன்னும் சில பொருள்கள் இருக்கின்றன. அவை, மனிதனுடைய உயிர் வாழ்க்கைக்கு அவசியமானவை

யல்ல. இருந்தாலும் அவைகளை வைத்துக் கொண்டிருக்கிறோம்; உபயோகப்படுத்துகிறோம். உதாரணமாக, சங்கீதம், சிற்பம் முதலியவைகளைச் சொல்லலாம். அவைகளை, அவைகளின் அழகுக்காகவும், இனிமைக்காகவும் கையாளுகிறோமே தவிர உபயோகத்தை உத்தேசித்து அல்ல. அதாவது அவற்றை அவைகளுக்காக மட்டுமே வைத்துக்கொண்டிருக்கிறோம்; அதன் பிரயோஜனத்திற்காகவல்ல.

வேறு சில பொருள்கள் உள்ளன. அவைகளை அவைகளுக்காகவும் — அதாவது அவைகளின் அழகுக்காகவும் அல்லது இனிமைக்காகவும் — அவைகளின் பிரயோஜனத்திற்காகவும் வைத்துக்கொண்டிருக்கிறோம்; பயன்படுத்துகிறோம். உதாரணமாக நல்ல பாதைகள் இருக்கின்றன; அல்லது அழகான பாலங்கள் இருக்கின்றன. பாதையில்லாமலோ அல்லது பாலமில்லாமலோ ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போதல் கூடும். இருந்தாலும் பாதை இருப்பதும் பாலமிருப்பதும் உபயோகமாகவும் இருக்கிறது; அழகாகவும் இருக்கிறது.

இங்ஙனம் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள பொருள்களில், பிந்திய இரண்டு வகைப் பொருள்கள், பண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக இருப்பனவென்று சொல்லலாம். ஒரு மனிதனைப் பார்த்து இவன் பண்பாடுடையவன் என்று சொல்கிறோம். அவனிடத்திலே உள்ள எதைப் பார்த்து இப்படிச் சொல்கிறோம்? அவன் ஒரு பொருளை அந்தப் பொருளுக்காக மட்டுமே அனுபவிக்கிறான்; அல்லது அதன் பிரயோஜனத்திற்காகவும் சேர்த்து அனுபவிக்கிறான். இங்ஙனம் பிரயோஜனத்தைக் கருதாமல், ஒரு பொருளை அதற்காக மட்டுமோ அல்லது அதன் பிரயோஜனத்திற்காகவும் சேர்த்தோ அனுபவிக்கின்ற தன்மை எதுவோ அதுதான் பண்பாடு என்று அழைத்தற்குரியது. ஆனால் இப்படிச் சொல்லி விட்டால் பண்பாட்டைப் பற்றிப் பூராவும் சொன்னதாகாது.

பண்பாட்டின் ஆரம்பம் என்றுதான் இந்த அனுபவிக்கின்ற தன்மையைச் சொல்ல வேண்டும். இந்தத் தன்மை மேலும் மேலும் வளர்ந்து செல்லக்கூடியது. எப்படி?

கோயிலின் கோபுரம் இருக்கிறது. அதனால் ஏதோ பெரிய பிரயோஜனம் இருக்கிறதென்று அது கட்டப் பெறவில்லை. ஆனாலும் அதனைப் பார்த்து 'ஆ, ஆ, என்ன அழகு, என்ன வேலைப்பாடு' என்று சொல்லி சந்தோஷப் படுகிறோம்; நம்மிடத்தில் ஒரு குதூகல உணர்ச்சி உண்டாகிறது. இப்படியே சூரியோதயம், சூரியாஸ்தமனம் முதலியவைகளையும் சொல்லலாம். சூரியனால் பிரயோஜனம் மட்டும் இருக்கிறது. ஆனால் சூரியோதயத்தையோ சூரியாஸ்தமனத்தையோ பார்ப்பதனால் பிரயோஜனத் தோடுகூட ஒருவித இன்பமும் உண்டாகிறது; அந்த இரண்டு காட்சிகளைத் தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற ஆவல் நம்மிடையே எழுகிறது. இங்ஙனம் நாம் தனித்துப் பார்ப்பதோடு, அப்படிப் பார்த்துச் சந்தோஷத்தை அனுபவிப்பதோடு நின்று விடக் கூடாது; மற்றவர்களையும் அனுபவிக்குமாறு செய்யவேண்டும்; அது மட்டுமல்ல; அவர்கள் அனுபவிப்பதைப் பார்த்து நாம் சந்தோஷப்பட வேண்டும். எல்லோருடனும் சேர்ந்து சந்தோஷத்தை அனுபவிக்கவேண்டும், எல்லோரையும் சந்தோஷம் அனுபவிக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணம் எந்த இடத்தில் தோன்றுகிறதோ அந்த இடத்தில் அன்பு மலர்கிறது; அதிலிருந்து சகோதர வாஞ்சை என்கிற வாசனை வீசுகிறது. எனவே பொதுமை எண்ணத்தைத் தூண்டுவது எதுவோ, பொதுமை எண்ணத்தை வளர்ப்பது எதுவோ, பொதுமையிலிருந்து விளைவது எதுவோ அதுவே பண்பாடு என்று சுருக்கமாகக் கூறலாம். பொதுமையாகிற அடிப்படையின் மீது பண்பாடு என்கிற கட்டடம் நிர்மாணம் செய்யப்படுகிறது என்றும் கூறலாம்.

ஆனால் இப்படிச் சொன்னதனாலேயே பண்பாட்டுக்குப் பூரணமான வியாக்கியானமும் சொல்லிவிட்டதா

காது. ஏற்கனவே சொன்னபடி, அறிஞர்கள் இதற்கு வெவ்வேறு விதமான வியாக்கியானங்கள் செய்திருக்கிறார்கள். "இனிய சுபாவம், நிதானம், ஆத்மசக்தி, பொறுமை, ஞானம், வீரம் ஆகிய இவை யாவும் ஒரு பண்பட்ட மனத்தின் தன்மைகள்" என்கிறான் ஓர் அறிஞன். "அறிவையும் அழகையும் முக்கிய லட்சணங்களாகக் கொண்ட பூரணத்துவத்தை நாடுவது எதுவோ அதுதான் பண்பாடு" என்ற கருத்தைத் தெரிவிக்கிறான் இன்னோர் அறிஞன், "அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண்" என்பது திருக்குறள்.

இனி நாகரிகத்தைப் பற்றி ஓரிரண்டு அறிஞர்கள் கூறியுள்ள கருத்துக்களை எடுத்துக் காட்ட விரும்புகிறோம். "நாகரிகமென்றால், புறச்சூழலில் காணப்படும் லௌகிக அபிவிருத்திகள் அல்ல. ஒரு மனிதனுடைய சீலத்தை, அந்த மனிதன் மூலமாக தேசத்தின் சீலத்தை மேன்மையுறச் செய்வது எதுவோ அதுதான் நாகரிகம்" என்பது ஓர் அறிஞனுடைய கருத்து "வாழ்க்கைச் சாதனங்களின் அபிவிருத்தியைக் கொண்டு ஒரு நாகரிகத்தை அளந்து பார்க்கக் கூடாது. வாழ்க்கையின் தன்மையென்ன, அதற்கு என்ன மதிப்பு கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைக் கொண்டே நாகரிகத்தை அளந்து பார்க்கவேண்டும்" என்கிறான் வேறோர் அறிஞன். "கலைகளும் ஞானமும் நடக்கையும் ஒழுக்கமும் சேர்ந்த சேர்க்கைதான், பொக்கிஷந்தான் நாகரிகம்" என்பது ஓர் அமெரிக்க அறிஞனுடைய அபிப்பிராயம்.

இத்தகைய பண்பாடும் நாகரிகமும் நிறைந்தவர்களாயிருந்ததனாலேயே ஆசிய மக்கள் ஆதி காலந்தொட்டு, தங்களுடைய நலன் வேறு, மற்றவர்களுடைய நலன் வேறு என்று வித்தியாசம் பாராட்டாமல், எல்லோருடைய நலனையும் நாடினார்கள்; தங்கள் நாடு, தங்கள் சமுதாயம் என்று தனித்துப் பாராமல் உலகனைத்தையும்

ஒரு குடும்பமாகப் பார்த்தார்கள். ஒரு நல்ல காரியத்திற்கு எல்லோருடைய கூட்டுறவும் தேவையென்பதே இவர்களின் அடிப்படையான கொள்கையாயிருந்தது. இதனால் எல்லோரும் க்ஷேமமாயிருக்க வேண்டும், உலகம் சாந்திபெற வேண்டுமென்பன போன்ற கோரிக்கைகள் இவர்களுடைய இலக்கியங்களின் பிரதிபலித்தன. எல்லோரும் க்ஷேமமாயிருக்க வேண்டுமானால், உலகத்தில் சாந்தி நிலவ வேண்டுமானால், எல்லோருக்கும் சுதந்திரம் இருக்கவேண்டும்; அந்தச் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு எல்லோருக்கும் சௌகரியங்களும் சந்தர்ப்பங்களும் இருக்கவேண்டும். ஒருவர் தாழ மற்றொருவர் வாழ்தல் என்ற ஏற்பாடே இருக்கக்கூடாது. ஒருவர் பட்டினி இருக்க மற்றொருவர் வயிறார உண்ணக்கூடாது. இந்த மாதிரியான பொதுமைக் கருத்துக்கள் ஆசிய மக்களுக்கு நெடுகிலும் இருந்து வந்திருக்கின்றன. அரசாங்க உத்தியோகத்தில் அமரவேண்டிய ஒருவன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைப்பற்றி கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுதப்பெற்ற ஓர் எகிப்தியப் பாடல் பின் வருமாறு கூறுகிறது:-

"ஒரு முழ நிலத்திற்கு ஆசைப்படாதே;

ஒரு விதவையின் நிலத்தில் அத்து மீறிச் செல்லாதே;

உனது நிலத்தை உழுது பயிரிட்டு உனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்;

உனது இடத்தில் தயாரித்த ஆகாரத்தையே சாப்பிடு;

அக்கிரமமாக ஐயாயிரம் சம்பாதிப்பதைக் காட்டிலும்

கடவுள் உனக்குக் கொடுக்கிற ஒரு பறை[1] தானியமே போதுமானது.

---

1 சென்னை மரக்கால் ஐந்து கொண்டது.

களஞ்சியத்திலிருக்கும் பெருஞ் செல்வத்தைக் காட்டிலும்

கடவுளின் ஆணைக்குட்பட்டு வறுமையா யிருப்பது மேல்;

துக்கத்தின் மத்தியிலே பெருஞ் செல்வத்தோடிருப்பதைக் காட்டிலும்

சந்தோஷத்தின் மத்தியிலே சில துண்டு துணுக்குகளோடு வாழ்வதே மேல்..........."

மானிட சமுதாயம் உடல், அதில் தான் ஒரு சிறு அங்கம் என்று பிரதியோர் ஆசிய மகனும் கருதிக்கொண்டிருந்தான். ஓர் அங்கத்திற்கு ஊறு ஏற்பட்டால் அது மற்ற அங்கங்களையும் பாதிக்கும் என்ற எண்ணம் அவனுக்கு எப்பொழுதும் இருந்து கொண்டிருந்தது. இதனல் யாருக்கும் தீங்கிழைக்கக் கூடாது, அது தனக்கே தீங்கிழைத்துக் கொண்டதாகும் என்ற உணர்ச்சி அவனுக்கு இயற்கையாகவே ஏற்பட்டிருந்தது. தான் தீங்கிழைக்காமலிருந்ததோடு மட்டுமல்ல, மற்றவர்களையும் தீங்கினின்று தடுத்து வந்தான்; அப்படித் தடுத்து அவனை நல்வழிப் படுத்துவது தனது கடமையென்று கருதினுன். எப்படிப் புல்பூண்டுகளைக் களைந்துவிட்டு நெற்பயிரைச் செழிக்கச் செய்கிறோமோ அதுபோல தனி மனிதனிடத்திலும், மனித சமூகத்தினிடத்திலும் உள்ள கெட்ட தன்மைகளை அகற்றி நல்ல தன்மைகளை வளர்ப்பதில் முனைந்து நின்றுர்கள் ஆசிய மக்கள். பாரசீக வாசகங்கள் சிலவற்றைக் கேளுங்கள் :—

"ஒருவன் சிறிய சொத்துக்காரனு யிருந்தாலும், பெருஞ் சொத்துடையவனுயிருந்தாலும், வாய்மையுள்ளவர்கள் மீது அன்பு செலுத்தவேண்டும்; பொய் சொல்கிறவர்களிடத்தில் தீயவனுக நடந்துகொள்ளவேண்டும்."

* * *

"பிரதியொரு மனிதனையும் உன் நண்பனாகக் கருது. அதுவே உன் சுபாவம். பிரதியொரு மனிதனையும் நல் வாழ்க்கையிலே ஈடுபடுத்து; அதுவே உன் ஞானம். மற்றவர்களை, உன்னைப்போல் நினை; அதுவே உன் மதம். மற்றவர்கள் மூலமாக உனது சந்தோஷத்தைத் தேடிக் கொள்; அதுவே உன் ஆத்மா.'

* * *

"மனிதர்கள் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஒரு வரையொருவர் நேசிக்கிறார்களோ, ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான சந்தோஷத்தை அடைகிறார்கள்."

எல்லோரும் சுதந்திரமா யிருக்கவேண்டுமென்ற கருத்து ஆசிய மக்களிடத்தில் நிலவியிருந்தது என்று மேலே சொன்னோமல்லவா, இஃது—இந்தக் கருத்து—அவர்களுடைய அரசியல் வாழ்க்கையில் பிரதிபலித்துக் கொண்டிருந்ததை நன்கு காணலாம. அரசாங்க அதி காரத்தை ஓரிடத்திலே தேக்கிவைத்துக்கொண்டு அதைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கீழேயுள்ள ஸ்தாபனங்களுக்கு வினியோகிப்பது என்ற முறை ஆசியாவிலே கிடையாது. அதிகாரமானது, கீழே விரிந்து மேலே சுருங்கியிருந்தது. எப்படித் தனி மனிதன் தன்னைத்தான் ஆண்டுகொள்ள வேண்டுமென்ற நியதி இருந்ததோ அப்படியே பிரதி யொரு சிறிய ஸ்தாபனமும் தன்னைத்தான் ஆண்டு கொள்ள வேண்டுமென்ற நியதி இருந்தது. இதனால் தான், ஆசியாவில் அரசாங்கங்கள் மாறினாலும் சமுதாய அமைப்பு, சமுதாயக் கட்டுப்பாடு, சமுதாய ஒழுங்கு இவைகளெல்லாம் நிலைகுலையாமலிருந்தன. ஆள்வது குறைவாகவும் வாழ்வது அதிகமாகவும் இருந்தது. அர சன் ஆள்வதற்காக இருக்கவில்லை; முறைசெய்து காப் பாற்றுவதற்காகவே இருந்தான். ஒரு ராஜ்யத்தில் எவ் வளவுக்கெவ்வளவு ஆளுகை குறைவாயிருக்கிறதோ

அவ்வளவுக்கவ்வளவு அந்த ராஜ்யம் சுபிட்சமாயிருக்கும் என்பதே பொதுவான நியதியாயிருந்தது. ஒரு சீனப் பழமொழி கூறுகிறது:— "அதிகமாக ஆண்டால் ஜனங்கள் அதிகமான ஏழைகளாகிறார்கள்; அதிகமான சட்டங்கள் செய்தால், சட்டங்களை மீறுகிறவர்கள் அதிகமாகிறார்கள்."

மற்றவர்களுடைய துன்பங்களை அறிந்துகொள்ளக் கூடிய சக்தி ஆசியாவுக்குத்தான் உண்டு. அங்கு அவதரித்த மகான்களத்தனைபேரும் துன்பத்தை அனுபவித்தே உண்மையைக் கண்டிருக்கிறார்கள். அந்த மகான்களில் அநேகர், மற்றவர்களுடைய இன்பத்திற்காகத் தாங்களே வலிய துன்பத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய உபதேசங்கள் யாவும் மற்றவர்களுடைய துன்பத்தைத் துடைக்கின்ற முறையிலேயே அமைந்திருக்கின்றன. யார் மற்றவர்களுடைய துன்பத்தை அறியும் சக்தியுடையவர்களாயிருக்கிறார்களோ அவர்கள்தான் அந்தத் துன்பத்திற்குப் பரிகாரம் காணும் முயற்சியில் ஈடுபடுவார்கள்; அவர்களால்தான் அந்தத் துன்பத்தைப் பரிகரிக்க முடியும். ஆதலின் உலகத்தில் துன்பங்கள் ஒழிந்து இன்பம் துளிர்க்கவேண்டுமானால் அதற்கு ஆசிய மக்கள்தான் முனைய வேண்டும்.

கீழ் நாட்டையும் மேனாட்டையும் அல்லது ஆசியாவையும் ஐரோப்பாவையும் ஒப்பிட்டுக் காட்டுகின்ற வகையில் சில அறிஞர்கள் ஆசியாமீது இரண்டு குற்றங்கள் சுமத்துவதுண்டு. ஆசியாவின் பண்பாட்டை அறியாத ஒரு தன்மையினாலேயே இவர்கள் இப்படிக் கூறுகிறார்கள் என்று முதலிலேயே நாம் சொல்லிக்கொண்டுவிட விரும்புகிறோம். இவர்களுடைய இரண்டு குற்றச்சாட்டுகளையும் சிறிது கவனிப்போம்.

முதலாவது குற்றச்சாட்டு என்னவென்றால், ஆசியா இருக்கிற நிலையில் இருப்பதிலேயே திருப்தி யடைகிறது;

எவ்வித மாற்றத்தையும் விரும்புவதில்லை; முன்னேறிச் செல்லவேண்டுமென்ற ஆவலும் அதற்கு இல்லை. இதற்கு எதிராக, ஐரோப்பாவோ சதா மாறிக்கொண்டிருக்கிறது. மாறுதல், முன்னேற்றத்தின் அறிகுறியல்லவா? இப்படிக் கூறுகின்ற அறிஞர்கள், ஆசியா, ஐரோப்பாவினுல் ஆதிக்கங்கொள்ளப்பட்டதற்கு அதனுடைய ஒரு நிலைப் போக்குத்தான் காரணம் என்று சொல்லி ஆசியாவைத் தட்டி எழுப்புகிருர்கள்; முன்னே பிடித்துத் தள்ளுகிருர்கள். இவர்களுக்கு நாம் என்ன சொல்லுவது? 'வைத்தியனே, உன்னைச் சொஸ்தப்படுத்திக்கொள்' என்று சொல்லி இவர்களுக்கு வணக்கஞ் செலுத்துகிறோம்.

ஆசியா, நிற்கின்ற நிலையிலே நிற்க விரும்புகிறதென்பது வாஸ்தவம். அதில்தான் அதனுடைய பெருமை இருக்கிறது. வாழ்க்கையின் பல துறைகளிலும் அது பல விதமான பரிசோதனைகள் நடத்தி அவற்றில் எது யுக்தமானது, எது அனுசரிக்கத் தகுந்தது என்ற சில முடிவுகளைக் கண்டிருக்கிறது. இந்தக் கண்டிருக்கிற நிலைக்கு, அஃது— ஆசியா — எத்தனையோ நூற்றுண்டுகளுக்குமுன் வந்துவிட்டது. அப்பொழுது ஐரோப்பா ஒரு பச்சிளங் குழந்தை; நாகரிகமின்னதென்று அறியாத நிலையிலிருந்தது. தான் சிறு குழந்தையாயிருந்த காலத்தில் ஆசியா எப்படி இருந்ததோ அப்படியே தான் பெரிதாகிவிட்ட பிறகும் பார்க்கிறது. தன்னைப்போல் ஆசியாவும் வளரவில்லையே என்று ஆசியாமீது இரக்கங்காட்டுகிற பாவனையில் பேசுகிறது. முன்னேற்றத்தின் அடியிலே இருக்கும் ஐரோப்பா முன்னேற்றத்தின் முடிவைக் கண்டுவிட்ட ஆசியாவைச் சரியாகப் புரிந்து கொள்ளாதது ஆச்சரியமில்லை.

ஆசியா, வாழ்க்கையின் எந்தத் துறையிலும் ஒரு நிதானம் வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருக்கிறது. எதிலும் ஒரு தீவிரத்திற்குச் செல்ல அது விரும்புவதில்லை. இதனையே குறுகிய மனப்பான்மை என்று குறையாகச் சொல்கிருர்கள் மேனுட்டார். உதாரணமாக, ஐரோப்பா

வின் அரசியல் வாழ்க்கையையும் ஆசியாவின் அரசியல் வாழ்க்கையையும் எடுத்துக்கொள்வோம். ஐரோப்பாவில் அநேக நூற்றுண்டுகளாக, அரசர்கள் தெய்வப் பிறவிகள், தெய்விக உரிமையுடையவர்கள் என்ற கொள்கை அதிதீவிரமாக நிலவி வந்தது. இதனை ஆதரித்துக் கூச்சல் போட்ட கோஷ்டிகள்தான் எத்தனை? எழுந்த நூல்கள் தான் எத்தனை? இந்தக் கொள்கை காரணமாக அரசர்கள் கொடுங்கோலர்களானார்கள்; ஜனங்கள் சொல்லொணுத துன்பங்களை அனுபவித்தார்கள். இதன் விளைவு என்ன? அரசர்களுடைய தெய்விக உரிமையை எதிர்த்துப் பல இயக்கங்கள் கிளம்பின. அரசர்களுடைய தெய்விக உரிமை எவ்வளவு தீவிரத்திற்குச் சென்றதோ அவ்வளவு தீவிரத்திற்கு ஜனங்களுடைய ஆளும் உரிமையும் சென்றது. கடிகாரத்தின் தொங்கட்டத்தை ஒரு பக்கம் வேகமாகத் தட்டிவிட்டால் அது மறுபக்கமும் வேகமாகச் செல்லுமல்லவா? இவைகளினுல் சமுதாயத்தில் எப்பொழுதும் ஓர் அதிர்ச்சி, ஒரு குழப்பம் இருந்துகொண்டேயிருந்தது; பூசல்களும் பிணக்குகளும் சகஜமாயின; அமைதியென்பது குதிரைக் கொம்பாகி விட்டது. இப்பொழுதும்—இந்த இருபதாவது நூற்றுண்டின் இடைக்காலத்திலும்—ஐரோப்பாவைப் பாருங்கள், எங்கேனும், யாரிடத்திலேனும் அமைதி இருக்கிறதா என்று.

ஆசியாவோ, நெடுங்காலத்திற்கு முன்னரேயே, தீவிர முடியாட்சியிலுள்ள தீமைகளையும், தீவிர குடியாட்சியிலுள்ள தீமைகளையும் உணர்ந்து, இரண்டிலுமுள்ள தீமைகளைக் களைந்து இரண்டுக்கும் மத்தியமாக, குடிக்கோனுட்சி, அதாவது குடி தழுவிய கோனுட்சி என்ற முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தது. இதனையே பிற்காலத்து ஐரோப்பிய அரசாங்கங்களிற் சில பின்பற்றி யிருக்கின்றன.

இங்ஙனம் அரசியலிலே மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும், ஆசியா, நடுநிலையிலேயே இருந்து வந்திருக்

கிறது; எதிலும் ஒரு நிதானத்தை வலியுறுத்தி வந்திருக்கிறது. நீண்டகால அனுபவத்திமீது ஏற்பட்ட முடிவு இது.

எப்பொழுதுமே அனுபவம் நிறைந்தவர்கள், பேச்சிலும் நடக்கையிலும் நிதானமாக இருப்பார்கள்; சுகதுக்கங்களைச் சமதூக்கத்திலே வைத்துப் பார்ப்பார்கள். எதிலும் அவர்கள், தங்களை மிஞ்சிய ஒரு நிலைக்குச் செல்வதில்லை. ஆசியாவினுடைய தன்மையும இதுதான். வில்லியம் ரோஷர்[1] என்ற ஜெர்மானிய அறிஞன் கூறுகின்ற வாசகம் இங்குச் சிந்திக்கத் தக்கது:—"விவசாய நாகரிகமானது, இருக்கின்ற நிலையிலே இருப்பதையும் மேன்மக்களாட்சியையும் ஆதரிக்கிறது; தொழில் நாகரிகமானது, முற்போக்குடையதாகவும், ஜனநாயக ஆட்சியை ஆதரிப்பதாகவும் இருக்கிறது."

இரண்டாவது குற்றச்சாட்டு என்னவென்றால், ஆசியாவானது, லௌகிகத்தை அடியோடு துறந்துவிட்டு பாரமார்த்திகத்திலே அதிக கவனஞ் செலுத்தி வந்திருக்கிறதென்பதாகும் 'ஆசியாக்காரர்கள், இகலோகத்தை இழந்துவிட்டார்கள்; பரலோகத்திலிருந்து ஏதேனும் பரிசு கிடைக்குமாவென எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று சிலர் கேலியாகச் சொல்வதுண்டு. பொதுவாக, ஆசியாக்காரர்கள் உலக விவகாரம் தெரியாதவர்கள், வாழத் தெரியாதவர்கள் என்பது ஐரோப்பியர் பலருடைய அபிப்பிராயம். இந்த அபிப்பிராயம் தவறு என்று நாம் உரத்துச் சொல்ல விரும்புகிறோம்.

ஆசிய மக்கள், வாழ்க்கையைக் கூறுபடுத்திப் பார்க்கவில்லையென்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். லௌகிகமும் பாரமார்த்திகமும் சேர்ந்ததுதான் வாழ்க்கையென்பதே அவர்களுடைய கோட்பாடாயிருந்து வந்திருக்கிறது. தனி மனிதனுடைய வாழ்க்கையும் சமுதாய

1 **William Roscher 1817–1894.**

மனிதனுடைய வாழ்க்கையும் தனித்தனி அறைகள் என்கிற மாதிரியான எண்ணமே அவர்களுக்கு உதித்ததில்லை. ஆசியக் கிரந்தங்கள் யாவும் இரண்டையும் இயைபு படுத்தியே பேசி யிருக்கின்றன. இது விஷயத்தில் புராதன கிரீஸும் ஆசியாவைப் பின்பற்றி யிருக்கிறதென்று சொல்லவேண்டும். முற்காலத்துக் கிரேக்க அறிஞர்கள், வாழ்க்கையை அற வாழ்க்கை யென்றும் அரசியல் வாழ்க்கையென்றும் வேறுபடுத்திப் பாராமல் இரண்டையும் ஒன்றுபடுத்தியே பார்த்தார்கள். அரிஸ்ட்டாட்டல் எழுதிய "அரச நீதி", அவனுடைய "அறநூ"லின் தொடர்ச்சியே.

ஆசிய மக்களின் கொள்கைப்படி, அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அறத்தால் வரும் பொருளைக்கொண்டு இன்பம் துய்த்தலிலேயே மனிதனுடைய வாழ்க்கை சிறப்படைகிறது. இவற்றில் ஏதேனும் ஒன்றை விடுத்து மற்ற இரண்டையும் கடைப்பிடித்தலினால் வாழ்க்கை பூர்த்தியடையாது; அது நல்வாழ்க்கையுமாகாது. இந்த நல்வாழ்க்கை நடத்துவதுதான் பிரதியொரு மனிதனுடைய நோக்கமாக இருக்க வேண்டும்.

இந்த நோக்கத்தைக் கொண்ட ஆசிய மக்கள், லௌகிகம், பாரமார்த்திகம் என்ற இரண்டில் ஏதேனுமொன்றை மட்டும் கடைப்பிடித்திருப்பார்களாவென்று வாசகர்களைச் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் ஆசியாவின் பூர்விகக் கிரந்தங்கள் பலவும், காணமுடியாத கடவுளைப்பற்றி எவ்வளவு சவிஸ்தாரமாகச் சொல்லியிருக்கின்றனவோ அவ்வளவு சவிஸ்தாரமாக, காணப்படுகின்ற மனிதனைப்பற்றியும் கூறியிருக்கின்றன; அந்த மனிதனுக்குக் கடவுளை அடையும் வழியைக் காட்டியிருப்பதுபோல், அவன் வாழவேண்டிய வகையைப்பற்றியும் சொல்லியிருக்கின்றன; தத்துவத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துப் பேசியிருக்கின்றனவோ அவ்

வளவு முக்கியத்துவம் அனுஷ்டானத்திற்கும் கொடுத்துப் பேசியிருக்கின்றன; செயலற்ற எண்ணமோ, எண்ணத்தை அடிப்படையாகக் கொள்ளாத செயலோ பிரயோஜனப்படாது என்பதை பல முகத்தானும் வலியுறுத்தியிருக்கின்றன.

ஆசியாவின் முற்கால அறிஞர்கள், எந்தத் துறையையும் ஆராய்ச்சி செய்யாமல் விட்டுவிடவில்லை. யோக சாஸ்திரத்தைச் சொன்னவர்கள் பாக சாஸ்திரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். மோனத்தின் இனிமையை வியந்து கூறியவர்கள் வானத்தையும் அதில் சஞ்சரிக்கும் கிரகங்களையும் ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். முப்பத்திரண்டு வித்தைகளென்றும் அறுபத்து நான்கு கலைகளென்றும் இந்தியாவின் முன்னோர்கள் வகுத்துவிட்டுப் போனது எதைக் காட்டுகிறது? அவர்கள் வாழ்க்கையின் பல துறைகளையும் கண்டறிந்திருக்கின்ற மேதையையல்லவோ காட்டுகிறது? தற்கால அறிஞர்களைத் திகைக்க வைக்கும் எத்தனையோ பிரச்னைகளுக்கு ஆசியாவின் முற்கால அறிஞர்கள் பரிகாரங் கண்டிருக்கிறார்கள். ஓர் அறிஞன் கூறுகிறான்—"(ஆசியாவின்) இந்தப் புராதன மக்களுடைய ஆச்சரியகரமான, எதிர்பாராத மேதையை என்னென்று சொல்வது? இவர்கள் அனுஷ்டான சாத்தியமான அநேக எண்ணங்களையும் தத்துவங்களையும் சொல்லி, அவைகளை நடைமுறையில் கொணர்வதற்கான ஸ்தாபனங்கள் அமைக்கிற வழிகளைப்பற்றியும் சொல்லியிருக்கிறார்கள்...... தற்கால அறிஞர்களைத் திகைக்க வைக்கக்கூடிய அநேக பிரச்னைகளுக்கு இந்த முன்னோர்கள் பரிகாரங்கள் கண்டதோடு அவற்றில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள்."

ஆசிய மக்கள், உலக விஷயங்களை எவ்வளவு நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். உலக விவகாரங்களை எவ்வளவு ஒழுங்காக நடத்தி வந்தார்கள் என்பதற்குச் சில ஆதாரங்களை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் மூவாயிரத்தைந்நூறு வருஷங்களுக்கு முன்னே பாபிலோனியாவில் வழங்கி வந்த இரண்டொரு பழமொழிகளைக் கேளுங்கள். இவைகளைக் கொண்டு பாபிலோனிய மக்கள் எத்தகைய நேரிய வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்பது தெரிய வரும்.

"பலசாலிகள், தங்கள் சொந்த சம்பாத்தியத்தினால் வாழ்கிறார்கள்; பலவீனர்கள், தங்களுடைய பிள்ளைகளின் சம்பாத்தியத்தினால் வாழ்கிறார்கள்."

"அவன் நேர்மையுள்ளவனாகவும் நல்லவனாகவும் இருக்கிறான். ஆயினும் அவனுடைய உடை கந்தலாக இருக்கிறது."

"குடும்பத்தினருடன் சச்சரவிட்டுக் கொள்வது, புனிதமான இடத்தை அசுத்தப்படுத்துவது போலாகும்."

பாபிலோனியர்கள், மிகப் புராதன காலத்திலிருந்தே, குடும்ப க்ஷேமத்தை விசாரித்து ஒருவருக்கொருவர் கடிதப் போக்குவரத்து செய்து கொண்டிருக்கிறார்கள். கடன் கொடுத்தல், நிலம் விற்றல், ஒருவருடைய சொத்துக்களை மற்றொருவருக்கு மாற்றுதல் இப்படிப்பட்டவைகளுக்கெல்லாம் பத்திரங்கள் எழுதிப் பரிமாறிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு புருஷன், தன் மனைவிக்குப் பின்வருமாறு கடிதம் எழுதுகிறான் :—

"மனைவி ஸெக்குவுக்கு, நாபு-ஜேர்-உஷாப்ஷி எழுதியதாவது:— கடவுள் உனக்கு ஆரோக்கியத்தையும் ஆயுளையும் அளிப்பாராக! தெய்வ கிருபையால் நான் இங்கே சௌக்கியமாக இருக்கிறேன். உனக்கு பத்து கூர் (படி மரக்கால் போன்ற ஓர் அளவு) தானியம் கொடுக்கும்படி இக்கிஷாவின் மகன் இக்கின் மர்து‌க்குக்கு எழுதியிருக்கிறேன். வீட்டு விஷயத்தில் பாராமுகமாயிராதே. எல்லாவற்றையும் நன்றாகக் கவனித்துக்கொள். என் பொருட்டுக் கடவுளைக் கும்பிடு. நீ என்ன நினைக்கிறாய்

(அதாவது உனக்கு என்ன வேண்டும்) என்பதைப்பற்றி எனக்கு எழுது.''

கடன் கொடுத்த ஒருவன், தான் பெற்றுக்கொண்ட வட்டிக்குப் பின்வருமாறு ரசீது எழுதிக் கொடுத்திருக்கிறான் :—

'' ஐந்து ஷேக்கெல்களுக்கு (ஒரு நாணயம்) வருஷத்திற்கு ஒரு ஷேக்கெல் விகிதம் வட்டி கணக்குப்பண்ணி, அதற்காக அரை மைனு வெள்ளியை, கிர்னின்ஷாக் (என்பவ)னிடமிருந்து உர்தன்பாயே (என்பவன்) பெற்றுக்கொண்டதற்கு இதுவே ரசீது. . .. வருஷம் ஒன்பதாவது மாதத்தில் இது கொடுக்கப்பட்டது.''

உலகத்தில் ஆண்களும் பெண்களும் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதைப்பற்றி ஒரு சீனக் கிரந்தம் பின்வருமாறு கூறுகிறது :— ''லட்சியம் வாய்ந்த ஒரு புருஷன் குதிரையைப்போல் அடக்கமாகவும், கட்டுப்பாடாகவும், தைரியமாகவும் இருக்கவேண்டும். அப்படியே லட்சியம் வாய்ந்த ஒரு ஸ்திரீ, பசுவைப்போல் உழைப்பாளியாகவும், கற்புடையவளாகவும், சாதுவாகவும் இருக்கவேண்டும்.''

சந்தோஷமாக வாழ்வதற்கு ஒரு சுருக்கமான வழி கூறுகிறான் லாவோத்ஸே என்ற சீன ஞானி. ' உண்பதற்குச் சில பருக்கைகள்; குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர்; தலையணைக்கு முழங்கை; இவைகளிருந்தாலே நான் சந்தோஷமாயிருக்க முடியும். எளிமையைக் கடைப்பிடி; உன் அழகைக் காப்பாற்று; அகம்பாவத்தை அடக்கு; ஆசைகளுக்கு வரம்பு கட்டிக்கொள்.''

இந்தியாவில் முனிவர்கள் பலர், உலகத்தைத் துறந்துவிட்டு அடர்ந்த காடுகளிலும் இருண்ட குகைகளிலும் பரம்பொருளை நாடிக் கடுந்தவம் செய்து கொண்டிருந்தார்களென்று படிக்கிறோம். இவர்கள் காட்டிலே

வசித்தாலும் நாட்டு விவகாரங்களை நன்கு அறிந்தவர்களாயிருந்தார்கள். மகா அலெக்ஸாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தானல்லவா, அப்பொழுது சில முனிவர்களைச் சந்திக்க விரும்பினான். அவர்களுடைய அதிமேதையைப் பற்றியும் ஆத்ம சக்தியைப்பற்றியும் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தானாதலின் அவர்களைச் சந்தித்து அவர்களுடன் சம்பாஷணை செய்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. அப்படியே முனிவர்கள் பதின்மரைச் சந்தித்தான். 'உங்கள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கேள்வி கேட்க விரும்புகிறேன். யார் முதலாவதாகச் சரியான பதில் அளிக்கவில்லையோ அவர்கள், தங்கள் உயிரை இழக்கத் தயாராயிருக்கவேண்டும். உங்களிலே மூத்தவர் இதற்கு நியாயாதிபதியாக இருக்கட்டும்" என்று கூறினான். முனிவர்களும் சம்மதித்தார்கள். பின் வரும் சம்பாஷணை நடைபெற்றது:—

வினா: உலகத்தில் இருக்கின்றவையா, இறந்து போனவையா, எவை அதிகமென்று நினைக்கிறீர்கள்?

விடை: உயிரோடிருக்கின்றவைதான் அதிகம். இறந்தவை இருக்கவில்லையே.

வினா: சுபாவந் தப்பின, அதாவது விகாரமான பெரிய ஜந்துக்கள் பூமியிலேயா, சமுத்திரத்திலேயா எங்கு அதிகமாக உற்பத்தியாகின்றன?

விடை: பூமியில்தான்; சமுத்திரம் பூமியின் ஒரு பாகந் தானே?

வினா: உயிருள்ளவைகளில் எது மிகவும் புத்தியுடையது?

விடை: மனிதன் இன்னும் கண்டு பிடிக்கவில்லை.

வினா: ஸாபாஸ் பிரதேசத்திலுள்ள ஜாதியாரை ஏன் கலகம் செய்யும்படி கிளப்பிவிடுகிறீர்கள்?

விடை: கண்ணியமாக இறந்து போவதைக் காட்டிலும் கண்ணியமாக வாழ்வதுதான் சிறந்தது என்று கருதுவதனால்தான்.

வினு: இரவா, பகலா, எது முதலில் சிருஷ்டிக்கப்பட்டது?

விடை: பகல்.

வினு: ஒருவன், மற்றவர்களிடமிருந்து எப்படி அதிகமான அபிமானத்தைப் பெற முடியும்?

விடை: பிறருக்கு அச்சத்தை உண்டு பண்ணுத ஒரு சக்தியை அவன் பெற்றிருந்தால்.

வினு: மனிதன் எப்படிக் கடவுளாதல் கூடும்?

விடை: மற்றவர்களால் செய்ய முடியாத காரியத்தைச் செய்தால்.

வினு: எது சக்தி வாய்ந்தது, வாழ்க்கையா, மரணமா?

விடை: தனக்குப் பின்னுல் பல துன்பங்களைக் கூட்டிக் கொண்டு வரும் வாழ்க்கைதான்.

வினு: ஒருவன் எவ்வளவு காலம் ஜீவித்திருக்க வேண்டும்?

விடை: வாழ்வதைக் காட்டிலும் சாவதே மேல் என்று அவன் நம்பாத வரையில்.

சம்பாஷணை முடிந்ததும், அலெக்ஸாந்தர் நீதிபதியைப் பார்த்து, "யாருடைய பதில் நன்றாயிருக்கிற" தென்று கேட்டான். "யாரும் சரியான பதில் சொல்ல வில்லை. ஒருவருடைய பதிலைக் காட்டிலும் மற்றொருவருடைய பதில் மட்டமானதாகவே இருக்கிறது" என்றான் அந்த நியாயாதிபதி. "அப்படியானுல் நீ தான் முதலில் இறக்க வேண்டும் ஏனென்றால் உன்னுடைய பதில் தான் மிகவும் மோசமாயிருக்கிறது" என்றான் அலெக்ஸாந்தர். "இல்லை அரசனே, யார் முதலாவதாகச்

சரியான பதில் அளிக்கவில்லேயோ, அவரைத்தான் மரணத்திற்குட்படுத்துவதாக நீ சொன்னுயென்பது ஞாபகமிருக்கட்டும்" என்று திருப்பிச் சொன்னுன் அந்த நியாயாதிபதி. இதைக் கேட்டுப் பெருமகிழ்ச்சி கொண்ட அலெக்ஸாந்தர் எல்லோருக்கும் சன்மானங்கள் வழங்கிஞன்.

ப்ளூட்டார்க்[1] என்ற கிரேக்க சரித்திராசிரியன் எழுதி வைத்துப் போயிருக்கிற வரலாறுகளில் இந்த நிகழ்ச்சி காணப்படுகிறது. இது கட்டுக் கதையோ உண்மைச் சம்பவமோ நிச்சயமாகச் சொல்ல முடியாது. எப்படியிருந்த போதிலும், புறகால இந்தியர்களுடைய லௌகிக ஞானம் இந்தச் சம்பாஷணையிலிருந்து நன்கு புலனுகிறது. அது நமக்குப் போதும்.

1. Plutarch கி. பி 46–120.

# 3. ஐரோப்பாவும் ஆசியாவும்

ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்குமுள்ள சில தார தம்மியங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறோம் இப்படிச் சொல்வதனால், ஐரோப்பாவைத் தாழ்த்தியோ ஆசியாவை உயர்த்தியோ காட்டவேண்டுமென்பது நமது நோக்கமல்ல. அதனதனுடைய சூழ்நிலைக்கும் பரம்பரைக்கும் தகுந்தபடி அதனதனுடைய பழக்க வழக்கங்களும் மனப்பான்மைகளும் இருக்கின்றன. உலக சமாதானத்திற்கு ஆசியாதான் வழிகாட்ட முடியும், ஆசியாவுக்குத்தான் அந்தத் தகுதி உண்டு என்பதை நிர்த்தாரணம் செய்து காட்டுவதற்கு அதிகப்படியான அத்தாட்சியாகவே இந்தத் தார தமமியங்களை எடுத்துச் சொல்கிறோம்.

ஐரோப்பா, அறிவிலே பெருமை காண்கிறது; ஆசியாவோ, நம்பிக்கையிலே நிம்மதி பெறுகிறது. அறிவை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டியதுதான்; அந்த அறிவைக் கொண்டு உலகத்தைத் துருவித்துருவிப் பார்க்க வேண்டியதுதான். ஆனால் அந்த அறிவுக்குப் பின்னணியில் விசுவாசம் இல்லாவிட்டால், சிரத்தை இல்லாவிட்டால், சீலமில்லாவிட்டால், உண்மையைக் காண முடியாது. இதயமில்லாத மூளை பக்தியில்லாத பூஜை. இன்றைய ஐரோப்பா, விஞ்ஞான அறிவை எவ்வளவு அதிகமாக வளர்த்துக் கொண்டிருக்கிறது ? ஆனால் இந்த வெறும் அறிவு எவ்வளவு அனர்த்தங்களை உண்டு பண்ணியிருக்கிறது? வெறும் அறிவு, ஆரம்பத்தில் ஊக்கத்தை உண்டுபண்ணினாலும் இறுதியில் அழிவிலே தான் கொண்டுபோய்ச் சேர்க்கும். அறிவு சக்தியுடையது தான். ஆனால் அந்த அறிவு, அன்பைத் தழுவிக் கொண்டிராமற்போனால், மேலான தன்மைகளில்

நம்பிக்கை கொள்ளாமற்போனால், அதன் சக்தியானது துஷ்பிரயோகந்தான் செய்யப்படும்.

விஞ்ஞான அறிவைக்கொண்டு ஸ்தூலத்தைப் பார்க்க முடியும். ஆனால் நம்பிக்கையைக் கொண்டு சூட்சுமத்தையும் காண முடியும். "விஞ்ஞானமானது நன்றாகப் பார்க்கிற இடத்தில்தான் காலடி எடுத்து வைக்கிறது; ஆனால் நம்பிக்கை,— இதனை அன்பு, விசுவாசம், சிரத்தை என்று எந்தப் பெயரிட்டு வேண்டுமானாலும் அழைக்கலாம்:— பாராமலே முன் செல்லக்கூடியது. விஞ்ஞானம், தனக்கு முன்னேக்கமிருக்கிறதென்று பெருமையடித்துக் கொள்ளலாம். ஆனால் நம்பிக்கையோ, இருட்டிலேகூட முன்னேறிப் போகமுடியும். மற்றவர்களுக்கு வழிகாட்டிச் செல்லும் சக்தி தனக்கு இருக்கிறதென்று விஞ்ஞானமானது கர்வமடையலாம் ஆனால் நம்பிக்கையோ, கை கொடுக்கிறது; அழைத்துச் செல்லப் பட்டால் அதற்காக வந்தனமளிக்கிறது."

அறிவு காரணமாக, ஐரோப்பா, நூல்களைப் படிக்கிறது. நம்பிக்கை காரணமாக, ஆசியா, அந்த நூல்களோடு சம்பாஷிக்கிறது; அந்த நூல்களில் வரும் பாத்திரங்களோடு உறவு கொண்டாடுகிறது; சம்பவங்களிலே ஐக்கியப்பட்டுவிடுகிறது.

ஐரோப்பா, தத்துவ அளவிலே நிற்கிறது. ஆசியா, செயலிலே கவனஞ் செலுத்துகிறது. புதிய புதிய தத்துவங்களைக் கண்டு பிடித்து அவைகளுக்கு வியாக்கியானங்கள் எழுதிக் குவிக்கிறவர்களை ஐரோப்பா மேன்மைப் படுத்துகிறது. ஆசியா, செயலாற்றுகிறவர்களை, கர்ம யோகிகளைப் போற்றிப் பின்பற்றுகிறது.

ஐரோப்பா, இயற்கையை ஆராய்ச்சி செய்கிறது. ஆசியா, இயற்கையிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு விடுகிறது இங்ஙனமே ஐரோப்பா, மனிதனை, மனித

னிடத்திலேயுள்ள சக்திகளை, உணர்ச்சிகளை ஆராய்கிறது. ஆசியா, அந்த மனிதனை, அவனிடத்திலேயுள்ள மனிதத் தன்மையை நம்புகிறது; அந்தத் தன்மைக்கு விண்ணப்பித்துக் கொள்கிறது. இன்னும் ஐரோப்பா வாழ்க்கையைத் துண்டுதுண்டாகப் பிரித்துப் பார்த்து ஆராய்ச்சி செய்கிறது. ஆசியா, வாழ்க்கையை மொத்தமாகப் பார்க்கிறது; அந்த வாழ்க்கையை வாழ்கிறது. ஓர் அறிஞன் கூறுகிறான் :— "ஐரோப்பாவுக்கு விஞ்ஞானம், அறிவு, தத்துவம் ஆகிய மூன்றும் உண்டு. ஆசியாவுக்கு நம்பிக்கை, சுய அறிவு, ஆத்மஞானம் ஆகிய மூன்றும் உண்டு"

ஐரோப்பா, தன் புலமையைப் பேச்சினால் புலப்படுத்துகிறது. ஆசியா, தன் ஞான நிறைவை மௌனத்தினால் காட்டுகிறது. ஐரோப்பா, ஓசையிலே இன்பம் நுகர்கிறது. ஆசியா, அமைதியிலே இனிமை அனுபவிக்கிறது.

ஐரோப்பா, எல்லோருடனும் போட்டிபோட வேண்டுமென்று சொல்கிறது. ஆசியா எல்லோருடனும் ஒத்துழைக்க வேண்டுமென்று நெடுகிலும் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறது. ஒருவர் மீது ஒருவர் விழுந்து கொண்டு, ஒருவரை யொருவர் மிதித்துக் கொண்டு செல்வதுதான் முன்னேற்றம் என்று ஐரோப்பா கருதுகிறது. எல்லோருடனும் கைகோத்துக்கொண்டு சந்தோஷமாகச் செல்வதுதான் முன்னேற்றம் என்று ஆசியா நம்புகிறது.

அறிவின் உச்சாணிக் கிளையிலே ஏறி நின்று கொண்டிருந்தும் ஐரோப்பா கடவுள் காண முடியாதவர், அறிய முடியாதவர் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆசியா, நம்பிக்கையினால், கடவுளை அறிந்து, அடைந்தும் விட்டது ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னரேயே.

ஐரோப்பா, மனிதர்களோடு மனிதர்கள் ஒன்றுபட வேண்டுமென்று முழக்கம் செய்கிறது. பூலோகத்தில்

மனிதன் ஆளவேண்டுமென்று ஐரோப்பா சொல்கிறது. பூலோகத்தில் கடவுள் ராஜ்யம் நிலைக்கவேண்டுமென்று ஆசியா கோஷிக்கிறது.

ஐரோப்பா, உரிமையைக் கொண்டாடுகிறது. ஆசியா, கடமையை வலியுறுத்துகிறது. ஐரோப்பாவின் சரித்திரம் உரிமைப் போராட்டமாகவே இருந்திருக்கிறது. ஆசியாவின் சரித்திரமோ யாருக்கும் அஞ்சாது கடமையைச் செய்துகொண்டு வந்த மகான்களுடைய வாழ்க்கையின் இரைப்படமாக இருக்கிறது. உரிமையின் மீது கொண்டுள்ள பற்றுள்ளம் காரணமாகத்தான் ஐரோப்பா, தனிமைக்கு அதிக மதிப்புக் கொடுத்து வந்திருக்கிறது. கடமையை வலியுறுத்தும் ஆசியாவோ, பொதுமைக்குப் புனிதமான ஒரு ஸ்தானம் கொடுத்து வந்திருக்கிறது. ஐரோப்பாவின் சரித்திர ஏடுகளைப் புரட்டிப் பாருங்கள். தனிமைக்காக, தனி மனிதன், தனிச் சமுதாயம், தனி நாடு ஆகிய இவைகளின் உரிமைக்காகப் பாடுபட்டவர்களைக் கௌரவித்திருக்கிறது; பொதுமைக்காகப் பாடுபட்டவர்களைத் தூற்றியும் துன்புறுத்தியும் வந்திருக்கிறது. ஆசியாவோ, பொதுமைக்காக, உலகனைத்தும் ஒரு குடும்பமென்றும், மக்களனைவரும் கடவுளின் குழந்தைகளென்றும் போதனை செய்து வந்தவர்களைப் பெரியோர்களாக வணங்கி வந்திருக்கிறது; தனிமையைப்பற்றிச் சொன்னவர்களை நிராகரித்திருக்கிறது. ஐரோப்பாவில் கார்ல் மார்க்ஸின் பொதுவுடைமைக் கொள்கை செல்வாக்குப் பெறவில்லை. அது வளரக் கூடாதென்பதற்காக எவ்வளவு முயற்சிகள் செய்யப்பட்டன? இன்னமும் செய்யப்படுகின்றன? ஆசியாவில் அவிபக்த குடும்பத்திற்கு விசேஷ மதிப்புண்டு. இஃது எதைக் காட்டுகிறது? ஆசிய மக்களின் பொதுமை உணர்ச்சியை. சமுதாயக் கட்டுப்பாட்டுக்கு ஆசியாவில் கொடுக்கப்படுகிற மதிப்பு ஐரோப்பாவில் கொடுக்கப்படுவதில்லையென்று திண்ணமாகக் கூறலாம்.

ஐரோப்பா, பலனை எதிர்பார்த்து ஒரு காரியத்தைச் செய்கிறது. ஆசியா, பலனைப்பற்றிக் கவலை கொள்வதில்லை. அதற்குக் காரியந்தான் பிரதானம். காரியத்தைச் செய்து கொண்டு போவதில்தான் அது திருப்தி காண்கிறது; இன்பமடைகிறது. பலனை எதிர் பார்ப்பதனால்தான் ஐரோப்பா, நிரானுகூல வாதத்திலே அடிக்கடி மூழ்கி விடுகிறது. இந்த நிரானுகூல மனப்பான்மை, மதத்திலே நாஸ்திகமாகவும், அரசியலிலே புரட்சியாகவும், சமுதாயத்திலே கீழோர் மேலோர் என்ற வேற்றுமையாகவும பிரதிபலிக்கிறது. ஆசியாவோ எப்பொழுதும் சர்வானுகூலவாதி. இதனால் அஃது இருட்டிலே கூட வெளிச்சத்தைப் பார்க்கிறது; சமுதாயத்தில் அதிர்ச்சிகள் ஏற்பட்டால் அவைகளைச் சுலபமாகச் சமாளித்துக் கொண்டு விடுகிறது.

ஐரோப்பாவின் அரசியல் முறைகள், பொருளாதார அமைப்புக்கள், சமுதாய ஒழுங்குகள் ஆகிய யாவும் பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆசியாவோ சகலமானவற்றிற்கும் அன்பையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஐரோப்பாவின் ஏகாதிபத்திய சரித்திரம் பலாத்காரத்தின் சரித்திரந்தானே? ஐரோப்பாவுக்கு பலாத்காரத்தின் மீதிருந்த நம்பிக்கையானது, அடிமை வியாபாரத்தை ஆதரிக்கும்படி செய்தது; அதற்கு மதமெருகு கொடுத்தது; அதனை நியாயமென்று சாதித்தது. யேசுநாதரின் அடியார்களான பாதிரிமார்கள் அடிமை வியாபாரிகளை ஆசீர்வதித்தார்கள். ஆசியாவோ, பிற நாடுகளை அன்பினாலேயே ஆட்கொண்டது. அஹிம்ஸைதான் ஆசியாவின் உயிர் நாடி. அஹிம்ஸையை அஸ்திவாரமாகக் கொண்டுள்ள அமைப்புக்கள் பகட்டுடையனவாயில்லாமற் போனாலும் நீடித்த ஆயுளுடையனவாயிருக்கின்றன. பலாத்காரத்தின் மீது அமைந்த கட்டடங்களோ, சிறிது காலம் மினுக்கிவிட்டுச் சடுதியாகச் சரிந்து விழுந்து விடுகின்றன. நெப்போலியன்

கூறுகிறுன் ஓர் இடத்தில்:— "அலெக்ஸாந்தரும் ஷார்ல மேனும்[1] நானும்[2] பெரிய ஏகாதிபத்தியங்களை ஸ்தாபித்தோம். அவைகளை பலாத்காரத்தின் மீது ஸ்தாபித்தோம் இப்பொழுது அவை யெங்கே? யேசுநாதர், தமது ராஜ்யத்தை அன்பின்மீது ஸ்தாபித்தார். இன்று லட்சக்கணக்கான மக்கள் அவருக்காக இறக்கத் தயாராயிருக்கிறுர்கள்."

ஐரோப்பாவுக்குச் சகிப்புத் தன்மையென்பது கிடையாது. ஆசியாவினுடைய லட்சணமே அதுதான். ஐரோப்பாவின் சிலுவைப் போர்கள் அதனுடைய சகிப்பின்மைக்குச் சிறந்த சாட்சியங்களாகும். ஆசியாவோ, எல்லா மதங்களும் ஒரே உண்மையைத்தான் நாடுகின்றன என்ற கொள்கையை அனுஷ்டானத்தில் காட்டி வந்தது. ஆசியாவின் இந்தச் சகிப்புத்தன்மை, சமரஸ நோக்கம், அதனுடைய பலவீனத்திஞல் ஏற்பட்டதல்ல. கோழைத்தனமோ, அசிரத்தையோ, ஆசியாவினுடைய சகிப்புத்தன்மைக்குக் காரணமாயிருக்கவில்லை தீமைகளை எப்பொழுதும் ஆசியா சகித்துக் கொண்டிருந்ததில்லை; அவைகளை அவ்வப்பொழுது எதிர்த்துப் போராடி வந்திருக்கிறது. யேசு நாதருடைய உபதேசங்களைக் கவனியுங்கள். தீமைகளை எவ்வளவு வன்மையாகக் கண்டித்திருக்கிறுர்? ஆயினும் அவர் ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றொரு கன்னத்தைக் காட்டு என்று உபதேசித்தார். ஆசியாவில் உதித்த மகான்களெல்லோரும் லட்சியத்தோடு சமரஸம் செய்து கொண்டதில்லை; உண்மையைக் கடைப்பிடிக்காதவர்களிடம், தர்மத்தை அனுசரிக்காதவர்களிடம் சகிப்புத் தன்மை காட்டியது கிடையாது. சகிப்புத்தன்மை என்று சொன்னுல், மற்றவர்களுடைய சுய மரியாதையை அங்கீகரிப்பது என்பதுவே அர்த்தம். இந்த அர்த்தத்தில்தான், ஆசியாவின் அரசியல் விவகாரங்கள், மதப் பிரசாரங்கள் யாவும் நடைபெற்றிருக்கின்றன.

---

1 Charlemagne 742-814.

2 Napoleon 1769-1821.

ஐரோப்பா, தேசியக் கண்கொண்டுதான் எதையும் பார்க்கிறது; அதற்குமேல் அதனுடைய திருஷ்டி செல்வதில்லை. ஆசியாவோ, சர்வ தேசீய திருஷ்டியில் எதையும் வைத்துப் பார்க்கிறது. ஆனால் இதற்காக அது தேசீயத்தைத் துறந்து விடுவதுமில்லை. தேசீயப் படிமீது நின்று கொண்டால்தான் சர்வ தேசீயக் காட்சி நன்கு தெரியும் என்பது அதன் கருத்து. ஐரோப்பாவின் தேசாபிமானம், தன் நாட்டு அளவோடு நின்றுவிடுகிறது. ஆசியாவின் தேசாபிமானம், தன் நாட்டோடு பிற நாடுகளையும் நேசிக்கிற அளவுக்கு விரிகிறது. ஆசியாவுக்கு யாரும் பகையில்லை; யார்மீதும் துவேஷமில்லை. மற்றவர்கள் வீழ, தான் வாழ வேண்டுமென்ற எண்ணம் அதற்கு எப்பொழுதும் இருந்ததில்லை. தன்னைப்போல் மற்றவர்களும் வாழ வேண்டுமென்பதுதான் அதன் நெடுங்காலக் கோட்பாடாயிருந்து வந்திருக்கிறது.

சுவாமி விவேகானந்தருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்த ஒக்காக்கூரா கக்குஸோ[1] என்ற ஜப்பானிய ஞானியின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது:—
"ஆசியா அனைத்தும் ஒன்றே. முடிவாயுள்ளதும் சர்வ வியாபகமாயுள்ளதும் எதுவோ அதனை நேசித்தல் என்கிற எண்ணமானது, ஆசியாவினுடைய எல்லாச் சமூகத்தினருடைய பொதுவான பரம்பரைச் சொத்தாயிருக்கிறது இதனால்தான் அவர்களுக்கு—ஆசிய சமூகத்தினருக்கு—உலகத்துப் பெரிய மதங்களனைத்தையும் தோற்றுவிப்பது சாத்தியமாயிருந்தது. ஐரோப்பாவின் ஜனங்களோ, தனித்துவத்தை,—குறிப்பிட்ட ஒன்றை—ஆராய்ச்சி செய்வதில்தான் பிரியப்படுகின்றனர்; வாழ்க்கையின் லட்சியம் எது என்பதை விட்டுவிட்டு வாழ்க்கையின் சாதனம் எது என்பதைத் தேடுகின்றனர்."

1 Okakura Kakuzo 1862-1913.

# 4. சமாதான முயற்சிகள்

உடம்புக்குத் தீங்கு உண்டு பண்ணும் உணவை மனிதன் விரும்பிச் சாப்பிடுகிறான்; சுவைத்துச் சாப்பிடுகிறான். தீங்கு உண்டு பண்ணும் என்று தெரிந்தும் அவன் நாவை அடக்கிக் கொள்ள முடியாமற் போய்விடுகிறான் அது போல் யுத்தத்தின் கொடுமைகளை அறிந்து கூட, அனுபவித்த பிறகும், அந்த யுத்தத்தில் ஈடுபட்டு விடுகிறான் மனிதன். அவனிடத்திலேயுள்ள மிருக சுபாவத்தைத் தக்கவாறு ஊக்கப்படுத்திவிட்டால், அஃது, அவனிடத்திலேயுள்ள தெய்விக சுபாவத்தை அடக்கி ஒடுக்கிவிட்டு, மரண தேவதையோடு கைகோத்துக் கொண்டு கோர தாண்டவம் செய்யத் துவங்கி விடுகிறது.

உலகத்தில் இதுவரை எத்தனையோ யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. இந்த யுத்தங்களில் மடிந்த வீரர்கள் எத்தனை பேர்? சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில் மட்டும் எத்தனை பேர் யமனுலகுக்குக் குடியேறியிருக்கின்றனர் என்பதைப் பாருங்கள். 1790-ஆம் வருஷத்திலிருந்து 1913-ஆம் வருஷம் வரை நடைபெற்ற யுத்தங்களில் 1,85,52,000 பேர் சம்பந்தப் பட்டிருந்தார்கள். இவர்களில் 54,98,097 பேர் உயிரிழந்தார்கள். உயிர் இருந்தும் வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இறந்து போனவர்கள் எத்தனை பேரென்பது தெரியவில்லை. 1904-5-ஆம் வருஷத்து ருஷ்ய — ஜப்பானிய யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் 25,000,000 பேர்; இவர்களில் உயிர் துறந்தவர்கள் 5,55,900 பேர். 1912-13-ஆம் வருஷங்களில் நடைபெற்ற பால்க்கன் சண்டைகளில்[1] 12,30,000 பேர் ஈடுபட்டார்கள். இவர்

1 பால்க்கன் சண்டைகளென்பது பலகேரியா, ஸெர்வியா, கிரீஸ், மாண்டிநீக்ரோ ஆகிய நாடுகள் சேர்ந்து துருக்கியின் மீது போர்தொடுத்து வெற்றி கண்டதையும், பிறகு, பல்கேரியா, ஸெர்வியாவையும், கிரீஸையும் தாக்கித் தோல்வி கண்டதையும் குறிக்கும்.

களில் 3 50,000 பேர் கொல்லப்பட்டுவிட்டார்கள். 1914-18-ஆம் வருஷ முதல் உலக மகாயுத்தத்தில் மரித்தவர் சுமார் ஒரு கோடி பேர்; காயமடைந்தவர் சுமார் இரண்டு கோடி பேர் இந்த யுத்தத்தில் ஏற்பட்ட நேரடியான செலவு சுமார் 5,41,50,00,00,000 ரூபாய். 1939-45-ஆம் வருஷ இரண்டாவது உலக மகாயுத்தத்தில் மாண்டவர், காயமடைந்தவர் எல்லோரும் சேர்ந்து சுமார் ஐந்தரை கோடி பேர். இந்த யுத்தத்திற்காக, ஒரு நாளைக்குச் சராசரி செலவான தொகை 1940-ஆம் வருஷம் 50 லட்சம் பவுன்; 1942-ஆம் வருஷம் 125 லட்சம் பவுன்; 1943-ஆம் வருஷம் 150 லட்சம் பவுன் இப்படிப் பிரதியொரு வருஷமும் தினசரிச் செலவு அதிகரித்துக்கொண்டு வந்தது. இந்த வீண் செலவை, இந்த அழிவைக் கண்கூடாகக் கண்டு அனுபவித்த பிறகுகூட ஓ மனிதனே, நீ எவ்வளவு தூரம் மனிதத் தன்மையில் வளர்ச்சியடைந்திருக்கிறாய்? உலகத்திலே சாசுவதமான சமாதானம் நிலவ வேண்டுமென்பதற்கு மூலாதாரமாக, உனது அண்டை அயலார்களுடன் எந்த அளவுக்கு நல்லுறவு பூண்டு அமைதியாக வாழ முற்பட்டிருக்கிறாய்?

உலகத்தில் மனிதர்கள் வாழ்க்கைக்காகப் போட்டி போட எப்பொழுது ஆரம்பித்தார்களோ அப்பொழுதே யுத்தமும் ஆரம்பித்துவிட்டது. அறிஞர்கள் யுத்த சாஸ்திரங்கள் எழுதினார்கள். அரசின் இன்றியமையாத அங்கமாக ஏற்பட்டது படை. போர் செய்வதற்கென்றே அமைந்தனர் ஒரு பிரிவினர் சமுதாயத்தில்.

ஆசியாவைப் பொறுத்தமட்டில் யுத்தமானது, தர்ம யுத்தமென்றும் அதர்ம யுத்தமென்றும் இரு வகையாகப் பிரிக்கப்பட்டது. தீமையைக் களைந்து நன்மையை நிலை நாட்ட நடத்துகிற யுத்தம் தர்ம யுத்தம்; மற்றக் காரணங்களுக்காக நடத்தும் யுத்தங்களெல்லாம் அதர்ம யுத்தம்.

ஐரோப்பிய அறிஞர்கள் யுத்தத்தை மூன்று வகையென்றும் நான்கு வகையென்றும் பல வகைகளாகப்

பிரித்து ஒவ்வொரு வகையையும் பல நோக்கு நிலைகளி லிருந்து ஆராய்ச்சி செய்திருக்கின்றனர். உதாரணமாக லகோர்கெட்[1] என்ற ஓர் அறிஞன், யுத்தம் நால்வகைப் பட்டதென்பதைப்பற்றி விஸ்தரித்துச் சுமார் எழுநூறு பக்கங்கொண்ட ஒரு நூலெழுதினன். யுத்தவெறி மேலீட் டால் யுத்தந் தொடுத்தல் ஒருவகை. இந்த யுத்தத்திற்கு எவ்வித காரணமும் இராது. குறிப்பிட்ட ஒரு நோக்கம் நிறைவேறுவதற்காக யுத்தந் தொடுத்தல் இரண்டாவது வகை. அதாவது சுதந்திரம் பெறவேண்டும், அல்லது வியாபாரம் நம் கைக்கு வரவேண்டும், அல்லது ஒரு நாட்டின் மீது ஆதிக்கங் கொள்ளவேண்டும், இப்படி ஏதோ ஒரு காரணத்திற்காகப் போர் செய்தல். உள்ள துக்கு ஆபத்து ஏற்படுகிற பொழுது அதனைப் பாது காக்க நடத்துகிற யுத்தம் மூன்ருவது வகை. ஒரு நாட் டின் சுதந்திர வாழ்வுக்கோ, அல்லது வெளி நாட்டா ருடன் ஒழுங்காக வர்த்தகம் செய்து கொண்டிருப்ப தற்கோ பங்கம் ஏற்படுமென்று தெரிந்தால் அதனைத் தடுக்கத் தொடுக்கிற யுத்தம் இந்த மூன்ருவது வகையின் பாற்படும். உயிர் வாழ்க்கைக்காக நடைபெறும் யுத்தம் நான்காவது வகை. இப்படிப் பிரிக்கிருன் மேற்சொன்ன லகோர்கெட் என்ற அறிஞன்.

தற்கால யுத்தங்கள், நான்கு வகைக் காரணங்களில் ஏதோ ஒருவகைக் காரணத்தைப் பிரதானமாகக் கொண்டு நிகழ்கின்றனவென்று வேருேர் அறிஞன் சொல் கிருன். (1) உடன்படிக்கைகளின் வியாக்கியான விஷயத் திலோ அல்லது எல்லைப்புற நிர்ணய விஷயத்திலோ அபிப் பிராயபேதம் ஏற்படுவது ஒரு காரணம். (2) வியாபாரச் சலுகைகள் பெற முயலுவதோ, அல்லது அந்தச் சலுகை கள் கொடுக்க மறுப்பதோ மற்ெருரு காரணம். (3) சிறு பான்மையோருடைய உரிமைகளோ அல்லது ஜாதீய உரிமைகளோ அங்கீகரிக்கப் படாமலிருப்பதும் அல்லது

1 Jean Lagorgettle.

அவை மறுக்கப்படுவதும் இன்னொரு காரணம் (4) ஒரு நாட்டின் கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுகிற போது அதற்குப் பரிகாரந் தேடுதல் என்பது நான்காவது காரணம்.

இந்த நால்வகைக் காரணங்களில் ஏதோ ஒருவகைக் காரணந்தான் யுத்த நெருப்பை மூட்டுவிக்கின்றதாயினும் மற்ற மூவகைக் காரணங்களும் கூடச் சேர்ந்து கொள்கின்றன. ஆனால் இவைகளை உடனடியான காரணங்களென்று சொல்ல முடியாது. வருஷக் கணக்கிலும் தலைமுறைக் கணக்கிலும் வளர்ந்து வந்திருக்கிற மனஸ்தாபங்கள் இந்த நால்வகைக் காரணங்களாகப் பரிணமிக்கின்றன. 1914-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் தொடங்கிய யுத்தம் திடீரென்று தோன்றியதல்ல. 1870-ஆம் வருஷத்திலிருந்தே இதற்குக் காரணமான மனஸ்தாபங்கள், சூழ்ச்சிகள், ரகசிய உடன்படிக்கைகள் ஆகியவெல்லாம் ஆரம்பித்துவிட்டன. யுத்தத்திற்கு வேண்டிய சகல ஏற்பாடுகளும் அப்பொழுதிருந்தே செய்யப்பட்டு வந்தன ஆஸ்திரியாவின் இளவரசன் ஸெர்வியாவில் கொலை செய்யப்பட்டானென்பதும் ஒரு வியாஜந்தான்; உடனடியான காரணந்தான். ஆனால் இதுவே அடிப்படையான காரணமாகாது.

யுத்தம் சில சந்தர்ப்பங்களில் அவசியமாயிருக்கிறது, அதனால் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவென்று கூறுகின்ற ஒரு கட்சி எப்பொழுதுமே இருந்து வந்திருக்கிறது இந்தக் கட்சியினருடைய கூற்றில் உண்மை இருக்கிறதென்பதைப் பிற்காலத்துச் சில சம்பவங்கள் நிரூபித்தும் இருக்கின்றன. ஐர்லாந்து, தனது சுதந்திரத்துக்காகப் போராடவேண்டியது அவசியமாகவே இருந்தது ருஷ்யா, தனது பொதுவுடமை லட்சியத்திற்கு ஆபத்து வராமலிருக்க 1918-ஆம் வருஷத்திருந்து 1921-ஆம் வருஷம் வரை மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளுடன் பலமான யுத்தம் செய்யவேண்டியது அவசியமா

யிருந்தது. சீனுவின் ஆயிரக் கணக்கான வருஷ வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட ஜப்பான் முனைந்த போது அதனை எதிர்த்துச் சுமார் எட்டு வருஷ காலம் போராடுவது சீனுவுக்கு அவசியமாகவே இருந்தது. அமெரிக்காவில் வட மாகாணங்களுக்கும் தென் மாகாணங்களுக்கும் யுத்தம் நடைபெற்றிராவிட்டால் அடிமை வழக்கம் ஒழிந்திராது பத்தொன்பதாவது நூற்றுண்டின் இடைக்காலத்தில் சிறு சிறு நாடுகளாகப் பிரிந்திருந்த இத்தலி ஒன்றுபட்டது எதனுல்? யுத்தத்தினுலல்லவோ? இவ்வளவென்ன? நாகரிகமே, யுத்தத்தை வாகனமாகக் கொண்டல்லவோ முன்னேறி வந்திருக்கிறது? 1912-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் ஐந்தாந் தேதி கூடிய அமெரிக்க காங்கிரஸில் ஒரு பிரதிநிதி பேசிய பேச்சில் பின் வரும் வாசகங்கள் காணப்படுகின்றன:—"நாகரிகம் என்று எதை நாம் அழைக்கிறுேமோ அதன் ஒவ்வோர் அடி முன்னேற்றமும் யுத்தத்தின் விளைவுதான். நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கும் இந்த நியதி ஓரளவு நமது மதிப்புக்குரியதேயாகும்............மனித சகோதரத்துவத்தைப் பற்றி நாம் தாராளமாகப் பேசுகிறுேம்; உணர்ச்சியடைகிறுேம். ஏன். வெறிகொண்டவர்களாகக்கூட ஆகிவிடுகிறுேம். சகோதரத்துவத்தை அடிப்படையாகக்கொண்டு உலகத்தில் எந்த ஒரு நாடும் பதினைந்து நிமிஷம்கூட வாழ்ந்ததாகத் தெரியவில்லை."

இங்ஙனம் யுத்தத்திற்கு நியாயம் கற்பித்தும் அதனை ஆதரித்தும் நூல்கள் பல எழுந்தன; நாவன்மை படைத்த பலர் ஜனங்களுக்கு யுத்த வெறியை உண்டு பண்ணி வந்திருக்கிறுர்கள். ஒரு நாட்டின் திறமையானது அதனுடைய ராணுவ பலத்தைக் கொண்டு கணிக்கப்பட்டு வந்தது. போர்க்களத்தில் மாண்டவர்கள் வீரசொர்க்கம் அடைகிறுர்களென்ற நம்பிக்கையும், அவர்கள் இறந்த இடத்தில ஞாபகக் கல் நாட்டுகின்ற வழக்கமும் உலகத்தின் எல்லா நாடுகளிலும் நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது

இவ்வளவெல்லாம் இருந்தாலும், உலகத்தில் ஆதி காலந் தொட்டு சமாதான முயற்சிகளும் நடைபெற்று வந்திருக்கின்றன. யுத்தத்தினால் சாசுவதமான பலன் கிட்டாதென்பதை அறிஞர்கள் பலர் அறிவுறுத்தி வந்திருக்கிறார்கள். யுத்த கோஷம் செய்தவர்கள், நிகழ் காலத்திலே மட்டும் வாழ்ந்துவிட்டு மறைந்து போயிருக்கிறார்கள். சமாதானச் சங்கு ஊதியவர்கள், நிகழ் காலத்தில் புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கையை நடத்தி வந்தார்களாயினும் எதிர் காலத்தில் அமரர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். யுத்தத்தினால் கிடைக்கிற வெற்றி பனிக்கட்டி மாதிரி; சமாதானத்தினால் கிடைக்கிற வெற்றி தங்கக் கட்டி மாதிரி இதனால்தான் யுத்தத்தில் வெற்றி பெறுவதைக் காட்டிலும் சமாதானத்தில் வெற்றி பெறுவது கடினம் என்று பெரியோர்கள் சொல்லிப் போந்தார்கள்.

சிறப்பாக ஆசியாவில் சமாதான வாழ்க்கைக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. போர்த்தொழிலில் ஈடுபட்டவர்கள், சமுதாயத்தில் இரண்டாம்பட்ச அந்தஸ்தையே வகித்து வந்திருக்கிறார்கள். ஐரோப்பாவிலோ, பொதுவாக போர் முயற்சிகளுக்குத்தான் அதிகமான உற்சாகம் காட்டப்பட்டு வந்திருக்கிறது. போரிலே வெற்றி பெற்றவர்கள் போற்றப்பட்டு வந்திருக்கிறார்கள். சமாதான வாதிகளோ சமுதாயத்திலே செல்வாக்குப் பெறாமலும் ஜனங்களால் கேட்கப் படாமலும் இருந்திருக்கிறார்கள். சுருக்கமாக, "ராஜ்யங்கள் பிறப்பது போரிலே; இறப்பது சமாதானத்திலே" என்ற ரஸ்க்கின்[1] என்னும் அறிஞனுடைய வாசகம், ஐரோப்பாவின் மனப்பான்மையைப் பிரதிபலித்துக் காட்டுவதா யிருக்கிறது. இங்ஙனம் செல்வாக்குப் பெறாமலும் கேட்கப்படாமலும் இருந்த போதிலும் இந்தச் சமாதான வாதிகள், தங்கள் சேவையைச் சலியாது செய்து வந்திருக்கிறார்கள்; சமாதான இயக்கங்களையும் சமாதான ஸ்தாபனங்களையும் ஆங்காங்கே

1 John Ruskin 1819-1900

தோற்றுவித்து, ஜனங்களிடத்தில் உலக சகோதரத்துவ உணர்ச்சியை வளர்த்து வந்திருக்கிறார்கள்; யுத்த உணர்ச்சியானது, மனித சுபாவத்தைச் சேர்ந்ததல்லவென்பதை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். "யுத்தமானது, மனிதனின் சுய உணர்ச்சியைச் சேர்ந்ததல்ல. அஃது, ஓர் அரசாங்கம் எடுத்துக் கொள்கிற நடவடிக்கைகளின் ஒரு தோற்றம். மனித சுபாவத்திலே அஃது இல்லை; அஃது அரசியல் திட்டத்தின் ஓர் அமிசம்" என்பது கில்பர்ட் முர்ரேயின்[1] வாக்கு.

பொதுவாகப் பார்க்கப் போனால், கீழ்நாட்டைக் காட்டிலும் மேனாட்டில்தான் அதிகமான சமாதான இயக்கங்களும் சமாதான சங்கங்களும் தோன்றி வளர்ந்திருக்கின்றன; சமாதான வாதிகள் அதிகமான எதிர்ப்புக்களைச் சமாளித்துக் கொண்டு பலத்த பிரசாரம் செய்திருக்கிறார்கள். இதில் ஆச்சரியப்படத் தக்கதொன்றுமில்லை. ஏனென்றால், எந்த இடத்தில் இயற்கைக்கு விரோதமான சக்திகள் உக்கிரமாக எழுகின்றனவோ அந்த இடத்தில்தான், அந்தச் சக்திகளை எதிர்த்து நிற்கின்ற வகையில் இயற்கைச் சக்திகள் உத்வேகத்துடன் கிளம்புகின்றன. எந்த அரசாங்கம் பலமான அடக்குமுறைகளைக் கையாள்கின்றதோ அந்த அரசாங்கத்திற்கு விரோதமாகப் பலமான சூழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அதுபோல் மேனாட்டில் போர்க்குணம் நிறைந்திருப்பதனாலேயே அதனை எதிர்க்கின்ற முறையில், அதனை அடக்கி ஒடுக்குகின்ற வகையில், சமாதான எண்ணங்கள் வளர்கின்றன; இந்த எண்ணங்களை வளர்ப்பது அவசியமாகின்றது. கீழ்நாட்டிலோ, சமாதானமென்பது ஜனங்களுடைய சுபாவத்திலேயே இருக்கிறது இதனால் அஃது அதிகமாகப் பிரஸ்தாபிக்கப்படவில்லை; பிரஸ்தாபிக்கப்பட வேண்டிய அவசியமுமில்லை. எந்த இடத்தில் எது இல்லையோ அதைப் பூர்த்தி செய்யவேண்டியது அவசியம். சுவாமி விவேகானந்தர் கீழ்நாட்டிலே, மேனாட்டின்

1 Gilbert Murray 1866–1954.

விஞ்ஞான அபிவிருத்திகளைப் பற்றியும், லௌகிக சித்திகளைப் பற்றியும் பேசி வந்தார்; மேனாட்டில், கீழ்நாட்டின் பாரமார்த்திக உயர்வைப் பற்றிப் பிரசாரஞ் செய்தார். இதை வாசகர்கள் சிந்திக்க வேண்டுகிறோம்.

ஆதலின், மேனாட்டின் சமாதான இயக்க சரித்திரத்தை இங்குச் சுருக்கமாகக் கூற விழைகிறோம். இப்படிக் கூறுவதற்கு முன்னர், உலகத்தில் சகோதரத்துவம் வளரவேண்டும். சமாதானம் நிலைக்கவேண்டுமென்று பாடுபட்ட அத்தனை பேருக்கும் நமது வணக்கத்தைச் செலுத்த விரும்புகிறோம். தாந்தே[1] என்ன, இம்மானுயுவல் காண்ட்[2] என்ன, வில்லியம் பென்[3] என்ன, இன்னும் இவர்கள் போன்ற நூற்றுக்கணக்கான பேர்களும் குவேக்கர்கள்[4] போன்ற கோஷ்டியினர்களும் அரசியல் அரங்கத்தில் பிரகாசமான நட்சத்திரங்களா யில்லாமலிருக்கலாம்; இவர்களுடைய பெயர்களும் வரலாறுகளும் சாதாரண ஜனங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். இருந்தாலும். சர்வதேச சங்கமென்றும், ஐக்கிய தேச ஸ்தாபனமென்றும் இப்பொழுது தோன்றியுள்ள ஸ்தாபனங்களுக்கும், உலகத்திற்குப் பொதுவான ஓர் அரசாங்கம் ஏற்படவேண்டுமென்பன போன்ற எண்ணங்களுக்கும் அடிகோலியவர்கள் இவர்களே.

உலகத்தில் சகோதரத்துவமும் சமாதானமும் நிலவ வேண்டுமென்று பாடுபடுகிறவர்களைச் சமாதான வாதிகளென்றும் சர்வ தேசிய வாதிகளென்றும் இரண்டு பிரிவினராகப் பிரித்திருக்கிறார்கள் சமீப கால மேனாட்டு அறிஞர்கள். சமாதான வாதிகள், எந்தக் காரணத்தை முன்னிட்டும் யுத்தம் கூடாதென்ற கொள்கையுடையவர்கள். ஏனென்றால் முதலாவது, இவர்கள் மானிட சமு

1 Dante 1265—1321.
2 Immanuel Kant 1724—1804.
3 William Penn 1664—1718.
4 Quakers.

தாயத்தின் ஒற்றுமையில் பூரண நம்பிக்கையுடையவர்கள். ஒரு மனிதன் தற்கொலை செய்துகொண்டால் அது குற்றமாகக் கருதப்படுகிறதல்லவா? யுத்தம் என்பது என்ன? மானிட சமுதாயம் அனைத்தும் ஒன்றுசேர்ந்து தற்கொலை செய்து கொள்வதுதானே? எனவே, யுத்தமானது ஒரு பெரிய குற்றச் செயலாகும். இரண்டாவது, யுத்தத்தினால் எவ்வளவு சேதம்? எத்தனை பேருக்குத் துன்பம்? இஃது அனாவசியந்தானே? அழிவையும் துக்கத்தையும ஆரம்பித்து விட்டுவிட்டு, பிறகு அதனுடைய கொடுமையின் வேகத்தைக் குறைக்கப் பாடுபடுவதில் என்ன அர்த்தமிருக்கிறது? எனவே, மானிட சமுதாயத்தின் நலனுக்காக யுத்தம் கூடாது. மூன்றாவது, ஒருவருக்கொருவர் சமாதான முறையில் வாழ்வதுதான் தருமம்; அதுதான் நியாயம். அப்படிக்கின்றி, யுத்தத்தின் மூலம் நியாயத்தை நிலைநாட்டுகிறோமென்று சொல்வது சரியல்ல; நியாயமுமல்ல. பலாத்காரத்தினால் நியாயம் நிலைபெற்று விடாது. ஆகவே, யுத்தமானது அநியாயமானது. நான்காவது, பரஸ்பர மனஸ்தாபங்களை யுத்தத்தின் மூலம் தீர்த்துக் கொள்ள முடியாது. யுத்தத்தினால் புதிய யுத்தங்கள் ஏற்படுவதற்கு ஏதுவிருக்கிறதே தவிர சமாதானம் உண்டாவதற்கு வழியில்லை. எனவே, முக்கியமான இந்த நான்கு காரணங்களை முன்னிட்டும், வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் யுத்தம் கூடாது. சமரஸ முறையில் பேச்சு வார்த்தைகள் நடத்துவதன் மூலமும், அவரவர்களுடைய நல்லெண்ணத்திற்கும் மேலான சுபாவங்களுக்கும் விண்ணப்பித்துக் கொள்வதன் மூலமும் யுத்தம் வராமல் தடுத்து, சமாதானத்தை நிலைநாட்ட வேண்டும். சமாதான வாதிகளின் திரண்ட கருத்துக்கள் இவை.

சர்வதேசீய வாதிகள், உலகத்திலுள்ள சர்வ தேசங்களும் பரஸ்பரம நல்லுறவு பூண்டு வாழவேண்டுமென்றும், இப்படி வாழ்வதன் மூலம் யுத்தம் வராமல் தடுத்து சமாதானத்தை நிலைநாட்ட முடியுமென்றும் நம்புகிறவர்

கள். பிரதியொரு தேசத்தினுடைய அரசியல், பொருளாதார, சமூக அமைப்புக்கள் வெவ்வேறு யிருந்தபோதிலும், எல்லாத் தேசங்களுக்கும் பொதுவான நலன்கள் சில உண்டு. இந்த நலன்களைக் காப்பாற்றுவது பிரதியொரு தேசத்தினுடைய கடமையுமாகும். எப்படிக் காப்பாற்றுவது? எல்லாத் தேசங்களும் ஒரு ஸ்தாபனமாக ஒன்று சேர்ந்து கொள்வதன் மூலம். இந்த ஸ்தாபனமானது அவரவர்களுடைய தனி நலன்களில் தலையிடுவதில்லை; பொதுவான நலன்களில் மட்டும் சிரத்தை காட்டுகிறது. இந்தப் பொது நலன்களுக்குப் பங்கம் ஏற்படுமானல், பங்கம் விளைவிப்பவர்கள் மீது யுத்தந் தொடுக்கலாம்; ஆனல் கடைசி பட்சமாகத்தான். சுருக்கமாக, சர்வ தேசிய வாதிகள், மனிதர்களை வேற்றுமைப்படுத்தும் அமிசங்களைப் புறக்கணித்து விட்டு ஒற்றுமைப்படுத்தும் அமிசங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமென்பதுதான் இவர்களுடைய கோட்பாடும். ஆனல் அந்தக் கோட்பாட்டுக்கு யுத்தம் புறம்பானதன்று.

நுணுக்கமாகப் பார்த்தால் சமாதான வாதம் வேறு, சர்வ தேசிய வாதம் வேறு அல்ல என்பது தெரிய வரும். சமாதான வாதம் உலக சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டது; சர்வ தேசிய வாதம், உலக சகோதரத்துவத்தைக் குறிக்கோளாகக் கொண்டது. இரண்டும் ஒன்றுதானே? சமாதானமின்றிச் சகோதரத்துவமில்லை; சகோதரத்துவமின்றிச் சமாதானமில்லை. ஒன்றைக் கொண்டு மற்றொன்று பூரணத்துவமடைகிறது. ஒன்றிலிருந்து மற்றொன்று விரிகிறது. வேண்டுமானல், சமாதான வாதத்தைத் தத்துவமென்றும், அந்தத் தத்துவத்தை அனுஷ்டானமாகக் கொண்டு வருகிறபோது அது சர்வ தேசிய வாதமாகப் பரிணமிக்கிறதென்றும் சொல்லலாம்.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்த மேனாட்டு அரசியல் ஞானிகள் சிலர், இனி

நடைபெறக்கூடிய யுத்தங்கள் யாவும் உலக யுத்தங்களாகவே மூளும் என்று சொல்லிப் போயிருக்கிறார்கள். ப்ளாக்[1] என்ற அறிஞன், வருங்கால யுத்தங்களினால் நாகரிகமே அழிந்து போகக்கூடிய நிலைமை ஏற்படக் கூடுமென்றும், விபரீதமான கொடுமைகள் நிகழக் கூடுமென்றும் கூறுகிறான். இவர்களுடைய கூற்று எவ்வளவு உண்மையாயிருக்கிறது! இவர்கள் சொல்லிப் போனதை இன்றைய தலைமுறையினர் அனுபவித்து வருகிறார்கள். இந்த அனுபவத்திலிருந்து மானிட சமுதாயம் விரைவிலே விடுதலை பெறவேண்டுமானால், பிரதியொரு நாட்டுப் பிரஜையும் உலக சமாதானத்திற்குப் பாடுபடவேண்டும். அப்படி பாடுபடுவதாகச் சங்கற்பம் செய்துகொள்வதற்கு முன்னர், இதுகாறும் அந்த லட்சியத்தை — உலக சமாதானத்தை — குறிக்கோளாகக் கொண்டு தோன்றிய இயக்கங்களைப் பற்றியும், அந்த இயக்கங்களின் மூலபுருஷர்களைப் பற்றியும் ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமில்லையா?

யேசுநாதர் காலத்திலிருந்து கிறிஸ்துவ முனிவர்கள் பலர், உலகத்துச் சர்வ ஜனங்களும் சகோதரர்கள்போல் வாழவேண்டுமென்றும், மனிதர்கள், வாழப் பிறக்கிறார்களே தவிர மாளப் பிறக்கவில்லையென்றும், ஆதலின் அந்த வாழ்வை மேன்மைப்படுத்துகின்ற வகையில் உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமென்றும், யுத்தமென்பது பெருவாரியான உயிர்ப்பலியே தவிர வேறொன்றுமில்லையென்றும், யாருமே தங்கள் லட்சியத்தை அடைவதற்கு யுத்தத்தை ஒரு சாதனமாகக் கொள்ளக் கூடாதென்றும் உபதேசித்து வந்தார்கள். இவர்களுடைய உபதேசங்களைப் பின்பற்றிய கோஷ்டிகள் பல தோன்றின. இந்தக் கோஷ்டியினர், அந்தக் காலத்தவரால் தூற்றப்பட்டனர். இவர்கள் மீது எத்தனை பரிகாச அம்புகள் எய்யப்பட்டன! இவர்களுக்கு எத்தனை விதமான கொடுமைகள் இழைக்கப்பட்டன! இவர்களிடத்திலே

[1] Jean de Bloch 1836—1902.

குடி கொண்டிருந்த அன்பையும் சகோதரத்துவத்தையும் நசுக்கப் பகீரதப் பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. ஆனால் இவர்கள் நசித்துப் போனார்களே தவிர, இவர்களுடைய அன்பும் சகோதரத்துவமும் நசிக்கவில்லை; அதற்கு மாறாக முன்னைக் காட்டிலும் அதிக பிரகாசத்துடனும் தீவிரமாகவும் எங்கும் பரவின.

இங்ஙனம் பரவுவதற்குக் காரணமாயிருந்தவர்களில் குவேககர்கள் என்பவர்கள் ஒரு முக்கியமான கோஷ்டியினர். கி. பி. பதினேழாவது நூற்றாண்டில் தோன்றிய இவர்கள், தங்களை 'நண்பர்கள் சங்கம்' என்றும் 'சத்தியத்தின் சிநேகிதர்கள்' என்றும் அழைத்துக்கொண்டு, ஜனங்களிடையே சமாதான எண்ணங்களைப் பரவச் செய்தார்கள். இந்த குவேக்கர் கோஷ்டியை ஸ்தாபித்தவன் ஜார்ஜ் பாக்ஸ்[1] என்பவன். இவன், தன் கொள்கைகளுக்காகப் பலவிதமாக இம்சிக்கப்பட்டான்; பலதடவை சிறை சென்றான். இவனும் இவனோடு சேர்ந்த பதினொரு குவேக்கர்களும 1660-ஆம் வருஷம் ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். இது, சமாதான இயக்கத்தின் சரித்திரத்தில பிரசித்தி பெற்றது. இதில் இவர்கள், உலக சமாதானத்திற்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய மாதிரியான ரகசியச் சூழ்ச்சிகள், பகிரங்கச் சண்டைகள், பரஸ்பர சந்தேகங்கள், பொறாமைகள ஆகிய அனைத்தையும் வன்மையாகக் கண்டித்திருந்தார்கள். இந்த அறிக்கையைத் தொடர்ந்தாற்போல் பல அறிக்கைகள், துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் முதலியன வெளியாயின. பிரதியொரு மனிதனுடைய உயிரும் புனிதமானது; அந்தர்யாமியாயுள்ள ஒரு சக்தி அதனை இயக்குவிக்கிறது; அதனை அடக்கி வைப்பதற்கோ அழிப்பதற்கோ யாருக்கும் உரிமையில்லை; அஹிம்சை முறையில்தான் மனிதர்களுடைய விவகாரங்கள் நடைபெற வேண்டும். இந்த மாதிரியான கருத்துக்களே மேற்படி வெளியீடுகளில் காணப்பட்டன. இந்த குவேக்கர்கள், தங்கள் கொள்

1 George Fox 1624—1691.

கைக்காக, எல்லாவித துன்பங்களையும் புன்சிரிப்போடு ஏற்றுக் கொண்டார்கள்.

குவேக்கர் கோஷ்டியைச் சேர்ந்த வில்லியம் பென்[1] என்பவன், 1694-ஆம் வருஷம் சமாதானத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிட்டான். இதில், சமாதானத்தினால் ஏற்படக் கூடிய நன்மைகளையெல்லாம் விளக்கிச் சொல்லியிருந்தான். இந்தச் சமாதானத்தை எப்படி நிலை நாட்டுவது? ஐரோப்பாவிலுள்ள அரசர்கள் பலரும் சேர்ந்து சர்வதேச ஸ்தாபனம் ஒன்றை நிறுவ வேண்டும்; இதில் தொண்ணூறு பிரதிநிதிகள் இருக்க வேண்டும்; இவர்கள் வருஷத்திற்கொருமுறை கூடி, ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் ஏற்படக்கூடிய மனஸ்தாபங்களைச் சமரஸ முறையிலேயே தீர்த்துக் கொள்ளுமாறு செய்யவேண்டும். இதுதான் இவனுடைய திட்டத்தின் சாரம்.

இந்தத் திட்டத்தை இவன், தான் ஸ்தாபித்த பென்சில்வேனியா பிரதேசத்திலேயே அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தான். இந்தப் பிரதேசத்தில் பூர்விக காலந்தொட்டு வசித்துக் கொண்டிருந்த சுதேசிகளுடன் இவன், 1682-ஆம் வருஷம் செய்துகொண்ட ஓர் உடன் படிக்கையின் மூலம், உலகத்திலேயே முதன்முதலாக ஆயுத பலத்தைத் துணையாகக் கொள்ளாத ஓர் அரசாங்கத்தை ஸ்தாபித்தான். சுதேசிகளைப் பார்த்து இவன் கூறினான் :— "நல்லெண்ணமும் நம்பிக்கையுமுடைய அகன்ற பாதையிலேயே நாம் இப்பொழுது சந்திக்கிறோம். நம்மிலே ஒரு தரப்பினருக்குப் பாதகமாக மற்றொரு தரப்பினர் அதிகமான நன்மைகளையடைய முயற்சி செய்யக்கூடாது. எல்லா விவகாரங்களும் பகிரங்கமாகவும் அன்பு முறையிலுமே நடைபெற வேண்டும், நம்மிரு

1 William Penn 1644—1718. அமெரிக்காவிலுள்ள பென்சில்வேனியா மாகாணத்தைத் தன் தகப்பனார் தளபதி பென் பெயரால் ஸ்தாபித்தவன். தளபதி பென், ஜமைக்கா நிலைக் கண்டு பிடித்தவன்.

பிரிவினருக்கும் உள்ள தொடர்பை ஒரு சங்கிலிக்கு ஒப்பிட்டுச் சொல்ல நான் விரும்பவில்லை. ஏனென்றால் அந்தச் சங்கிலி துருப்பிடித்துப் போகலாம். ஆனால் நாமோ ஒரு மனிதனுடைய தேகத்தைப் போன்றவர்களாயிருக்கிறோம்; ஒரே ரத்தமும் சதையும் போன்றவர்களாயிருக்கிறோம்." இந்த அன்பு முறையிலேயே இவன் சுதேசிகளுடன் சகல விவகாரங்களையும் நடத்தினன்; அற்புதமான வெற்றியும் அடைந்தான்.

பென்னின் சமாதான திட்டத்திற்கு எதிரொலி கொடுக்கிற மாதிரி அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் பதினெட்டாவது நூற்றாண்டில் பல சமாதான சங்கங்கள் தோன்றின; பல திட்டங்கள் வெளியாயின; பல மகா நாடுகள் கூடின. அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில் டேவிட் லோ டாட்ஜ்[1] என்பவன், 1815-ஆம் வருஷம் ஒரு சமாதான சங்கத்தை ஸ்தாபித்தான். இதைத் தொடர்ந்தாற்போல் அமெரிக்காவின் மற்றப் பாகங்களிலும் அநேக சமாதான சங்கங்கள் தோன்றின. ஐரோப்பாவிலும் லண்டன் என்ன, ஜினிவா என்ன, இப்படிப் பல முக்கியமான நகரங்களில் சமாதான சங்கங்கள் ஏற்பட்டு நல்ல வேலை செய்தன. இந்த ஸ்தாபனங்களைத் தோற்றுவித்தவர்களிற் பெரும்பாலோர் குவேக்கர்களே என்பதை இங்குக் குறிப்பிடவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் சமாதான இயக்க சரித்திரத்தில சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியவர் அமெரிக்கர் இருவர். ஒருவன் சார்லஸ் ஸம்னர்,[2] இன்னொருவன் ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல்.[3] இவ்விருவரும் சிறந்த மேதாவிகள்; நாவலர்கள். தங்கள் பேச்சாலும் பாட்டாலும், ஜனங்களிடையே சமாதான எண்ணங்களைப் பரப்பி வந்தார்கள்.

---

1 David Low Dodge 1774—1852.

2 Charles Sumner 1811—1874.

3 James Russel Lowell 1819—1891.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பல சமாதான மகாநாடுகள் கூடின. இந்த மகாநாடுகளைக் கூட்டுவிப்பதற்கு முதற் காரணமாயிருந்தவன் எலிஹூ பர்ரிட்[1] என்ற ஓர் அமெரிக்க அறிஞன். சுயமாகக் கல்வி கற்று முன்னுக்கு வந்தவன். இவன் உலக சமாதானத்திலே பற்றுள்ளங் கொண்டு அதற்காக அல்லும் பகலும் உழைத்தான். 1842-ஆம் வருஷத்திலிருந்து 1851-ஆம் வருஷத்திற்குள் ஐரோப்பாவில் மொத்தம் ஐந்து சமாதான மகாநாடுகள் கூடின. இந்த ஐந்தையும் கூட்டி நடத்தியவன் எலிஹூ பர்ரிட்.

வில்லியம் கிரெமார்[2] என்ற ஒருவன். இவன் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையின் அங்கத்தினன். இவன் 1889-ஆம் வருஷம் 'சர்வ பார்லிமெண்டரி யூனியன்'[3] என்ற ஒரு ஸ்தாபனத்தைத் தோற்றுவித்து, சர்வதேசத் தகராறுகளை மத்தியஸ்தத்தின் மூலமே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்ற முறைக்கு அடி கோலினன். உலக சமாதானத்தை முன்னிட்டு இவன் உழைத்த உழைப்பைப் பாராட்டு முகத்தான் இவனுக்கு 1903-ஆம் வருஷம் நோபல் பரிசு அளிக்கப்பட்டது.

நோபல் பரிசு ஸ்தாபகனான ஆல்ப்ரெட் நோபல்,[4] பிரதியொரு வருஷமும், அந்த வருஷத்தில் உலக சமாதானத்திற்காகச் சொல்லாலோ, செயலாலோ அதிகமாக உழைத்தவர்களுக்குச் சுமார் ஒரு லட்சத்து இருபதினாயிரம் ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பு கொடுக்கவேண்டுமென்று 1896-ஆம் வருஷம் ஒரு நிதி ஏற்படுத்தி விட்டுப் போனான். இங்ஙனமே அமெரிக்காவில் எட்வின் கின்[5] என்ற ஒரு புஸ்தக வியாபாரி, பாஸ்ட்டன் நகரத்தில்

1 Elihu Burrit 1810—1819.
2 William Cremar 1838—1908.
3 Interparfiamentary Union.
4 Alfred Nobel 1833—1896.
5 Edwin Ginn 1838—1914.

'உலக சமாதான ஸ்தாபன'[1] மொன்றைத் தோற்றுவித்து அதற்கு மூலதனமாக முப்பது லட்சம் ரூபாய் கொடுத்தான். ஆண்ட்ரூ கார்னிகி[2] என்ற அமெரிக்க கோடீசுவரன், உலகத்தில் சமாதானம் நிலவவேண்டுமென்பதற்காக 1911-ஆம் வருஷம் ஒரு பெருந்தொகையை நன்கொடையாக அளித்தான்; இதுதவிர ஹேக் நகரத்தில் சமாதான மாளிகையொன்றைக் கட்டிக் கொடுத்தான்.

சமாதான இயக்க சரித்திரத்தில் ஹேக் நகரம் மிகவும் பிரசித்தமானது. இங்கு 1899-ஆம் வருஷத்திலும் 1907-ஆம் வருஷத்திலும் இரண்டு சமாதான மகாநாடுகள் கூடின. தேசங்களுக்குள் ஏற்படக்கூடிய மனஸ்தாபங்களைத் தீர்த்து வைப்பதற்காக ஹேக்கிலேயே ஒரு சாசுவத நீதி ஸ்தலம் ஏற்பட வேண்டுமென்று முதல் மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இந்த நீதி ஸ்தலம் 1901-ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்திலிருந்து, தன் வேலையைத் துவக்கியது. துவக்கினாலென்ன ? இந்த நீதி ஸ்தலத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டது யார் ?

தவிர, தேசங்களின் ஆயுத பலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி மேற்படி இரண்டு மகாநாடுகளிலும் உரத்துப் பேசப்பட்டது. ஆனால் எந்தத் தேசமும் குறைத்துக் கொள்ளவில்லை. சுருக்கமாக, இவ்விரு மகாநாடுகளினாலும் எவ்வித நன்மையும் உண்டாகவில்லையென்றே சொல்ல வேண்டும். நன்மை ஏற்படாமற் போனதற்குக் காரணம் ஐரோப்பிய வல்லரசுகளாக அப்பொழுதிருந்த பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய மூன்றின் பரஸ்பரப் பொறாமையேயாகும்.

1914-ஆம் வருஷம், முதல் உலக மகாயுத்தம் தொடங்கியதல்லவா, இதற்குச் சுமார் மூன்று வருஷம் முன்னடி.

1 World Peace Foundation.

2 Andiew Carnegie 1835—1919.

யிருந்து ஐரோப்பாவில், சமாதானத்தைப் பற்றி அதிக மான சொற்பொழிவுகள் நிகழ்ந்தன; உடன்படிக்கைகள் நிறைவேறின. அமெரிக்கா மட்டும் சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு சுமார் இருபது ஒப்பந்தங்க ளுக்குப் பேச்சு வார்த்தைகள் நடத்தியது. இவ்வள வெல்லாம் நடைபெற்றும், 1914-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் யுத்த நெருப்பு மூண்டேவிட்டது.

இந்த யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத் தில்கூட, சமாதான வாதிகள் பலர் தங்கள் பிரசாரத்தை விடாமல் செய்து வந்தார்கள். இங்கிலாந்தில் 1916-ஆம் வருஷம 'யுத்த ஒழிப்புச் சங்கம்' ஒன்று தோற்றுவிக்கப் பட்டது; இன்னும் சில ஸ்தாபனங்களும் தோன்றின.

யுத்த ஒழிப்பு இயக்கத்தின் சரித்திரத்தில் கெல்லாக் ஒப்பந்த[1]த்தையும் குறிப்பிடவேண்டும். இது 1928-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 28-ஆம் தேதி நிறைவேற்றப் பட்டது. ஆரம்பத்தில் இதில் பதினைந்து நாடுகள் கையொப்பமிட்டன. பின்னர் வேறு பல நாடுகளும் கையெழுத்துச் செய்தன. ஆயினும் என்ன பிரயோஜ னம்? இதற்குப் பிறகு யுத்த எண்ணங்கள் வளர்ந்தனவே தவிர குறையவில்லை. பிரதியோர் அரசாங்கமும் தனது ஆயுத பலத்தை ரகசியமாகவும் வெளிப்படையாகவும் அதிகரித்துக்கொண்டு வந்தது. 1939-ஆம் வருஷ மகா யுத்தம்!

இனி சர்வ தேசியத் துறைக்கு வருவோம். முதல் உலக மகா யுத்தத்திற்குப் பிறகு சர்வ தேச சங்கம் ஏற் பட்டதல்லவா, அதுதான் சர்வ தேசங்களும் சேர்ந்து அமைத்துக்கொண்ட முதலாவது ஸ்தாபனமென்று வாச கர்கள் கருதவேண்டாம். உலகத்திலே எதுவும் புதிதில்லை யென்று சொல்வார்கள். சர்வ தேச சங்கத்தைப் பொறுத்தமட்டில் இது முற்றிலும் உண்மை. சர்வ தேச

1 Kellogg Pact.

ஸ்தாபனத்தின் ஐரோப்பிய அஸ்திவாரம் சுமார் மூவா யிரத்தைந்நூறு வருஷ ஆழமுடையதாயிருக்கிறதென்றால், வாசகர்கள் நிச்சயம் ஆச்சரியப்படுவார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு 1497 வருஷங்களுக்கு முந்தி கிரீஸ் தேசத்தில் பன்னிரண்டு ஜாதியினர் தனித்தனியாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் மேற்படி கி மு. 1497-ஆம் வருஷத்தில் ஒன்றுகூடி, தங்கள் அனைவருக்கும் பொதுவாயுள்ள விவகாரங்களைப் பைசல் செய்துகொள் வதற்கென்று ஒரு பொதுச் சபையை ஏற்படுத்திக்கொண் டார்கள். இந்தச் சபையானது, தெர்மாப்பிலே கணவாயி லுள்ள அந்த்தேலா[1] என்ற இடத்தில் ஒவ்வொரு வருஷ மும் கூடியது. இந்த பொதுச் சபையின் உத்தரவுகளை நிறைவேற்ற நிருவாக சபையொன்று இருந்தது ஒவ் வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு பிரதிநிதி விகிதம் இதில் பன்னிரண்டு பேர் அங்கத்தினர்களிருந்தார்கள். இவர்கள் ஒரு ஜாதியினரும் மற்றொரு ஜாதியினரும் எந்தக் கார ணத்தை முன்னிட்டும் பரஸ்பரம் சண்டை போட்டுக் கொள்வதில்லையென்று பிரதிக்ஞை செய்துகொண்டனர். இந்த ஸ்தாபனம் வரவர விருத்தியடைந்தது. கி. மு. 191-ஆம் வருஷம் இதில் பதினேழு அங்கத்தினர்கள் இருந் தார்கள். கி. பி 200-ஆம் வருஷம் வரை இந்தச் சபை வேலை செய்து வந்ததாகத் தெரிகிறது.

சர்வ தேச ஸ்தாபனமொன்று இருக்கவேண்டுமென் பதைப்பற்றி அறிஞர் பலர் அனேக நூற்றாண்டுகளுக்கு முன்னரே சில திட்டங்கள் வகுத்துவிட்டுப் போயிருக் கிறார்கள். இவற்றில் முக்கியமான சிலவற்றை இங்குச் சுருக்கமாக எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

தாந்தே என்ற இத்தாலியக் கவிஞன், தன்னுடைய ஒரு நூலில்[2] மேற்கு கிறிஸ்துவ நாடுகள் பலவும் அரசியல்

1 Anthela in the pass of Thermopylæ.

2 De Monarchia.

விஷயங்களில் ஒற்றுமைப்பட்டிருக்கக்கூடிய வகையில் ஒரு திட்டம் வகுத்துச் சொல்லியிருக்கிறான். இவனுடைய காலத்தில் புனித ரோம ஏகாதிபத்தியத்திற்கும் இத்தலியிலுள்ள சிறு சிறு ராஜ்யங்களுக்கும் அடிக்கடி சண்டைகள் நடைபெற்று வந்தன. இதை எப்படியாவது நிறுத்தி, சமாதானத்தை நிலைபெறுத்த வேண்டுமென்ற ஆவலினாலேயே இவன் மேற்படி திட்டத்தை வகுத்தான்.

பதினாறுவது நூற்றாண்டிலிருந்து, கிறிஸ்துவ மதத்தில் பிரவேசித்துவிட்ட அனுசாரங்கள் பலவற்றை அகற்ற வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக்கொண்ட சீர்திருத்த இயக்கம் ஐரோப்பாவெங்கணும் பரவத் தொடங்கியது. இதன் காரணமாக கத்தோலிக்கர்களுக்கும் புராட்டெஸ்ட்டெண்ட்டுகளுக்கும் மனஸ்தாபங்கள் ஏற்பட்டன. இவை முற்றி இரு பிரிவினருக்கும் பெரிய சண்டையாக மூண்டது. இது 1618-ஆம் வருஷம் தொடங்கி 1648-ஆம் வருஷம் வரை நடைபெற்றது. இதனால் இதற்கு 'முப்பது வருஷ யுத்தம்'[1] என்று பெயர். விடாமல் நடைபெற்ற இந்த யுத்தத்தின் விளைவாக, ஜனங்களுடைய மனமானது சமாதான திக்கை நோக்கியது. சமாதானத்தை லட்சியமாகக்கொண்ட சர்வ தேச ஸ்தாபனம் ஒன்றை அமைக்கவேண்டுவதற்கான திட்டங்கள் பல உருக்கொண்டன. இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்படவேண்டியவை மூன்று.

ஐரோப்பாவிலுள்ள எல்லா அரசர்களும், தங்களுடைய தூதர்கள் மூலம் ஒரு நிரந்தர ஸ்தாபனமாக வெனிஸ் நகரத்தில் ஒன்றுகூடவேண்டுமென்றும், ஐரோப்பாவிலுள்ள ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படக்கூடிய மனஸ்தாபங்களை, மேற்படி தூதர்கள் பரஸ்பரம் நேர்முகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்றும் எமரிக் க்ருஸ்[2] என்பவன் 1623-ஆம் வருஷம்

1 Thirty Years' War.

2 Emeric Cruce.

ஒரு திட்டம் வெளியிட்டான் ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் யுத்தம் ஏற்படுவதற்குக் காரணம் வியாபாரந் தான் என்றும், இந்த வியாபார முறைகளை ஒழுங்கு படுத்திவிடுவது அவசியமென்றும் இவன் தன் திட்டத்தில் வலியுறுத்தியிருந்தான்.

ஹ்யூகோ க்ரோஷியஸ்[1] என்பவன், சர்வ தேசங்களும் பொதுவாக அனுசரிக்கக்கூடிய சில சட்ட திட்டங்கள் இருக்கவேண்டுமென்றும், சர்வ தேச பஞ்சாயத்து மூலம் ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் உண்டாகக் கூடிய மனஸ்தாபங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு திட்டம் 1625 ஆம வருஷம் தயாரித்தான். ஒழுங்கானதொரு சர்வ தேச சட்டத்தை முதன் முதலாக இயற்றிக் கொடுத்தவன் இந்த க்ரோஷியஸ்தான்.

ஸல்லி[2] என்ற ஒரு பிரெஞ்சு ராஜதந்திரி, ஐரோப்பாவைப் பதினைந்து நாடுகளாகப் பிரித்து, இந்தப் பதினைந்து நாடுகளும ஒரு சமஷ்டியாகச் சேரவேண்டுமென்று ஒரு திட்டம் போட்டான் இந்தச் சமஷ்டியை எழுபது பேரடங்கிய ஒரு சபை நிருவாகம் செய்யவேண்டுமென்றும், இந்தச் சபையினரே ஒரு தேசத்திற்கும் மற்றொரு தேசத்திற்கும் ஏற்படுகின்ற மனஸ்தாபங்களைத் தீர்த்து வைப்பார்களென்றும், இவர்களுடைய தீர்ப்பு அவசியமானால், பலாத்காரத்தைப் பிரயோகித்து நிறைவேற்றப்படவேண்டுமென்றும், அப்படியானால்தான் யுத்தத்தைத் தடுக்கமுடியுமென்றும் இவனுடைய திட்டம் கூறியது.

ஸல்லியின் திட்டத்தை விரிவுபடுத்தியும் சிற்சல மாற்றங்களோடும் ஸான்பியார்[3] என்ன, லீப்னிட்ஸ்[4] என்ன, ரூஸ்ஸோ[5] என்ன இவர்களெல்லோரும் சில திட்டங்களை

---

1. Hugo Grotius 1583-1645.
2. Sully 1560-1641.
3. Abbe de st. Pierre 1658—1743
4. Leibnietz 1646...1716
5. Rousseau 1712—1778:

வெளியிட்டார்கள். ஜெரெமி பெந்தாம்[1] என்பவன், ஐரோப்பிய நாடுகள், தங்கள் ஆயுத பலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், சர்வதேச கோர்ட் ஒன்று நிறுவி அதன் மூலம் எல்லா மனஸ்தாபங்களையும் பைசல் செய்து கொள்ள வேண்டுமென்றும் ஒரு திட்டம் பிரகடனம் செய்தான்.

ஜெர்மன் தத்துவ ஞானியாகிய இம்மானுயுவல் காண்ட், 1795-ஆம் வருஷம் "நிரந்தர சமாதானம்" என்ற ஒரு நூலை வெளியிட்டான். யுத்தத்திற்கு முக்கிய காரணம் முடியரசு முறைகள் இருப்பதுதான்; ஆதலின் எல்லா நாடுகளிலும் பொதுஜன ஆட்சி நிறுவப்பட வேண்டும்; எந்த ஒரு ராஜ்யத்திலும் நிரந்தரமாக ஒரு ராணுவம் இருக்கக்கூடாது; எந்த நாடும், வெளி நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகக் கடன் வாங்கக்கூடாது; ஐரோப்பாவிலுள்ள எல்லாச் சுதந்திர நாடுகளும் ஒரு சமஷ்டியாகச் சேர வேண்டும்; ஒரு நாட்டின் விவகாரங்களில் மற்றொரு நாடு பலாத்காரத்தைத் துணையாகக் கொண்டு தலையிடக் கூடாது; யுத்தத்தின் கொடுமைகளை எவ்வளவு தூரம் குறைக்க வேண்டுமோ அவ்வளவு தூரம் குறைக்கவேண்டும். இந்த மாதிரியான கருத்துக்கள் காண்ட்டின் திட்டத்தில் அடங்கியிருந்தன.

பத்தொன்பதாவது நூற்றூண்டில் பிரான்சில் பல புரட்சிகள் நடைபெற்றனவல்லவா, இந்தப் புரட்சிகள்தான் ஐரோப்பாவின் சமாதானத்தைக் குலைத்துவிடுகின்றன என்ற கருத்துடன் லார்ட் காஸல்ரே[2]யினுடைய முயற்சியின் பேரில் "ஐரோப்பிய இணக்கம்"[3] ஒன்று ஏற்பட்டது. இந்த இணக்கத்தில் பிரான்ஸ் மட்டும்

1 Jeremy Bentham 1748—1832.

2 Lord Castlereagh 1769—1822.

3 Concert of Europe.

சேர்த்துக் கொள்ளப்படவில்லை. ஐரோப்பாவின் பொது வான அமைதிக்கு எந்த ஒரு நாடேனும் பங்கம் விளை விக்குமாயின் அந்த நாட்டின் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்க, மேற்படி "ஐரோப்பிய இணக்கம்" அடிக்கடி கூட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது இந்த இணக்கம் 1815-ஆம் வருஷத்திலிருந்து 1913-ஆம் வருஷம் வரை உயிரோடிருந்ததென்றே சொல்ல வேண்டும். இதன் மூல மாகச் சில தகராறுகளும் தீர்க்கப்பட்டன.

மேற்படி 'ஐரோப்பிய இணக்கத்"தின் ஜீவிய காலத் தில், அதாவது 1815-ஆம் வருஷத்திலிருந்து 1913-ஆம் வருஷம் வரையுள்ள இடைப்பட்ட சுமார் நூறு வருஷ காலத்தில், சர்வதேச ஸ்தாபனமொன்று ஏற்பட வேண் டிய அவசியத்தை வலியுறுத்திப் பல திட்டங்கள் வெளி யாயின. வில்லியம் லாட்[1] என்ற ஓர் அமெரிக்கன், எல் லாக் கிறிஸ்துவ நாடுகளின் தூதர்களும் ஒரு மகாநாட் டில் கூடி சர்வதேச விவகாரங்களைப் பைசல் செய்து கொள்ள வேண்டுமென்றும், சர்வதேச நீதி ஸ்தல மொன்று நிறுவப்பட வேண்டுமென்றும் ஒரு திட்டம் வெளியிட்டான். ஜேம்ஸ் மில்லும்[2] அவனுடைய பிரபல குமாரனாகிய ஜான் ஸ்ட்டுவர்ட் மில்லும்,[3] சர்வ தேச பஞ்சாயத்து முறையை ஆதரித்துத் திட்டங்கள் வெளி யிட்டார்கள். ஒழுங்கான சர்வதேச நிருவாகம், சர்வ தேச ஒற்றுமை ஆகிய இரண்டையும் முன்னிட்டு ஐரோப் பிய நாடுகள் பலவும் ஒரு சமஷ்டியாகச் சேரவேண்டு மென்று ப்ளூண்ஷ்லி[4] என்ற ஜெர்மானிய அரசியல் பண்டிதன் ஒரு திட்டம் வகுத்தான். இங்ஙனம் பல அறிஞர்கள் சர்வதேச சங்கத்திற்கு அடிகோலி வைத்தார் கள். கடைசியாக, 1914 — 18-ஆம் வருஷ மகாயுத்தத்தி னால் ஏற்பட்ட புண்களை ஆற்றிக்கொள்ளு முகத்தான்

1 William Ladd 1778—1841.
2 James Mill 1773—1836.
3 John Stuart Mill 1806—1873.
4 Bluntschli 1808—1881.

1920-ஆம் வருஷம் "சர்வதேச சங்கம்"[1] ஸ்தாபிக்கப்பட்டது. "சர்வதேச ஒத்துழைப்பு, சர்வதேச அமைதி, சர்வதேசப் பாதுகாப்பு இவைகளின் அபிவிருத்திக்காகவும், யுத்தத்தில் இறங்கக்கூடாதென்ற நிபந்தனையை ஒப்புக்கொள்ளு முகத்தானும் தேசங்களுக்குள் பகிரங்கமான, நியாயமுள்ள, கௌரவமான உறவு முறைகள் இருக்க வேண்டுமென்பதற்காகவும், சர்வதேச சட்டங்களை அனுசரிக்கிற வகையில் எல்லா அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் இருக்க வேண்டுமென்பதற்காகவும், ஒழுங்கான அரசாங்க அமைப்பின்கீழ் வாழும் பிரஜைகளின் விஷயமாக எடுத்துக் கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளிலும் ஏற்கனவே செய்து கொள்ளப்பட்டிருக்கிற உடன்படிக்கைகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும்" இந்தச் சர்வதேச சங்கம் காணப்பட்டது. ஆனால் இந்தச் சங்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றது என்பது வாசகர்களுக்கு நன்கு தெரியுமல்லவா? இதனுடைய அடுத்த வாரிசுதான் 1946-ஆம் வருஷத் தொடக்கத்தில் தோற்றுவிக்கப்பட்ட "ஐக்கிய தேச ஸ்தாபனம்"[2]

இருபதாவது நூற்றாண்டுத் தொடக்கத்தில் உலகத்தில் மொத்தம் 425 சமாதான ஸ்தாபனங்கள் இருந்தன. தேசவாரியாக இவைகளைப் பிரிப்போமானால், டென்மார்க்கில் 94, ஸ்வீடனில் 79, ஜெர்மனியில் 72, பிரிட்டனில் 46, நார்வேயில் 38, ஸ்விட்ஜர்லாந்தில் 26, பிரான்சில் 16, அமெரிக்கா ஐக்கிய நாட்டில் 15, இத்தலியில் 13, ஆஸ்திரியாவில் 9, ஹாலந்தில் 9, ஹங்கேரியில் 2, பெல்ஜியத்தில் 1, போர்த்துகலில் 1, ருஷ்யாவில் 1, ஐப்பானிலும் ஆஸ்திரேலியாவிலும் சேர்ந்து 3 ஸ்தாபனங்கள் இருந்தன. 1914-ஆம் வருஷ யுத்தத் தொடக்கத்தின் போது மொத்தம் 26 நாடுகளில் இந்தச் சமாதான ஸ்தாபனங்கள் பரவியிருந்தன.

---

1 League of Nations

2 United Nations Organization. இது சம்பந்தமான விவரங்களுக்கு "ஐக்கிய தேச ஸ்தாபனம்" (பி, ஜோ. பி, பிரசுரம்-13) என்ற நூலைப் பார்க்க.

ஆயினும் இவைகளால் யுத்தத்தைத் தடுக்க முடியவில்லை ஏன் என்று வாசகர்கள் கேட்கலாமல்லவா? மேலே சொல்லப்பெற்ற சமாதான திட்டங்கள், ஸ்தாபனங்கள், சர்வ தேச ஸ்தாபன திட்டங்கள், இயக்கங்கள் ஆகிய யாவும் ஐரோப்பிய நாடுகளின் ஒற்றுமை அல்லது கிறிஸ்துவ நாடுகளின் ஒற்றுமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு எழுந்தன. இவைகளின் திருஷ்டியெல்லாம் ஐரோப்பாவின் எல்லையோடு நின்றுவிட்டது; அதற்குமேல் செல்லவில்லை. தவிர இவையாவும் அரசியல் விவகாரங்களில் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்பதற்காக மட்டுமே பாடுபட்டன; மற்ற விவகாரங்களில் இவை சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம், இவை தனி மனிதனுடைய வாழ்க்கையையோ ஒரு தேசத்தினுடைய வாழ்க்கையையோ மொத்தமாகப் பாராமல் தனித்தனி அறைகளாகப் பிரித்துப் பார்த்தது தான். மற்றும் இந்தச் சமாதான இயக்கங்கள், சர்வ தேச ஸ்தாபனங்கள் ஆகிய யாவும், ஏகபோக உரிமைச் சக்திகளை எதிர்த்துப் போராடும் பலமுடையனவாயில்லை. இதனால் அந்தச் சக்திகள், இந்த இயக்கங்களையும் ஸ்தாபனங்களையும் தலையோங்க விடாமல் செய்து வந்தன. இன்னும், இந்த இயக்கங்கள், ஸ்தாபனங்கள் ஆகியன, வெறும் ஏட்டுச் சுரைக்காய்களாக இருந்தனவே தவிர கிரியாம்சையில் ஒன்றையும் செய்யாமலிருந்தன. கடைசியாகத் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச சங்கமானது, ஓரளவு காரியத்தில் இறங்க ஏற்பட்டதென்பது வாஸ்தவம். ஆனால் முற்பட்ட அளவோடு அதனுடைய முற்போக்கு நின்றுவிட்டது. அதில் அங்கத்தினராகச் சேர்ந்திருந்த வல்லரசுகள், தங்கள் உரிமைகளை ஊர்ஜிதம் செய்து கொள்வதிலும் வலுப்படுத்திக் கொள்வதிலும் கவனஞ் செலுத்தினவே தவிர, தங்களைத் தவிர்த்த மற்றவர்கள் விஷயத்தில் தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும் செய்யவேண்டிய கடமைகளையும் மறந்து விட்டன. 1936-ஆம் வருஷம் இத்தலியின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து எத்தியோப்பியா எழுப்பிய கூக்குரல் சர்வ

தேச சங்கத்தின் காதிலேயே விழாமல் போய்விட்டதென் பதை இங்கு வாசகர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். அது முதற் கொண்டே அந்தச் சங்கத்தின் தேய்பிறைக் காலம் ஆரம்பித்து விட்டதென்று சொல்லவேண்டும்.

இத்தகைய காரணங்களினால் மேற்சொன்ன சமா தான இயக்கங்கள், சர்வதேச ஸ்தாபனங்கள் ஆகிய யாவும் தங்கள் நோக்கத்தில் சித்தி பெருமற் போயின. அப்படியானால் இனிச் செய்ய வேண்டுவது யாது? உலக சமாதானத்திற்கு வழியென்ன?

# 5. சமாதானத்திற்கு வழி

உலகத்திலுள்ள பிரதியொரு ராஜ்யமும், தன்னுடைய ராணுவ பலத்தை, உள்நாட்டுப் பாதுகாப்புக்கு எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு மட்டும் வைத்துக் கொள்ளவேண்டும், அதற்குமேல் அதிகரித்துக்கொள்ளக் கூடாது என்று நிர்ணயப்படுத்திவிட்டால், சண்டைகள் ஏற்படுவதற்கு வழியில்லை என்று சிலர் கருதி வந்தார்கள்; இன்னமும் சிலர் இப்படிக் கருதுகிறார்களோ என்னவோ தெரியாது. இங்ஙனம் கருதுகிறவர்கள் இருப்பார்களானால் இவர்களை, படித்தும் பயன் பெறாதவர்களென்று தான் சொல்லவேண்டும்.

ராணுவ பலத்தை வரையறுத்துவிட வேண்டுமென்று சொல்கிறவர்களுடைய அடிப்படையான எண்ணம் என்னவென்றால், உலகத்தில் சண்டைகள் உண்டாவதெல்லாம் ஆயுதங்களினால் தான், ஆதலின் அந்த ஆயுதங்களையும், அவைகளை உபயோகப்படுத்துகிற சந்தர்ப்பங்களையும் குறைவுபடுத்திவிட்டால் யுத்தங்கள் ஏற்படுவதற்கு ஏதுவில்லாமற் போகிறது என்பதுதான். ஆனால் இந்த எண்ணமே தவறு. ஆயுதங்கள் கண்டு பிடிக்கப் படாத காலத்தில், ஜனங்கள், கையினாலும், காலினாலும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்; கழிகளும், கற்களும் யுத்தக் கருவிகளாக உபயோகிக்கப்பட்டன. ஆயுதங்கள் அதிகப்படியான உபயோகத்தில் இல்லாத காலத்திலும் உலகத்தில் சண்டைகள் நடைபெறவில்லையா? ஜனங்கள் லட்சக் கணக்கில் மடியவில்லையா? எனவே, ஆயுதங்கள், யுத்தத்திற்குக் காரணமல்ல; அவை யுத்தம் நடைபெறுவதற்கான சாதனங்கள் தான். இந்தச் சாதனங்களின் உபயோகத்தைக் குறைத்துக் கொள்வதினால் யுத்தத்தின் வேகம் குறையலாமென்று சொல்ல

திலே அர்த்தமிருக்கிறது. ஆனால் இந்தச் சாதனங்களை உபயோகியாமலிருந்தால் யுத்தமே நின்றுவிடும் என்று சொல்வதிலே அர்த்தமில்லை.

யுத்தத்தின் உற்பத்தி ஸ்தானம் மனிதர்களுடைய மனந்தான். மனத்திலே எழும் பகைமை, பொறாமை, முதலிய மாசுக்களை அப்புறப்படுத்திவிட்டு அவைகளின் ஸ்தானத்தில் பரஸ்பர நல்லெண்ணம், நம்பிக்கை முதலிய வைகளை நிலைபெறச் செய்வார்களானால் யுத்தம் தோன்று வதற்கான காரணங்களே இல்லாமற் போகின்றன; நிலை யான சமாதானம் நிலவுவதற்குத் தகுதியான சூழ்நிலை ஏற்படுகிறது.

ஒரு தேசத்தின் ஆயுத பலத்தை ஒரு வரையறைக்குட் படுத்துவதன் மூலம் உலகத்தில் யுத்தங்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம் என்ற இந்த எண்ணம் இருக்கிறதே இதனை, ஒரு பிரச்னையாகவே எடுத்துக்கொண்டு ஆதிகாலத்தி லிருந்து அநேக அறிஞர்கள் ஆராய்ச்சி செய்திருக்கிறார் கள்; ராஜதந்திரிகள் பலர் இதனை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சியும் செய்திருக்கிறார்கள். ஆனால் யாரும் வெற்றிபெறவே இல்லை. 1921-ஆம் வருஷம் நவம்பர் மாதம் வாஷிங்க்டன் நகரத்தில் கூட்டப்பெற்ற மகாநாடுதான், முதன் முதலாகக் கூட்டப்பெற்ற ஆயுதப் பரிகரண மகாநாடு என்று வாசகர்கள் கருதவேண்டாம். கிறிஸ்து பிறப்பதற்கு 546 வருஷங்களுக்கு முந்தியே சீனா இது விஷயத்தில் சிரத்தை காட்டியிருக்கிறது. ஆயுதங் களின் உபயோகத்தைக் குறைக்கவேண்டுமென்று சீன ராஜதந்திரிகள் சில திட்டங்கள் வகுத்து அவைகளை நடை முறையில் கொணரப் பிரயத்தனப்பட்டிருக்கிறார்கள், இந்த ஆயுதப் பரிகரண விஷயத்திலும் ஆசியாதான் முதன் முதலாக வழி காட்டியது என்பதை இங்குச் சிறிது பெருமையோடு வாசகர்களுக்குத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறோம்.

பழைய சரித்திரம் ஒருபுறமிருக்கட்டும்; பத்தொன்பதாவது நூற்றுண்டில், ஐரோப்பாவில் இந்த ஆயுதப் பரிகரணப் பிரச்னை, ராஜதந்திரிகளுடைய கவனத்தின் முன்னணியில் வந்து நின்றிருக்கிறது. பர்ரிட் என்பவனுடைய முயற்சியின்பேரில் ஐரோப்பாவில் சில சமாதான மகாநாடுகள்[1] கூடினவென்று முன்னே சொல்லியிருக்கிறேமல்லவா, இந்த மகாநாடுகளில் ஒன்று 1848-ஆம் வருஷம் செப்டம்பர் மாதம் இருபதாந் தேதி ப்ரஸ்ஸெல்ஸ் நகரத்தில் கூடியது. ஏழு நாடுகள் இதில் கலந்துகொண்டன. முந்நூறு பிரதிநிதிகள் ஆஜராயிருந்தார்கள். ஆயுதப் பரிகரண விஷயத்தில் பிரிட்டனும் அமெரிக்காவும் வழிகாட்டவேண்டுமென்று இந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தைப்பற்றி வாதம் நடைபெறுகையில், பெல்ஜிய தேசத்துப் பிரதிநிதியொருவன், "ஆயுத பலத்தை வரையறுத்துக்கொள்ளவேண்டிய காலம் வந்துவிட்டது. பெரிய யுத்த தந்திரி என்று சொல்லப்படுகிறவன் யார்? புத்திசாலியான ஒரு கொலைகாரன் தானே?" என்று படபடத்துக் கூறி, அப்பொழுதைய ஐரோப்பிய மகா ஜனங்களுக்கு யுத்தத்தின் மீதிருந்த அருவருப்பை வெளிப்படுத்தினுன். ஆயினும் என்ன? 1848-ஆம் வருஷத்திற்குப் பிறகு ஐரோப்பிய நாடுகள் எந்த அளவுக்குத் தங்கள் ஆயுத பலத்தைக் குறைத்துக்கொண்டன, பிரிட்டனும் அமெரிக்காவும் எவ்வளவு தூரம் வழிகாட்டின என்பவைகளைப்பற்றி நாம் விஸ்தரித்துச்சொல்ல விரும்பவில்லை. 1849-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் பாரிஸ் மாநகரில் கூடிய சமாதான மகாநாட்டில் விக்டர் ஹ்யூகோ[2] என்ற பிரெஞ்சு அறிஞன் பேசுகையில், அந்த வருஷத்திற்கு முந்தின முப்பத்துநான்கு வருஷங்களில், 12,80,00,000 பவுன், ஆயுதங்களுக்காகச் செலவழிக்கப்பட்டிருக்கிறதென்று ஒரு கணக்குப் போட்டுக் காட்டினுன். கேவலம் உயிர்க் கொலைக்காகச் செலவழிக்கப்படு

1 71-ஆம் பக்கம் பார்க்க.

2 Victor Hugo 1802—1885.

இன்ற இந்தச் செலவு நிற்கவேண்டுமென்றும், அப்படி நின்று, யுத்தங்களில் உபயோகப்படுகின்ற பீரங்கிகள், பொருட்காட்சிப் பொருள்களாகும் காலத்தை, தான் எதிர்பார்ப்பதாகவும், இவன் மேற்படி மகாநாட்டில் கூறி ஞன். ஆனால் ஹ்யூகோ! உன்னுடைய கோரிக்கை, உன் காலத்திலேயே பகற்கனவாகப் போய்விட்டது!

பிரெஞ்சுக் குடியரசின் தலைவனாயிருந்த மூன்ருவது நெப்போலியன்[1] என்பவன், சர்வதேச ஆயுதப் பரிகரண மகாநாடு ஒன்று உடனே கூட்டப்படவேண்டுமென்று ஒரு திட்டம் வெளியிட்டான். இந்தத் திட்டத்தை "கிரேட் பிரிட்டனைத் தவிர மற்ற ஐரோப்பா பூராவும் வரவேற்றது; ஆனல் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருகிற விஷயத்தில், ஐரோப்பா முழுவதும் இதனைப் புறக்கணித்து விட்டது."

இங்ஙனம் பலதடவை ஆயுதப் பரிகரண முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனல் எல்லாம் பேச்சளவோடு நின்று போயினவே தவிர காரியத்தில் ஒன்றும் பலிக்க வில்லை. அதற்கு மாருக, ஆயுதப் பரிகரணப் பேச்சுகள் வலுக்க வலுக்க, அந்த விகிதாசாரத்திற்கு, ஆயுதப் பெருக்க முயற்சிகள் அதிகரித்துக்கொண்டு வந்திருக்கின் றன.

1921-ஆம் வருஷம் வாஷிங்க்ட்டன் நகரத்தில் ஆயுதப் பரிகரணப் பேச்சுகள் தொடங்கப்பட்டனவல்லவா, அதற்குப் பிறகு 1927-ஆம் வருஷத்திலிருந்து 1930-ஆம் வருஷம் வரை உலகத்துச் சில முக்கிய வல்லரசுகள் யுத்த தளவாடங்களுக்கு எவ்வளவு பணம் செலவழித்து வந் திருக்கின்றன என்பதைப் பின்வரும் புள்ளி விவரத்தினல் தெரிந்து கொள்ளலாம்.

---

1 Napoleon III 1808—1873.

| வல்லரசுகளின் பெயர் | 1927—28 ரூபாய் | 1928—29 ரூபாய் | 1929—30 ரூபாய் |
|---|---|---|---|
| அமெரிக்கா (ஐக்கிய நாடுகள்) | 1,87,38,00,000 | 2,05,41,00,000 | 2,22,30,00,000 |
| கிரேட் பிரிட்டன் | 1,71,22,75,200 | 1,65,43,92,000 | 1,64,18,53,800 |
| பிரான்ஸ் | 1,38,46,29,000 | 1,22,37,30,000 | 1,56,97,20,000 |
| இத்தலி | 81,80,70,072 | 73,22,06,280 | 70,26,87,960 |
| ஜப்பான் | 72,27,09,330 | 71,71,06,020 | 74,16,87,960 |
| மொத்தம் | 6,51,14,83,602 | 6,38,15,34,300 | 6,87,89,49,720 |

இங்ஙனம் யுத்த தளவாடங்களுக்காகச் செலவழிக்கப்படும் தொகையானது வரவர அதிகரித்துக் கொண்டு வருவதைப் பார்த்த வல்லரசுகள், மறுபடியும் தங்கள் தங்கள் ஆயுத பலத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்ற முயற்சியில் இறங்கின. 1932-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் மற்ருேர் ஆயுதப் பரிகரண மகாநாடு கூடியது. 1933-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் வரையில் இதன் நடவடிக்கைகள் நடைபெற்றன. கடைசியில் எவ்வித முடிவுக்கும் வராமல் மகாநாடு கலைந்தது. இப்படிக் கலைந்து சரியாக ஆறு வருஷங் கழித்து இரண்டாவது உலக மகாயுத்தம் துவங்கிவிட்டது.

எதற்காக இவ்வளவு தூரம் சொல்கிருேமென்ருல், யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொண்டுவிடுவதனுல் மட்டும் யுத்தம் வராமலிராது, சமாதானம் ஏற்பட்டு விடாது என்பதை வலியுறுத்துவதற்குத்தான்.

யுத்தம் ஏற்படுவதற்குப் பல காரணங்களுண்டு. அந்தக்காரணங்களை அலசி ஆராய்ந்து அகற்றவேண்டும்.

ஒரு தேசத்தினுடைய அரசியல் தலைவர்கள், நீண்ட காலமாகவே போட்டு வந்திருக்கிற திட்டங்கள் அனுசரித்து வந்திருக்கிற கொள்கைகள் இவைகளின் விளைவாக யுத்தம் உண்டாகலாம். அல்லது தலைமுறை தலைமுறையாக ஜனங்களிடத்திலே ஊறிப் போயிருக்கிற நம்பிக்கைகள், அந்த நம்பிக்கைகளுக்கு அவர்கள் வைத்திருக்கிற மதிப்பு, அந்த மதிப்பை அடிப்படையாகக் கொண்டு நிலவும் எண்ணப்போக்கு, இவை காரணமாகவும் யுத்தம் ஏற்படலாம். அல்லது ஜனங்களுக்கு உள்ளூரவோ வெளிப்படையாகவோ சில ஆசைகள் இருக்கும்; அந்த ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள யுத்தத்தில் பிரவேசிக்கலாம். அல்லது, தாங்கள் யாரைச் சத்துருக்களாகக் கருதிக் கொண்டிருக்கிறார்களோ அவர்களைப்பற்றி விபரீதமான சந்தேகங் கொண்டு, அதனால் பயமடைந்து, அந்த பயத்தின் காரணமாக யுத்தத்தில் ஒரு தேசத்தினர் இறங்கலாம் அல்லது ஒரு நாட்டை வெற்றி கொள்வதனால் பெருமையுண்டு, அந்தப் பெருமை நமக்குக் கிட்டவேண்டுமென்ற எண்ண மேலீட்டினாலோ, ஒரு நாட்டிலுள்ள பொருள்களுக்கு ஆசைப்பட்டோ, ஒரு நாட்டின்மீது ஆதிக்கஞ் செலுத்த வேண்டுமென்ற அதிகார ஆசையினாலோ யுத்தம் நிகழலாம். அல்லது தங்களுடைய சொத்து சுதந்திரங்களுக்கு ஆபத்து ஏற்பட்டு விட்டதாக உணர்ந்து அவைகளைக் காப்பாற்றும் பொருட்டு போரில் தலையிடலாம். அல்லது ஒரு நாட்டு ஜனங்கள், ஏதோ ஒருவித வெறியினால் யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்று கூக்குரலிடுவார்களானால், அந்த கூக்குரலுக்குச் செவி சாய்க்கு முகத்தான் அந்த நாட்டு அரசாங்கம், யுத்தத்தில் இறங்குகிறது. அல்லது தேசத்தின் தன்மதிப்புக்குப் பங்கம் ஏற்பட்டுவிட்டதென்று கருதி அதற்குப் பரிகாரந் தேடுகிற வகையில் யுத்தம் மூளுவதுண்டு. அல்லது உள் நாட்டிலே குழப்பங்கள் ஏற்பட்டால் அவைகளைச் சமாளிக்க முடியாத நிலையில் ஜனங்களுடைய கவனத்தை வேறு பக்கம் திருப்புவதற்காக அந்த நாட்டு அரசாங்கத்தினர் அண்டை அயலிலுள்ள நாடுகளை வலுச்

சண்டைக்கிழுப்பதுண்டு. இன்னோரன்ன காரணங்களி னால் யுத்தங்கள் உண்டாகின்றன. இந்தக் காரணங்களை அகற்ற வேண்டுமானால் ஜனங்களுடைய மனப்பான் மையை மாற்றவேண்டும்.

ஜனங்களுடைய மனப்பான்மையை மாற்றுவது எப்படி? கல்வியின் மூலமாகத்தான். மனிதனிடத்திலே அடங்கிக் கிடக்கும் மேலான தன்மைகளைக் கல்வி யெடுத்து வெளிக்குக் கொண்டு வருவது எதுவோ அது தான் கல்வி. இத்தகைய கல்வியையே சிறுவர், சிறுமியர் களுக்குப் புகட்டவேண்டும்.

சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுகளில், கல்வி முறையைப் பொறுத்த மட்டில் உலகத்துப் பல நாடுகளி லும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. இவைகளினால் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன வென்பது வாஸ்தவம். ஆனால் இந்த நன்மைகள் அந் தந்த நாட்டு அளவோடு நின்றுவிட்டனவே தவிர, உலகப் பொதுவுக்குப் பரவவில்லை. தேசியம் தேவைதான்; தேசிய சக்திகள் வளர்ச்சி பெற வேண்டியது தான்; ஆனால் சர்வ தேசீயத்திற்கு, உலகப் பொதுவுக்கு விரோத மாகவல்ல. சர்வ தேசீயத்தைத் தழுவிக் கொண்டிராத தேசீயம், காற்றில்லாத வீடு மாதிரி. காற்றில்லாத வீடு வியாதிகள் உண்டாவதற்குஏதுவாயிருப்பதுபோல், தனிப் பட்ட தேசீயத்தினால் சுயநலம், தான் என்ற மமதை, பிறர் விஷயத்தில் அலட்சியம் ஆகிய சுபாவங்களே ஆக்கம் பெறும். ஓர் அறிஞன் கூறுகிறான்,—"தேசீயம் என்கிற இந்த எண்ணம் இருக்கிறதே இது மிகவும் கேவலமா னது; சுயநலம் வாய்ந்தது; கிறிஸ்துவத் தன்மையற்றது; முற்போக்கான நாகரிகத்திற்கு முற்றிலும் விரோதமா னது. இந்தத் தேசீய எண்ணத்தை வளர்க்கிறவர்கள், இது விஷயமாகக் காட்டும் உற்சாகத்தைப் போல் இன் னமும் தீவிரமாகக் காட்டத் தொடங்குவார்களானால், உலக சமாதானத்திற்கு மட்டுமல்ல, எல்லாவித முன்னேற் றத்திற்கும், நல்ல அரசாங்கத்திற்கும் ஆபத்து ஏற்படும்.

ஆதலின், தேசீயத்திற்கு முரண்பாடில்லாத சர்வ தேசீய உணர்ச்சியை உண்டு பண்ணக்கூடிய கல்விமுறை பரவுமாறு செய்யவேண்டும்.''

ஆனால் இஃது எப்படி சாத்தியம், தேசீயம் அழிந்தது தானே சர்வதேசீயம் என்று சிலர் கேட்கலாம். இல்லவே இல்லை. தேசீயம் உயிர் என்றால் சர்வ தேசீயம் உடல்; தேசீயம் வேரென்றால் சர்வ தேசீயம் விருட்சம் உயிரும் உடலும், வேரும் விருட்சமும் ஒன்றாயிருப்பது சாத்திய மென்றால், தேசீயமும் சர்வ தேசீயமும் ஒன்றாயிருப்பது ஏன் அசாத்தியம்? இது விஷயத்தில் ஆசியா, எத்தனையோ ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னரிருந்தே வழி காட்டி வந்திருக்கிறது இந்த வழிகாட்டியின் விளக்காயமைந்தவரல்லவா காந்தியடிகள்? உலகத்திலுள்ள சர்வ ஜனங்களும் சௌக்கியமாயிருக்க வேண்டும், உலகமெங்கும் செழித்திருக்க வேண்டும் என்பன போன்ற கருத்துக்களே, ஆசிய மக்களின் அன்றாடப் பிரார்த்தனையாயிருந்து வந்திருக்கிறது. உலகத்தின் எந்த மூலை முடுக்கில் நல்லது ஒன்று இருக்கிறதென்று தெரிந்தால் அதனை அறியவும், அதனைக் கடைப்பிடிக்கவும் ஆசிய மக்கள் முயன்றிருக்கிறார்கள். அறிவையும் அன்பையும் பரிவர்த்தனை செய்து கொள்கிற விஷயத்தில் அவர்கள், நாடு, மதம், மொழி, சமூகம் முதலிய எந்த விதமான வேற்றுமைகளையும் பாராட்டியதே கிடையாது.

"தேசீயத்தோடு சர்வ தேசீயத்தையும், அஹிம்சையோடு வெற்றியையும் இணைக்கத் தெரிந்துகொண்டிருக்கிற உலகத்துச் சிறந்த ராஜ தந்திரி" என்று காந்தியடிகளுக்குப் புகழ்மாலை சூட்டுகிறான் ஜார்ஜ் காட்லின்[1] என்ற அறிஞன். தேசீயத்தையும் சர்வ தேசீயத்தையும் வாழ்க்கையிலே இணைத்து வாழ்ந்து காட்டுகிற ஒரு மகானை நம் கண் முன்னர் பார்த்துக் கொண்டிருக்கிற போது, அந்த இரண்டும் ஒன்றுபடாது, முரண்பட்டு நிற்கும் என்று சொல்வது எப்படிப் பொருந்தும்?

1 George Catlin.

உலக திருஷ்டி கொண்டு போதிக்கப்படுகிற கல்வி முறை இப்படி யிருக்க வேண்டுமென்பதைப் பற்றி அறிஞர்கள் அவ்வப்பொழுது பல யோசனைகளைச் சொல்லி வந்திருக்கிறார்கள் இந்த யோசனைகளையெல்லாம் திரட்டிச் சாரமாகச் சொல்லவேண்டுமானால், இளைஞர்கள் கல்வி பயிலுங் காலத்தில், அவர்களுக்கு மனச்சோர்வு ஏற்பட்டு பிறகு வாழ்க்கையில் ஒருவித வெறுப்பு அல்லது அசிரத்தை உண்டாகாதிருக்குமாறு செய்ய வேண்டும்; சகல விதங்களிலும் வளமுடைய ஒரு சூழ்நிலையில், தான் வாழ்ந்துகொண்டிருப்பதாகப் பிரதியோர் இளைஞனும உணரவேண்டும்; தன்னுடைய உயிருக்கோ, பொருளுக்கோ, மானத்துக்கோ எவ்வித ஆபத்தும் எப்பொழுதும் ஏற்படாதென்ற ஒரு நம்பிக்கைச் சூழலின் மத்தியில் படிக்கவேண்டும்; எதிலும் ஒரு நிதானம் இருக்குமாறு செய்யவேண்டும்; தன்னம்பிக்கையை வளரச் செய்யவேண்டும்; பரஸ்பர உதவி, பரஸ்பர நம்பிக்கை இவைகளினால்தான் வாழ்க்கை வளம்பெறுகிறதென்ற உண்மையை உணருமாறு செய்யவேண்டும்; பொதுமை எண்ணத்தை வளர்க்கவேண்டும்; உரிமையைக் காட்டிலும் கடமையிலே பற்றுள்ளங் கொள்ளுமாறு செய்ய வேண்டும்; அறிவைக் கூர்மைப் படுத்துவதோடு இருதயத்தையும் விசாலப் படுத்தவேண்டும்; இன்னோரன்ன கருத்துக்களை உலகத்துக் கல்வி நிபுணர்கள் மனத்திலே கொண்டு கல்விமுறையை நிர்மாணஞ் செய்வார்களானால், உலகத்தில் சமாதானம் ஏற்பட வழி பிறக்கும்.

உலக சமாதானம் என்பது என்ன? தனிமனிதனுடைய சமாதானத்தின் விரிவுதானே? இந்தத் தனி மனிதனிடத்தில் போர்த்தன்மைகள் ஏதேனும் இருந்தால் அவைகளை அகற்றி, அவைகளின் ஸ்தானத்தில் சமாதான எண்ணங்கள் நிலைபெறும்படியான ஒரு கல்வித் திட்டத்தையே பிரதியோர் அரசாங்கமும் வகுக்கவேண்டும் அரசாங்கமானது, தன்னுடைய நோக்கத்திற்கிணங்க கல்வி முறையை வகுக்காமல், ஜனங்களை நல்வழிப்படுத்து

வதையே நோக்கமாகக் கொள்ளவேண்டும். அதாவது, கல்வி ஸ்தாபனங்கள், அரசாங்கத்தின் பிரசார பீடங்களாக இராமல், ஜனங்களுடைய மேலான சுபாவங்களை வளர்க்கும் செழுமண் பூமிகளாயிருக்கவேண்டும். இந்தக் கல்வி ஸ்தாபனங்களுக்குப் பொருளுதவி செய்வது அரசாங்கத்தின் கடமை. இதைத் தவிர்த்து அந்த ஸ்தாபனங்களின் நடைமுறையிலோ, அவைகளின் பாடக் கிரமத்திலோ அரசாங்கம் தலையிடுமானால், அஃது, அதன் அத்துமீறின செயலேயாகும். இங்ஙனம் ஆதரவு கொடுக்கிற அளவோடு அரசாங்கம் நின்றுவிடுமானால், அதற்கு மேல் அனுவசியமாகத் தலையிடாதிருக்குமானால், தேசத்தின் இலக்கியம், கலை முதலியன சுதந்திர கோலந்தாங்கி, வாழையடி வாழையென வளர்ச்சிபெறும். பூர்விக இந்தியாவில். கல்வி முறை இப்படித்தான் அமைந்திருந்தது, கல்வி ஸ்தாபனங்களின் போஷகர் ஸ்தானத்தில் அரசாங்கம் இருந்ததே தவிர, அவைகளுக்கு வழி காட்டவோ, அவைகளை வழிநடத்திச் செல்லவோ இல்லை. இதன் விளைவு என்னவென்றால், அரச பீடங்களின் மாற்றத்தினால். சமுதாய ஒழுங்கு எப்படிக் குலையாமலிருந்ததோ அப்படியே கல்வி முறையும் மாறாமலிருந்தது; தேசத்தின் கலாசாரங்கள் கட்டுக் குலையாமலிருந்தன.

அரசாங்கத்தின் பிரசார பீடங்களாகக் கல்வி ஸ்தாபனங்கள் இருக்குமானால் அதன் விளைவு என்னவென்பதை இத்தலியிலும் ஜெர்மனியிலும் கண்கூடாகக் கண்டோம். 1923-ஆம் வருஷம் இத்தலியில், முஸோலினி[1] அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக்கொண்டதும். முதன் முதலாகக் கல்வி முறையைச் சீர்திருத்த வேண்டுமென்று சொல்லி, கல்விச்சாலைகளில் பாசிஸக் கொள்கைகளைப் புகுத்தினான்; தேசத்தின் சிறுவர் சிறுமிகளை பாசிஸ்ட்டுகளாக்கினான்; "பசுக்களுக்கும் பெண்களுக்கும் பிரிட்டிஷாருக்குந்தான் சமாதானம் தேவை" யென்று சொல்லி சமாதானத்தைப் பரிகசித்தான். கடைசியில் என்ன

1 Mussolini; 1883-1945.

சண்டான்? தானும் அழிந்து, தான் சிருஷ்டித்த பாசிஸ்ட் இத்தலியையும் அழித்துவிட்டான். இதே காரணத்தினால் தான், அதாவது அரசாங்கத்தின் பிரசார பீடங்களாகக் கல்வி ஸ்தாபனங்களை ஆக்கிவிட்ட காரணத்தினால் தான் ஹிட்லருடைய[1] வாழ்வு, மின்னல் வாழ்வாக, பத்து வருஷத்திற்குள்ளே முடிந்துவிட்டது; அவன் கண்ட நாஜி ஜெர்மனியும் நிரபராதிகளான ஜனங்களின் - ஆம்; லட்சக்கணக்கான ஜனங்களின் - சாபத்தீயிலே வெந்து விட்டது.

ஆதலின் உலகத்திலுள்ள பிரதியோர் அரசாங்கமும், தன்னுடைய பிரஜைகளுக்கு, யுத்தத்தினால் ஏற்படக்கூடிய கஷ்ட நிஷ்டூரங்களை நன்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்கு முதற்படியாக, பள்ளிக்கூடத்துச் சரித்திர பாட புத்தகங்களைத் திருத்தி எழுதுவிக்க வேண்டும். இங்ஙனம சரித்திர புத்தகங்கள் திருத்தி எழுதப்பட வேண்டுமென்ற எண்ணம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஐரோப்பாவில் கூடிய சமாதான மகாநாடுகள் பலவற்றிலும் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள் அறிஞர்கள். உதாரணமாக 1890-ஆம் வருஷம் ஜூலை மாதம் லண்டனில் கூடிய ஒரு சமாதான மகாநாட்டில், உலகத்திலுள்ள சரித்திராசிரியர்கள் அனைவரும், தங்கள் சரித்திர நூல்களில் யுத்தத்தின் கொடுமைகளையும் அவைகளின் நிஷ்பிரயோஜனத்தையும் வலியுறுத்தி எழுத வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சர்வதேச ஐக்கியத்தை வளர்ப்பதற்காக, சர்வ தேசியப் பத்திரிகையொன்று தொடங்கப்பட வேண்டுமென்று மேற்படி மகாநாட்டில் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்த நல்ல எண்ணங்களெல்லாம் தீர்மான அளவோடு நின்றுவிட்டன; செயல் ரூபமாக வெளிவரவில்லை. இனியேனும், இரண்டாவது உலக மகா யுத்தத்தின் கொடுமைகளை அனுபவித்த பிறகேனும்,

1 Hitler: 1889-1945.

உலகத்துச் சரித்திராசிரியர்களே, உங்கள் சரித்திர நூல்களை மேற்சொன்ன வகையில் எழுத முற்படுங்கள்.

ஆனால் யுத்தத்தின் கொடுமைகளை வருணித்துக் காட்டுவதோடு நின்றுவிடக் கூடாது; சமாதானத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளை எடுத்துச் சொல்லவேண்டும். சமாதானத்திற்காகப் பாடுபட்டவர்களுடைய வரலாறுகளை இளைஞர்களின் மனத்தில் பதியவைக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் சரித்திர பாடம் போதிக்கும் ஆசிரியர்களே, இந்த விஷயத்தில் உங்கள் பொறுப்பு மகத்தானது; வருங்கால உலக சமாதானக் கோயிலை நிர்மாணிக்கிற திருப்பணி உங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இங்ஙனம் நூலாசிரியர்கள், போதகாசிரியர்கள் ஆகிய எல்லோரும் சமாதான தேவதையின் மீது தங்கள் பார்வையைச் செலுத்தவேண்டுமானால், முதலில், பிரதியொரு நாட்டு அரசாங்கமும், தன் கவனத்தைமட்டுமல்ல, தன் சக்தியனைத்தையும் சமாதானத்திற்காகச் செலவழிக்க வேண்டும். அதாவது அரசாங்கத்தின் செல்வம், செல்வாக்கு ஆகிய இரண்டும சமாதான காரியங்களுக்காக மட்டுமே உபயோகப்பட வேண்டும். ஜனங்களுடைய வாழ்க்கை நிலைமையை உயர்த்துதல், சமுதாய ஒற்றுமையை வளர்த்தல், எல்லோரும் கல்வியறிவு பெற வசதிகள் செய்து கொடுத்தல், பிரதியொரு நபருக்கும், அவருடைய திறமையை உபயோகிக்கவோ, அப்படி உபயோகித்து, தன் வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவோ சந்தர்ப்பங்கள் இருக்கும்படி செய்தல், பொருள் பலத்தைக்கொண்டு ஒருவரையொருவர் அடக்கி ஆளாமலிருக்க வகை ஏற்படுத்துதல், இந்த மாதிரியான காரியங்களுக்காகவே அரசாங்கத்தின் செலவினங்கள் இருக்கவேண்டும். இப்படியெல்லாம் செய்வது, அந்தந்த நாட்டின் நாகரிக பரம்பரையை அனுசரித்ததாகவும், தேசிய வாழ்வை வளம்படுத்துவதாகவும் இருக்கவேண்டுமென்பதோடுகூட, உலக ஒற்றுமையையும், உலக சமாதானத்தையும் நாடுவதாக இருக்கவேண்டும்.

யுத்தமில்லாமலிருப்பது மட்டும் சமாதானமல்ல; நல்வாழ்வு நடத்துவதற்கான சந்தர்ப்பங்களை அதிகமாக அளிக்கக்கூடிய ஒரு சூழ்நிலைதான் சமாதானம். சமாதானத்திற்கு இலக்கணம் சொல்ல வேண்டுமானால், உழைப்பின் பலனை, எவ்வித வெளிக் கட்டுப்பாடுகளுமின்றி, அமைதியாக இருந்து அனுபவிப்பதற்கு ஏதுவாயிருப்பது எதுவோ அதுதான் சமாதானம் என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

சிலர் நினைக்கிறார்கள், சமாதானமென்பது செயலற்ற ஒரு நிலையென்று. இல்லவே இல்லை. செயல் நிறைந்த ஒரு நிலைதான் சமாதான நிலை. அதில், நல்லதைச் செய்ய வேண்டுமென்கிற துடிதுடிப்பும், மின்சார வேகத்தில் காரியங்களைச் செய்துகொண்டிருக்க வேண்டுமென்கிற ஆவலும், பிரதியொரு மனிதனும் சான்றோனாக வாழ வேண்டுமென்கிற சிரத்தையும், சிரம் அற்றுப் போனாலும் சீலம் பிறழக்கூடாது என்கிற உறுதியும் அடங்கியிருக்கின்றன அங்கு, கோழைத்தனத்திற்கு இடமில்லை; அச்சத்திற்கு இடமில்லை. இவ்விரண்டும் இல்லாத காரணத்தினால் அங்கு, துரோகம், துவேஷம் முதலிய வியாதிகள் பரவுவதில்லை. அங்கு, சங்கீதத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அவ்வளவு முக்கியத்துவம் வீரத்திற்கும் கொடுக்கப்படுகிறது. அங்கு, பணிவுக்கு எவ்வளவு பெருமையுண்டோ அவ்வளவு பெருமை, நிமிர்ந்த நடைக்கும் உண்டு. அங்கு, துறவுக்குள்ள பெருமை வாழ்க்கைக்குமுண்டு. இத்தகைய சமாதான நிலைதான் உலகத்தில் ஏற்பட வேண்டும்.

எந்த நாட்டில் அரசாங்கம் வேறாகவும் குடிகள் வேறாகவும், எந்த நாட்டில் அரசாங்கத்தின் நலன் வேறாகவும் குடிகளின் நலன் வேறாகவும் இருக்கிறதோ, அந்த நாட்டில் அடிக்கடி சமாதான பங்கம் ஏற்படுவதைச் சரித்திரத்தில் பரக்கக் காணலாம். அரசாங்கமானது

ஜனங்களுடைய நல்வாழ்வுக்கு, தான் பொறுப்பில்லையென்று கருதி விடுகிறது. இங்ஙனமே ஜனங்களும், அரசாங்கத்தின் ஸ்திரத் தன்மைக்கு, அதனுடைய நற்பெயருக்குத் தாங்கள் பொறுப்பில்லையென்று கருதி விடுகிறார்கள். ஒருவருடைய க்ஷேமத்திலே மற்றொருவருக்கு அக்கறை ஏற்படுவதில்லை. விளைவு என்ன? ஜனங்கள், அரசாங்கத்திற்கு விரோதமாகச் சூழ்ச்சி செய்கிறார்கள்; கலகம் விளைவிக்கிறார்கள். இவைகளுக்குப் பிரதியாக, அரசாங்கமானது, ஜனங்களுக்கு விரோதமாக அடக்கு முறைகளைப் பிரயோகிக்கிறது; சிறைச்சாலைகள் விஸ்தீரணமடைகின்றன; தூக்கு மரங்களுக்கு வேலை இருந்து கொண்டிருக்கிறது. நாட்டில் ஒரே குழப்பம். பொருளுற்பத்தி சுருங்குகிறது; சமுதாய வாழ்வு சீர்குலைகிறது; ஜனங்கள் ஏக்கமடைந்தவர்களாய் தன்னம்பிக்கை இழந்து விடுகிறார்கள் அமைதிக்கு இடமெங்கே? இந்த நிலை, பெரும்பாலான நாடுகளில் இருக்குமானால், உலகத்தில் பொதுவாக சமாதானத்திற்கு ஹானி உண்டாகிறது.

ஆதலின் பிரதியொரு நாட்டிலும், அந்த நாட்டு மக்களுடைய அரசாங்கமே நடைபெறுமாறு செய்யவேண்டும். அந்த அரசாங்க அமைப்பு, அந்த நாட்டுக் கலாசாரம், பரம்பரை, நாகரிகம் இவைகளை அனுசரித்தாற்போலவே இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த ஜனங்களுடைய மேலான தன்மைகளெல்லாம் விகாசமடையும். சுதந்திர வாழ்வானது, ஜனங்களிடத்தில் தன்னம்பிக்கையை உண்டுபண்ணுகிறது தன்னம்பிக்கையுடையவர்கள், மற்றவர்களிடத்தில் அவநம்பிக்கை கொள்வதில்லை. இதனால் ஒரு நாடடுக்கும் மற்றொரு நாட்டுக்கும் சுமுகமான உறவு முறைகள் ஏற்படுகின்றன. உலகத்துக்குப் பொதுவான ஓர் ஆபத்து ஏற்படுமென்று தெரிந்தால், அதை எல்லா நாட்டாரும் சேர்ந்து சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கையும், சமாளிக்கவேண்டுமென்ற உறுதியும் உண்டாகின்றன. அப்படியே உலகத்துக்குப் பொதுவான நன்மைகளைச் செய்யும் விஷயத்தில்

எல்லா நாடுகளும் ஒன்றுபடுகின்றன. அப்படி ஒன்று படுவது, தங்களுக்குத் தாங்களே நன்மை செய்துகொள்கிற மாதிரி; அதாவது தங்களுடைய தனிப்பட்ட வாழ்வை, சுதந்திர வாழ்வை ஊர்ஜிதம் செய்துகொள்கிற மாதிரி என்று ஒவ்வொரு நாடும் உணர்ந்துகொண்டு விடுமானல், உலகத்தில் சாசுவதமான சமாதானம் நிலவும்.

பல துறைகளில் பயிற்சிபெற்ற பிறகே, பல வருஷ அனுபவத்திற்குப்பிறகே ஒருவன் அரசியலில் பிரவேசிக்க வேண்டுமென்று பிளேட்டோ முதல் அரசியல் அறிஞர் பலரும் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். அரசியலில் ஈடுபடுகிறவர்கள், தம்மைத் தாம் ஆண்டுகொள்ளும் சக்தியுடையவர்களாகவும், தன்னலம் சிறிதும் இல்லாதவர்களாகவும், தூய மனமும் சீல சுபாவமுமுடையவர்களாகவும், எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாகவும், அனைத்திற்கும் மேலாக, அனுபவ ஞானம் நிரம்பப் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும். ஆனல் துரதிருஷ்டவசமாக இப்பொழுது உலகத்தில் பெரும்பாலும் எது விஷயத்திலும் பக்குவமில்லாதவர்கள்தான் அரசியலில் பிரவேசித்திருக்கிறார்கள். இவர்களுடைய அதிகாரப் பிடிக்குள்தான் அரசாங்கங்களின் நிருவாகம் நடைபெறுகிறது. யுத்தத்திற்கு விதை தெளிக்கிறவர்களும் இவர்கள்தான்; சமாதான மகாநாட்டில் மேஜையைச்சுற்றி அமர்கிறவர்களும் இவர்கள்தான். இவர்களால் உலகத்தில் எப்படிச் சாசுவதமான சமாதானத்தை உண்டுபண்ண முடியும்?

இத்தகைய அரசியல் வாதிகள் தீர்க்கதிருஷ்டியுடையவர்களாயிருப்பார்களென்று எதிர்பார்க்க முடியாது. ஆனல் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு தீர்க்கதிருஷ்டி வேண்டும். நிகழ் காலத்திலே எழும் பிரச்னைகளை மட்டுமே பரிசீலனை செய்து அவைகளுக்கு ஒரு பரிகாரம் கண்டு விட்டால் மட்டும் சமாதானம் ஏற்பட்டு விடாது. எதிர்

காலத்திலே இன்னது இன்னது இப்படி இப்படி நடைபெறக்கூடும் என்பதை ஊகத்தினாலே உணர்ந்தும், முந்திய அனுபவத்தினாலே அறிந்தும், அதற்கான வகையில் நிகழ் காலத்தில் காரியங்களைச் செய்ய வேண்டும். இதைச் செய்யக்கூடியவர்கள் அரசியல் ஞானிகளே தவிர வெறும் அரசியல் வாதிகளல்லர். "அரசியல் வாதிகள், ஆறு மாதத்திற்கு அப்பால் என்ன நடைபெறப் போகிறதென்பதைத் தெரிந்துகொள்கிற விஷயத்தில் கண்மூடிகளாயிருக்கிறார்கள்" என்கிறான் ஓர் அறிஞன். உண்மையான வாசகம் இது. வார்சேல் சமாதான மகாநாட்டில்[1] வெறும் அரசியல் வாதிகள் மட்டும் அமர்ந்து சமாதான ஒப்பந்தத்தைத் தயாரித்து ஜெர்மனியிடமிருந்து கையெழுத்து வாங்கிவிட்டதனால்தான், அப்படி வாங்கினால் நிகழக்கூடிய விளைவுகள் என்னவென்பதை அறியும் சக்தி, தீர்க்கதிருஷ்டி இல்லாமலிருந்ததால்தான், இரண்டாவது உலக மகாயுத்தம் மூண்டது. முதல் உலக மகா யுத்தத்தின் முடிவிலேயே, இரண்டாவது உலக மகா யுத்தத்திற்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டுவிட்டது அந்த வார்சேல் சமாதான மகாநாட்டில் ஒரு காந்தியோ, ஒரு லெனினோ கலந்துகொண்டிருந்தால், இந்த விபரீதங்கள் நிகழ்ந்திருக்குமா?

சாதாரணமாக அரசியல்வாதிகள், ஒரு நாட்டின் பொருள் உற்பத்தி, செல்வ நிலைமை, ஆயுத பலம் முதலியவற்றை நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; அவைகளினால் மற்ற நாடுகளுக்கு உண்டாகக்கூடிய சாதக பாதகங்களை ஆராய்ந்து சொல்வதில் நிபுணர்களாயிருக்கிறார்கள். ஆனால் இவர்கள்—இந்த அரசியல் வாதிகள்—ஒரு நாட்டின் மனிதர்களைத்தான் தெரிந்துகொள்வதில்லை அவர்க

1 முதல் உலக மகா யுத்தத்தில் ஈடுபட்டிருந்த ஜெர்மனியும், பிரிட்டன், பிரான்ஸ் முதலிய நேச வல்லரசுகளும பாரிஸ மாநகருக்கருகிலுள்ள வார்சேலில் 18—1—1919 முதல் 28—6—1919 வரை நடத்திய சமாதான மகாநாட்டையே இது குறிக்கிறது. இந்த மகாநாட்டின் விளைவாக ஏற்பட்ட ஒப்பந்தமே வார்சேல் சமாதான ஒப்பந்தம. இந்த மகாநாட்டை, பாரிஸ் சமாதான மகாநாடென்றும் வார்சேல் சமாதான மகாநாடென்றும் இரண்டு விதமாக அழைப்பர்.

ளுடைய சமுதாயப் பழக்க வழக்கங்கள், அரசியல் முறைகள் முதலியவைகள் இந்த அரசியல் வாதிகளுக்குச் சரியாகப் புரிவதில்லை; புரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலும் இவர்களுக்கு ஏற்படுவதில்லை. இதனால் பிற நாட்டாரைப்பற்றி இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அறிவெல்லாம் மேற்போக்கான அறிவே தவிர ஆழ்ந்த அறிவாகாது. இந்த மேற்போக்கான அறிவைக்கொண்டு இவர்கள் மற்ற நாட்டாரைப்பற்றி ஓர் அபிப்பிராயங் கொண்டுவிடுகிறார்கள்; அவர்களை எப்படி நடத்த வேண்டும் அல்லது அவர்கள் விஷயத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப்பற்றி ஒரு முடிவுகட்டி விடுகிறார்கள். விளைவது தீமையே தவிர நன்மையில்லை.

சமாதான பங்கம் ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணம், ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டார் சரியாகத் தெரிந்துகொள்ளாதிருப்பதுதான், தெரிந்து கொள்வது சிறிது கடினமே. ஆனால் கடினமான முயற்சிக்குப் பிறகு தானே நிலையான ஒரு நன்மை உண்டாகும்? ஒரே இனத்தினர், ஒரே மதத்தினர் என்று சொல்லக்கூடிய ஐரிஷ்காரரும் பிரிட்டிஷ்காரரும்கூட ஒருவரையொருவர் சரியாகத் தெரிந்துகொள்ளாத காரணத்தினால்தானே. வருஷக் கணக்கில் போராடிக்கொண்டிருந்தார்கள்? ஐர்லாந்தின் சுதந்திரப் போராட்டச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். இப்பொழுதுங்கூட, இரண்டு மகா யுத்தங்களில் ஒத்துழைத்த பிறகுங்கூட, அமெரிக்கர்களும் பிரிட்டிஷாரும் பரஸ்பரம் ஒருவரையொருவர் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்களா வென்பது சந்தேகமான கேள்வியாயிருக்கிறது. இங்ஙனம் ஒரு நாட்டாரை மற்றொரு நாட்டார் புரிந்துகொள்ளாமையினால் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படுகின்றன. இவைகள் ஏற்படாமல் இருப்பதற்கு வழி தேடவேண்டும். ஒருவரையொருவர் அறிந்துகொள்ள வசதிகள் செய்யவேண்டும். அதாவது ஒவ்வொரு நாட்டிலும், மற்ற நாடுகளின் இலக்கியங்கள், கலைகள் முதலியவற்றை அறிமுகப்படுத்தக்கூடிய

ஸ்தாபனங்கள் நிறுவவேண்டும்; அவைகளுக்கு அந்தந்த நாட்டு அரசாங்கமும் ஆதரவு அளிக்கவேண்டும. இதனுல் ஓர் அரசாங்கத்திற்கும் மற்ருேர் அரசாங்கத்திற்கும் நல்லுறவு ஏற்படுவதோடு, ஒரு நாட்டு மக்களுக்கும் மற்றொரு நாட்டு மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகிறது. ஒருவரையொருவர் நன்கு தெரிந்து கொள்கிருர்கள் தப்பபிப்பிராயங்கள் ஏதேனும் இருந்தால் அவை அகல்கின்றன.

அரசியல் ஞானிகள் என்று மேலே சொன்னேமே, அவர்கள் யாரோ தனிப்பட்ட பெயர்வழிகள், அவர்களைக் காண்பதோ நெருங்குவதோ அரிது என்று வாசகர்கள் கருதவேண்டாம். அவர்கள் நம்மைப் போன்றவர்கள் தான்; நம் மத்தியிலேதான் இருக்கிருர்கள். ஆனல் அவர்கள், கட்சி அரசியலில் தங்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்வதில்லை; கட்சி விவகாரங்களைக் கச்சை கட்டிக் கொண்டு பேசுவதில்லை. தேசத்திற்குப் பொதுவான அரசியலில் தலையிட்டுத் தங்களாலியன்ற தொண்டை ஆரவாரமில்லாமல் செய்துகொண்டு வருகிருர்கள். அவர்கள், தேச வரம்பு, பாஷை வரம்பு இவைகளைக் கடந்தவர்கள்; எல்லா நாட்டினராலும் சிறப்பிக்கப் படுகின்றவர்கள். அவர்களுடைய ஆழ்ந்த அறிவு, பரந்த மனம், அநுதாப உணர்ச்சி ஆகிய இவை எங்குமே வரவேற்கப் படுகின்றன.

இத்தகையவர்களை அரசியல் ஞானிகளென்று அழைப்பது, உலக விவகாரங்களில் சம்பந்தப்படாமல் ஒதுங்கியிருக்கிற ஒரு சிலரைக் குறிப்பதுபோல இருக்கிறதென்று வாசகர்கள் கருதுவார்களானுல், இவர்களை ராஜதந்திரிகள் என்று அழைக்க நாம் சித்தமாயிருக்கிருேம். எந்தப் பெயரிட்டழைத்தால் என்ன? அந்தப் பெயர்களுக்குரியவர்கள் ஒருவர்தான்; அதாவது நல்ல ஒரு சிலர்தான்.

ப்ளூட்டார்க்[1] என்ற கிரேக்க சரித்திராசிரியன் கூறுகிற மாதிரி, ராஜதந்திரி என்பவன் உத்தியோகம், வகிப்பவ

---

1 Plutarch: 46-120.

னல்ல; சட்ட சபைகளில் உரத்துப் பேசுகிறவனல்ல; வெளிநாடுகளுக்குத் தூதனுகச் செல்கிறவனல்ல. மற்றும், ராஜ தந்திரமென்பது, குறிப்பிட்ட ஒரு நோக்கத்திற்காக ஆரம்பித்து, அந்த நோக்கம் நிறைவேறியவுடன் முடித்து விடுகின்ற ஒரு பிரயாணமல்ல; போராட்டமுமல்ல; அப்படியே, குறிப்பிட்ட ஒரு காலம் வரை தாங்கிக் கொண்டிருந்து பிறகு இறக்கிவைக்கிற ஒரு சுமையுமல்ல. ராஜ தந்திரியென்பவன், எப்பொழுதும் இடைவிடாது உழைக்கின்றவன்; பலாபலன்களை எதிர் பாராமலும், விருப்பு, வெறுப்புக்களைப் பொருட்படுத்தாமலும், பொறுப்பையோ, பதவியையோ ஏற்று அதைத் திறம்பட நடத்துகிறவன். இப்படியே ராஜ தந்திரமென்பது, அரசியல் சேவையின் மற்ஞெரு பெயர்; மற்றவர்களுடைய தூண்டுதலோ வேண்டுதலோ இல்லாமல் தானே சுயமாக இயங்கிக் கொண்டிருக்கும் ஒரு ஸ்தாபனம்; எவ்வித ஊதியத்தையும் விரும்பாத ஒரு ஸ்தானம்.

ராஜ தந்திரமென்பதற்கு ஒரு மேனுட்டு அறிஞன் பின்வருமாறு லட்சணம் கூறுகிருன் :— "உண்மையான ராஜ தந்திரத்திற்கு, பொதுவாக வியாக்கியானஞ் செய்ய வேண்டுமானுல், ஒரு நாட்டுக்கும் மற்ஞெரு நாட்டுக்கும் உள்ள சிநேகத்தைப் பாதுகாத்து வருவதோடு அதை மேலும் மேலும் வளர்த்துக்கொண்டிருப்பது; அப்படியே ஒரு நாட்டின் நியாயமான நலன்களை மற்ஞெரு நாட்டில் வளர்த்துக் கொடுப்பது. இந்த நலன்களில் எவை எவை நியாயமானவை, எவை எவை நியாயத்திற்குப் புறம்பானவையென்பதைப் பாகுபடுத்திக்காண்கிற விஷயத்தில் ஒரு ராஜதந்திரி மிகவும் கவனமாக இருக்கவேண்டும். இரண்டு நாடுகளுக்கும் சாதகமாயிருப்பவை எவையோ அவைதான் நியாயமான நலன்கள்."

இத்தகைய ராஜதந்திரிகளை அல்லது அரசியல் ஞானிகளை உலகப் பொதுப்படையான அரசியலில் பிரவேசிக்குமாறு செய்யவேண்டும்; சமாதான மகாநாடுகளில் இவர்

களுக்கு முக்கிய ஸ்தானங்கள் அளிக்கவேண்டும்; சர்வ தேசங்களுக்கும் பொதுவாகவுள்ள ஸ்தாபனங்களில் இவர்களை. இவர்களுடைய சொந்த ஹோதாவில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இவர்கள் எந்த அரசாங்கத்தின் பிரதிநிதிகள், எந்த நாட்டிலிருந்து வந்தவர்கள் என்ற பிரச்னையே எழுதல் கூடாது. உதாரணமாக, காந்தியடிகள் போன்றவர்களை ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உலகத்திலே சாசுவதமான சமாதானம் நிலவுவதற்கு ஏதுவுண்டாகும்.

சமாதானமென்பதை முழுசாக, பூரணமாகப் பார்க்க வேண்டுமே தவிர கூறு கூறாகப் பிரித்துப் பார்க்கக் கூடாது. எப்படி ஒரு மனிதனுடைய வாழ்க்கையையோ, ஒரு சமுதாயத்தினுடைய வாழ்க்கையையோ தனித்தனிப் பகுதியாகப் பிரித்துப் பார்க்கக்கூடாதோ அப்படியே சமாதானத்தையும் தனித்தனியாகப் பிரித்துப் பார்க்கக் கூடாது. சமாதானத்தோடு கூடியதுதானே வாழ்க்கை? பூரண சமாதானந்தான் பூரண வாழ்க்கை. அரைகுறையான சமாதானமேற்படும் பட்சத்தில், வாழ்க்கையும் அரைகுறையாக, பயத்திற்கும் ஆபத்திற்குமிடையே ஊசலாடிக்கொண்டிருக்கும்.

தற்போதைய அரசியல் வாதிகள், ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டுக்கும் இருக்கவேண்டிய தொடர்பை, தனித்தனிக் கூறுகளாகப் பிரித்துப் பார்க்கிறார்களே தவிர, மொத்தமாகப் பார்ப்பதில்லை. இதனால் ஒரு துறையிலே சுமுகமான தொடர்பு இருந்துகொண்டிருக்கிறது. அதே சமயத்தில் வேறொரு துறையில் பிணக்கு ஏற்பட்டு இது வளர்ந்துகொண்டு வருகிறது கடைசியில் இந்தப் பிணக்கு வளர வளர மற்றொரு துறையிலிருந்த சுமுகமான தொடர்புக்குப் பங்கம் ஏற்பட்டு, இறுதியில் அறவே அற்றுப்போகிறது விளைவு என்ன? யுத்தம்.

உலக சமாதானம் ஏற்படவேண்டுமானால் மூன்று முக்கியமான பிரச்னைகளைச் சேர்ந்தாற்போல் கவனிக்க வேண்டுமென்று ஆல்ப்ரெட் ஜிம்மெர்ன்[1] என்ற அறிஞன் கூறுகிறான். அதாவது, அரசியல், பொருளாதாரம், தரும நியாயம் ஆகிய இந்த மூன்றினையும் சேர்த்தே பார்க்க வேண்டுமென்பது இவன் கருத்து. ஒரு பிரச்னையை அரசியல் கண்கொண்டு பார்க்கிறபோது சரியென்றும், அதை நிறைவேற்றவேண்டியது அவசியமென்றும் தென்படலாம். ஆனால அப்படி நிறைவேற்றுவது பொருளாதாரத்திற்குப்பெரிய பலவீனத்தை உண்டுபண்ணுவதாயிருக்கக் கூடும். இங்ஙனமே, அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் பொருத்தமாயிருப்பது தரும நியாயத்திற்கு விரோதமாயிருக்கலாம். இம்மூன்றில் அரசியலும் பொருளாதாரமும் ஸ்தூலமாகப் பார்க்கப்படக்கூடியவை; தரும நியாயமோ சூட்சுமமாகவுள்ளது. ஆனால் அதற்குத்தான் அதிக சக்தி உண்டு. அதனை அனுசரித்து நடப்பதனால் உண்டாகக்கூடிய சாதகங்களோ, அதனைப் புறக்கணிப்பதனால் உண்டாகக்கூடிய பாதகங்களோ உடனடியாகத் தெரிவதில்லை. இதனால்தான் இன்றைய அரசியல்வாதிகள் அதற்கு லேசான மதிப்புக்கொடுத்து, அதனை அலட்சியமாகப் புறக்கணித்துவிடுகிறார்கள். ஆனால் அப்படிப் புறக்கணிப்பது, சிறிது காலத்திற்குப்பிறகு பேராபத்தாக விளைகிறது. ஒருவாறு ஒழுங்குபட்டுப்போன அரசியல் பொருளாதாரப் பிரச்னைகள்கூட அந்த ஆபத்தில் உடைந்துபோய் விடுகின்றன. தீர்க்க திருஷ்டி படைத்த அரசியல் வாதிகள் அல்லது அரசியல் ஞானிகள், சமாதான மகாநாடுகளில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்வது இதற்குத்தான்.

சர்வதேச ஸ்தாபனமொன்றை ஏற்படுத்திவிடுவதனால் மட்டும் உலக சமாதானம் உண்டாகிவிடாது. உதாரணமாக இப்பொழுது உலகத்திலுள்ள தேசங்கள் பெரும்பாலானவற்றை அங்கத்தினர்களாகக்கொண்ட ஐக்கிய

1 Alfred Zimmern.

தேச ஸ்தாபனம் இருக்கிறது. 'இந்த ஸ்தாபனத்தைத் தொடங்கிவிட்டோம், இனி, இந்த ஸ்தாபனத்தில் சேர்ந்துள்ள அங்கத்தினர் தேசங்களின் விவகாரங்களைக் கவனிக்கும் வேலையையும் இவைகளுக்கு வழிகாட்டி நடத்திச் செல்லும் வேலையையும், இந்தத் தேசங்கள் பலவும் சேர்ந்த மேற்படி ஸ்தாபனம் செய்துகொண்டு போகும், நமக்கு இனி கவலையில்லை. உலகத்தில் இனிச் சண்டைகள் நடைபெறமாட்டா, சமாதானம் தானாக வந்துவிடும்' என்று பிரதியொரு தேசமும் நினைத்துக்கொண்டு சும்மாயிருக்குமானால் உலக சமாதானம் ஏற்பட்டுவிடுமா? ஒருகாலும் ஏற்படாது. மறைந்துபோன சர்வதேச சங்கத்தில் சேர்ந்திருந்த அங்கத்தினர் தேசங்கள் யாவும் இதே மாதிரியான மனப்பான்மையைத்தான் கொண்டிருந்தன. இதனால் விளைந்தது என்னவென்பதை நாம் வாசகர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லை. இந்த ஸ்தாபனத்தினால், அதாவது சர்வதேச சங்கத்தினால், சமாதானத்தை நிலைநாட்ட முடியாமற்போனது மட்டுமல்ல, யுத்தத்தைத் தடுக்கவும் முடியவில்லை. 1919-ஆம் வருஷத்திலிருந்து 1938-ஆம் வருஷம் வரை உலகத்தில் மொத்தம் பதினான்கு யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கு இஃதொரு நல்ல பாடமாயிருக்க வேண்டும்.

ஐக்கிய தேச ஸ்தாபனம் உலக சமாதானத்திற்குப் பாதுகாப்பாளனாக இருக்க வேண்டுமானால், அதில் சேர்ந்துள்ள பிரதியோர் அங்கத்தினர் நாடும், உலக சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, தனது உள்நாட்டு விவகாரங்களையும் வெளிநாட்டு விவகாரங்களையும் நடத்த வேண்டும். ஒவ்வொரு நாடும் மற்றொரு நாட்டின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கவேண்டும்; அந்த உரிமைக்காகப் போராடுகிற நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும்; அந்த உரிமையை வாங்கிக் கொடுக்க வேண்டும். இங்ஙனம் உதவி செய்வது முதலிய காரியங்களை ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் மூலமாகச் செய்யவேண்டும்.

அப்பொழுதுதான் அந்த ஸ்தாபனத்தின் மதிப்பு அதிகப் படும். ஸ்தாபனத்திற்கென்று தனியான மதிப்பு ஏது? அங்கத்தினர்கள் கொடுக்கிற மதிப்புத்தானே? அது போல், ஸ்தாபனமானது, தனியாக இருந்து சமாதானத்தை நிலைநாட்ட முடியாது; அதன் அங்கத்தினர் தேசங்கள், தனித்தனியாகவும், சேர்ந்தாற்போலவும் சமாதானத்திற்குப் பாடுபடவேண்டும்.

எந்த ஒரு தேசம் ஏகாதிபத்திய வலையை வீச முற்படுகிறதோ அந்தத் தேசம் அந்த வலையிலேயே அகப்பட்டுக் கொண்டு அழிந்து போகிறது. ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முந்தியிருந்து, சரித்திரம் போதிக்கிற உண்மை இது. கிரேக்க ஏகாதிபத்தியமென்ன, ரோம ஏகாதிபத்தியமென்ன, பாரசீக ஏகாதிபத்தியமென்ன, இவையெல்லாம் அழிந்துபட்டது எதனால்? ஏகாதிபத்தியப் பேராசை கொண்டதனால்தான். சரித்திர காலத்திற்குச் செல்வானேன்? சமீபத்தில் நம் கண்முன்னே, இத்தலி, ஜெர்மனி, ஜப்பான் ஏகாதிபத்தியங்கள் அழிந்து போனதைப் பார்த்தோமல்லவா? எத்தியோப்பாமீது படையெடுத்த காலத்திலிருந்து இத்தலிக்கும், ஜெக்கோஸ்லோவேகியா மீது படையெடுத்த காலத்திலிருந்து ஜெர்மனிக்கும், சீனாவின்மீது படையெடுத்த காலத்திலிருந்து ஜப்பானுக்கும் அழிவு காலம் ஆரம்பித்துவிட்டது. இதில் ஆச்சரியமென்னவென்றால், படையெடுத்த மூன்று நாடுகளும் வாழ்விழந்து நிற்கின்றன; படையெடுக்கப்பட்ட மூன்று நாடுகளும் உயிரோடு, மற்ற வல்லரசுகளின் அநுதாபத்திற்கும் ஆதரவுக்கும் உரியனவாய் இருக்கின்றன. "மற்றவர்களை அழிக்க முற்படுகிறவன், தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான்" என்ற வாசகம், ஏகாதிபத்திய ஆசைகொண்டிருக்கிற தேசங்களுக்கு எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது? இந்த ஆசை கொள்ளும் தேசங்கள் தாங்கள் அழிந்துபடுவதோடு, உலக சமாதானத்தையும் குலைத்துவிட்டுப் போகின்றன. ஏகாதிபத்திய ஆசையானது விஷவாயு மாதிரி. அது தொலை தூரத்திலுள்ளவர்

களையும் பாதிக்கிறது; அதன் விளைவு ஓரிரண்டு தலைமுறைகள் வரையிலும் இருக்கிறது. எனவே இந்த வாயு எந்த இடத்திலும் பரவாமலும், ஏன், எந்த இடத்திலிருந்தும் உற்பத்தியாகாமலும் பார்த்துக்கொள்வது ஐக்கிய தேச ஸ்தாபனத்தின் பொறுப்பாகும்; அதாவது எல்லாத் தேசங்களினுடைய பொறுப்புமாகும்.

பதினெட்டாவது பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் மேனாட்டார் ஏகாதிபத்தியக் கோலந்தாங்கிக் கீழ்நாட்டில் புரிந்த திருவிளையாடல்கள் மிகவும் கேவலமானவை; பெரிதும் அருவருக்கத்தக்கவை. இங்கே மேனாட்டார் என்று சொல்கிறபோது டச்சுக்காரர், போர்த்துகேசியர், பிரெஞ்சுக்காரர், ருஷ்யர், ஜெர்மானியர், பிரிட்டிஷார், அமெரிக்கர் ஆகிய எல்லோரையும் சேர்த்தே சொல்கிறோம். ஆசிய நாடுகள் ஒவ்வொன்றிலும் இவர்கள் செய்த சூழ்ச்சிகள்தான் எத்தனை? கொள்ளைகொண்ட பொருள்கள்தான் எவ்வளவு? அம்மம்ம! சொல்வதற்கு நா குழறுகிறது; எழுதுவதற்குக் கை கூசுகிறது. இவைகளைத் தொகுத்துத் தனியாக ஒரு சரித்திரம் எழுதப்படவேண்டும். அப்படி எழுதப்படுகின்ற சரித்திரம், மேனாட்டாருடைய ஏகாதிபத்திய வாழ்வுக்கு ஒரு ஞாபகக் கல்லாயிருக்கும்.

மேனாட்டார், பதினேழாவது நூற்றாண்டில், வியாபாரிகளாகவும் வைத்தியர்களாகவும் பாதிரிமார்களாகவும் ஆசிய நாடுகளில் பிரவேசித்தனர். பதினெட்டாவது நூற்றாண்டில், வியாபாரச் சலுகைகள் வேண்டுமென்று கோரி ஆசிய நாடுகளின் அரச சபைகளில் மனுச்செய்துகொண்டனர்; கோரிக்கைகளைப் பெற்றனர்; ஆசிய மக்களின் இருதய விசாலத்தைத் தங்கள் சுயநலத்திற்காக உபயோகப்படுத்திக் கொண்டனர். பத்தொன்பதாவது நூற்றாண்டில், கீழ்நாடுகள் பெரும்பாலானவற்றின்மீதும் தங்கள் அரசியல் ஆதிக்கத்தைத் திணித்துவிட்டனர். பதினெட்டாவது நூற்றாண்டில், கீழ்நாட்டு அரசவைகளில் மேனாட்

டார் மண்டியிட்டுத் தங்கள் கோரிக்கைகளை அடைந்தனர். ஆனால் பத்தொன்பதாவது நூற்றாண்டில், மேனாட்டு அரசவைகளில் கீழ் நாட்டார் மண்டியிட்டுத் தங்கள் குறைகளைத் தெரிவித்துக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது!

பதினெட்டாவது, பத்தொன்பதாவது நூற்றாண்டுகளில் மேனாட்டார், தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களைக்கொண்டு திணிப்பதற்கு ஏற்ற சந்தைக்கூடங்களாக்கிவிட்டனர் கீழ்நாடுகளை. அப்படிக் கொண்டு திணிப்பதற்கு அனுகூலமாயிருக்கும் பொருட்டு, தங்கள் அரசியல் ஆதிக்கத்தையும் ஊர்ஜிதம் செய்து கொண்டனர். இதற்காக மேனாட்டாருக்குள்ளேயே எவ்வளவு போட்டி! எவ்வளவு பொறாமை! இவைகளுக்கெல்லாம் ஆசிய நாடுகளையே போட்டி ஸ்தலங்களாவும் யுத்த களங்களாகவும் உபயோகித்துக் கொண்டனர். இந்தியாவில் பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் போட்டி. ஈரானில் பிரிட்டிஷாருக்கும் ருஷ்யருக்கும் போட்டி. சிரியா, லெபனன் முதலிய பிரதேசங்களில் பிரெஞ்சுக்காரருக்கும் பிரிட்டிஷாருக்கும் போட்டி. சீனாவில் அமெரிக்கருக்கும் பிரிட்டிஷாருக்கும் போட்டி. இந்தப் போட்டா போட்டிகளினால் ஆசிய நாடுகளின் அரசியல் அமைப்புக்களும், பொருளாதார ஒழுங்குகளும், சமுதாயக் கட்டுப்பாடுகளும் சீர்குலைந்து போயின. இவை தவிர, இவைகளுக்குள்ளேயே பரஸ்பர சச்சரவுகள் ஏற்பட்டன. ஆசிய மக்களனைவரும் ஓரினம், ஒரு குலம் என்ற நூற்றாண்டுக் கணக்காக இருந்த எண்ணமானது உடைந்துபோய், ஒவ்வொரு நாட்டினரும், அதாவது ஆசியாவிலுள்ள ஒவ்வொரு நாட்டினரும், தங்களை வேற்று வேற்று நாட்டினராகக் கருதிக்கொண்டு ஒருவர்மீது ஒருவர் விரோதங் காட்டினர். ஒரே நாட்டில், தலைமுறை தலைமுறையாகச் சகோதரர்கள்போல் வாழ்ந்துகொண்டு வந்த மக்களுக்குள்ளேயே பிணக்குகள் ஏற்பட்டன. வகுப்புப் பூசல்கள், ஜாதிச் சண்டைகள் முதலியன சமு

தாய ஒற்றுமையைச் செல்லரித்தன. இவையெல்லாம் அந்நிய ஆதிக்கத்தின் விளைவுகள்.

அந்நிய ஆதிக்கத்தினால் உண்டாகிவரும் விபரீதங்களை ஆசிய மக்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டின் இடைக் காலத்திலிருந்து மெது மெதுவாக உணரத் தலைப்பட்டனர். தங்களுடைய பழைய சுதந்திர வாழ்வையும், அந்நிய ஆதிக்கத்தினால் ஏற்பட்டிருக்கிற இப்பொழுதைய அடிமை வாழ்வையும் சீர்தூக்கிப் பார்த்தனர். அந்நியர்களுக்கு விரோதமான இயக்கங்கள், ஸ்தாபனங்கள் முதலியன பெருகின. அந்நிய ஆதிக்கத்தின்மீது துவேஷம் வளர்ந்தது. இது திரண்டு, இந்தியாவில் 1857-ஆம் வருஷம், சிப்பாய்க் கலகம் என்று தவறாகச் சொல்லப்படுகின்ற அந்நியர்க்கு விரோதமான புரட்சியாகவும், சீனாவில் 1900-ஆம் வருஷத்து பாக்ஸர் கலகமாகவும் வெடித்தது. இங்ஙனமே ஆசியாவின் மற்ற நாடுகளிலும் அந்நிய ஆதிக்கத்திற்கு விரோதமாகச் சிறுசிறு புரட்சிகள் நடைபெற்றன.

இந்தத் துவேஷ உணர்ச்சியானது, மேலும் மேலும் வளர்ந்து, தானே எரிந்தோ, மற்றவர்களை எரித்து விட்டோ போகாமல், நல்ல வேளையாக நாளாவட்டத்தில் தேசிய உணர்ச்சியாக உருவெடுத்தது. முதல் உலக மகா யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் ஆசியாவின் ஒவ்வொரு நாட்டிலும் இந்தத் தேசிய உணர்ச்சி தலைதூக்கி நின்றது. முதல் மகாயுத்தம் முடிவுற்ற காலத்திற்கும் இரண்டாவது மகாயுத்தம் தொடங்கிய காலத்திற்கும் மத்தியிலுள்ள காலம், பிரதியோர் ஆசிய நாட்டினுடைய தேசிய இயக்கத்தின் பருவ காலம். அழிவு வேலைகளும் ஆக்க வேலைகளும் சேர்ந்தாற்போல் இந்தக் காலத்தில் நடைபெற்றன. தொண்டர்களின் சிறைவாசமென்ன, தலைவர்களின் தேசப் பிரஷ்டங்களென்ன, அந்நியப் பொருள்களின் பகிஷ்காரங்களென்ன,

சுதேசத் தொழில்களின் பெருக்கமென்ன, இவையெல்லாம் இந்தக் கால சரித்திரத்தின் தனித்தனி அத்தியாயங்களாகும்.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில், இந்தத் தேசிய உணர்ச்சியானது, எவ்வாற்றானும் யாரை அனுசரித்தாயினும், எந்த முறையைக் கடைப்பிடித்தாயினும், ஏகாதிபத்தியப் பிடியினின்று விடுதலையடைந்துவிட வேண்டுமென்ற முயற்சியாகப் பரிணமித்தது. இந்தோ-சீனு, மலேயா, பர்மா, பிலிப்பைன் தீவுகள் முதலிய தூர கிழக்கு நாடுகளில், அந்தந்த நாட்டுத் தேசியவாதிகள், ஐப்பானியர்களுடன் கைகுலுக்கியது, அந்நிய ஆதிக்கத்திலிருந்து விலகி சுதந்திர வாழ்வு நடத்தவேண்டுமென்ற ஆவலினால் செய்த காரியமே தவிர, ஓர் ஆதிக்கத்தை விடுத்து மற்றோர் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்வதற்காகவல்ல. அப்படிச் செய்வது பிசாசிடமிருந்து விடுபட்டுப் பாழுங் கிணற்றிலே குதித்ததுபோலாகுமல்லவா?

இரண்டாவது உலக மகாயுத்தமும் முடிந்துவிட்டது. ஆசிய நாடுகளின்மீதிருந்த ஏகாதிபத்தியப் பிடி தளர்ந்துவிட்டது. ஆசியாவின் ஒவ்வொரு நாடும் சுதந்திரக்கொடி தூக்கிவிட்டது. ஒவ்வொரு நாட்டிலும் தேசிய அரசாங்கங்கள், பிரதிநிதித்துவ அரசாங்கங்கள் அமைந்துவிட்டன. இவை யாவும் ஒன்றுபட்ட ஒரு சமஷ்டியாக, ஒரே குடும்பமாக இப்பொழுது காட்சியளிக்கின்றன.

ஆசியாவின் ஒற்றுமையை இனி யாரும், எந்த ஏகாதிபத்தியச் சக்தியும் கலைக்கமுடியாது; கலைக்கவும் இனி ஆசியா விடாது. ஏனென்றால், வேற்றுமைப்பட்டு வாழ்ந்ததனால் அஃது எவ்வளவோ வேதனைகளை அடைந்திருக்கிறது. இந்த அனுபவத்தினால் அது சுய உணர்வு பெற்றுவிட்டது. பெருமை நிறைந்த தனது பூர்விக வாழ்வை, காலத்தோடு இயைபுபடுத்தி மீண்டும் வாழ அது தீர்மானித்துவிட்டது. ஆசியா வாழ்க!

விழிப்படைந்துவிட்ட ஆசியா, ஒற்றுமையான ஆசியா, சுதந்திர ஆசியா, இனி உலகத்தைச் சமாதானப் பாதையில் அழைத்துக்கொண்டு போகப் போகிறது. அதற்கு—ஆசியாவுக்கு—இந்தியா வழி காட்டப் போகிறது. இது நிச்சயம்; சத்தியம்.

அனுபந்தம்.

# ஆசிய நாடுகளைப் பற்றிய விவரங்கள்

| வரிசை எண் | நாட்டின் பெயர் | விஸ்தீரணம் சதுர மைல் | ஜனத் தொகை ஆயிரம் | தலைநகரம் |
|---|---|---|---|---|
| 1 | அஸெர்பைஜான் | 33,000 | 3,400 | பாக்கூ |
| 2 | ஆப்கனிஸ்தானம் | 2,56,966 | 12,000 | காபூல் |
| 3 | இந்தியா | 12,69,640 | 3,92,440 | புதிய டெல்லி |
| 4 | இந்தோனேஷியா | 5,75,893 | 85,500 | ஜாகார்த்தா |
| 5 | இலங்கை | 25,332 | 8,929 | கொழும்பு |
| 6 | ஈராக் | 1,71,599 | 6,538 | பாக்தாத் |
| 7 | ஈரான் | 6,36,293 | 21,794 | டெஹ்ரன் |
| 8 | உஸ்பெக்ஸ்தான் | 1,58,000 | 7,300 | தாஷ்கெண்ட் |
| 9 | எகிப்து | 3,86,100 | 24,020 | கெய்ரோ |
| 10 | ஏமென் | 75,290 | 4,500 | ஸானு |
| 11 | கம்போடியா | 67,568 | 4,358 | நாம்பென் |
| 12 | காஜக்ஸ்தான் | 10,56,000 | 8,500 | அல்மா அட்டா |
| 13 | கிர்க்கிஸ்தான் | 78,000 | 1,900 | ப்ருன்ஸே |
| 14 | கொரியா | 85,266 | 28,600 | சியோல் |
| 15 | சிக்கிம் | 2,745 | 122 | கங்டோக் |
| 16 | சிரியா | 70,014 | 3,970 | டமாஸ்க்கஸ் |
| 17 | சீனு (குடியரசு) | 39,11,200 | 5,90,195 | பீக்கிங் |
| 18 | சூடான் | 9,67,500 | 10,210 | கார்ட்டூம் |
| 19 | சௌதி அரேபியா | 6,17,760 | 7,000 | ரியாத் |
| 20 | தாஜிகிஸ்தான் | 55,000 | 1,800 | ஸ்ட்டாலினுபாத் |
| 21 | தாய்லாந்து | 1,98,270 | 21,076 | பாங்காக் |
| 22 | திபேத்து | 4,69,413 | 1,274 | லாஸ்ஸா |
| 23 | துருக்கி | 2,96,185 | 24,797 | அங்காரா |
| 24 | துருக்கிமெனிஸ்தான் | 1,87,000 | 1,400 | அஷ்க்காபாத் |
| 25 | நேபாளம் | 54,510 | 8,432 | காட்மண்டு |
| 26 | பர்மா | 2,61,757 | 20,654 | ரங்கூன் |

| வரிசை எண் | நாட்டின் பெயர் | விஸ்தீரணம் சதுர மைல் | ஜனத் தொகை ஆயிரம் | தலைநகரம் |
|---|---|---|---|---|
| 27 | பாக்கிஸ்தான் | 3,64,737 | 84,777 | ராவல்பிண்டி |
| 28 | பாலஸ்தீனம் (இஸ்ரேல்) | 7,984 | 1,924 | ஜெருசலேம் |
| 29 | பிலிப்பைன் தீவுகள் | 1,14,830 | 22,690 | மணிலா |
| 30 | பூட்டான் | 19,305 | 623 | புனக்கா |
| 31 | போர்மோஸா (தேசீய சீனு) | 13,885 | 9,310 | டைப்பே |
| 32 | மலேயா | 50,690 | 6,058 | கோலாலம்பூர் |
| 33 | லாவோஸ் | 91,500 | 1,425 | வியண்ட்டியானே |
| 34 | லெபனுன் | 4,015 | 1,525 | பெய்ருட் |
| 35 | வியட்நாம் (தெற்கு) | 65,726 | 12,366 | சைகோன் |
| 36 | வியட்நாம் (வடக்கு) | 63,360 | 12,500 | ஹனோய் |
| 37 | வெளிமங்கோலியா | 6,14,350 | 1,000 | உலான்பட்டோர் |
| 38 | ஜப்பான் | 1,42,801 | 90,900 | டோக்கியோ |
| 39 | ஜார்டான் | 37,264 | 1,471 | அம்மன் |
| 40 | ஜார்ஜியா | 27,000 | 4,000 | டிப்ளிஸ் |

## இந்நூல் எழுதுவதற்குத் துணையாயிருந்த சில நூல்கள்

| | |
|---|---|
| World Civilization | ... Webster and Wesley |
| Story of Civilization - 2 vols. | ... Will Durant |
| Social Thought of the Ancient Civilization | ... J. O. Hertzler |
| A Pageant of Asia | ... M. Saunders |
| The Problem of Asia | ... Capt. A. T. Mahan |
| Asia in the Modern World | ... H. Venkatasubbiah |
| Asiatic Asia | ... S. K. Datta |
| Studies in Oriental Social Life | ... H. C. Turnbull |
| World Politics in Modern Civilization | ... H. E. Barnes |
| The History of Peace | ... A. C. F. Beales |
| The Problem of the 20-th Century | ... Lord Davis |
| The Lost Peace | ... Harold Butler |
| The Gentlemen Talk of Peace | ... Wm. B. Ziff |
| The Prospects of Civilization | ... Alfred Zimmern |
| Human Nature, War and Society | ... John Cohen |
| Etc., | Etc, |

# பொருட்குறிப்பு

(எண்கள் பக்கத்தை குறிப்பவை)


அக்காட் 16
அசு 9
அதர்ம யுத்தம் 58
அந்த்தேலா 74
அமெரிக்கா 61, 70, 73, 84
அமெரிக்கர்கள் 98
அமெரிக்க காங்கிரஸ் 61
அரச நீதி 43
அரசியல் ஞானிகள் 97, 99, 100
அரசியல் வாதிகள் 96–97
அரிஸ்ட்டாட்டல் 28, 29
அறநூல் 43
அறுபத்து நான்கு கலைகள் 44
அஸ்ஸிரியா 9, 15, 23
அஷுர்பாணிபால் 17
ஆசியா அளித்த பொருள்கள் 17–18
ஆசிய ஆசியா 10
ஆசியா — ஒரு போட்டி ஸ்தலம் 106
ஆசிய நல்லுறவு மகாநாடு 11
ஆசியாவின் நிதானம் 40
,, நிற்கின்ற நிலை 40
,, லட்சணம் 10
,, விஸ்தீரணம் 12
ஆசியாவின் ஜனத்தொகை 13
ஆண்ட்ரு கார்னிகி 72
ஆண்—பெண் லட்சணம் 46
ஆயுதப் பரிகரணம் 83-85
ஆரியர்கள் 12
ஆல்ட்டாய் மலை 20
ஆல்ப்ரெட் நோபெல் 71
ஆல்ப்ரெட் ஜிம்மர்ன் 102
ஆஸ்திரியாவின் இளவரசன் 60
இங்கிலாந்து 23
இத்தலி 61, 75, 80, 91, 104
இந்தியா 11, 18, 23, 109
இந்தோ—சீனு 108
இப்புவெர் 19
இமயம் 20
உலக அதிசயங்கள் 13–14
உலக சமாதான ஸ்தாபனம் 72
உலகத்தில் சமாதான ஸ்தாபனங்கள் 79
உலகத்தின் விஸ்தீரணம் 12
,, ஜனத்தொகை 13
எகிப்து 11, 12, 15, 18, 23, 31
எகிப்தின் உன்னத வாழ்வு 15
எகிப்தியர்களின் தினசரி வாழ்க்கை 25
எகிப்தியப் பாடல் 36

எட்வின் கின் 71
எத்தியோப்பியா 80, 104
எமரிக் க்ருஸ் 75
எரேப் 9
எலிஹூ பர்ரிட் 71
ஐக்கிய தேச
ஸ்தாபனம் 64, 79
ஐர்லாந்து 60, 98
ஐரிஷ்காரர் 98
ஐரோப்பிய ஆசியா 10
ஐரோப்பாவும் ஆசியாவும்-
சில தாரதம்மியங்கள் 50-56
ஐரோப்பிய இணக்கம் 77
ஒக்காக்கூரா கக்குஸோ 56
கங்கை 20, 25
கன்பூஷியஸ் 15
காண்ட் 64
காந்தியடிகள் 89, 101
கிரீஸ் 9, 14, 43, 74
கிரேக்கர்கள் 10
கிரேக்க அறிஞர்கள் 43
கிரேக்க ஏகாதிபத்தியம் 104
கில்பர்ட் மூர்ரே 63
கீழ்நாடு 11
குவேக்கர்கள் 64
கெல்லாக் ஒப்பந்தம் 73
கேசவ சந்திர சேனர் 21
சந்தோஷ வாழ்க்கை 46
சமாதான வாதிகள் 62
சமாதானமென்பது என்ன? 94
சர்வதேச சங்கம் 79
சர்வ தேசிய வாதிகள் 64
சர்வ பார்லிமெண்டரி
யூனியன் 71
சார்லஸ் ஸம்னர் 70
சிந்து நதி 20
சிப்பாய்க் கலகம் 107
சினாய் மலை 20
சீனர்கள் 30, 31
சீனர்களும் சங்கீதமும் 30
சீன சாம்ராஜ்யம் 15
சீனப் பாடல் 26
சீனா 11, 12, 23, 61, 104
சுமேர் 16
டேவிட் லோ டாட்ஜ் 70
டைக்ரிஸ் 20, 25
தர்ம யுத்தம் 58
தாந்தே 64
திபேத்தியர் வழக்கம் 32
திருக்குறளாசிரியர் 27
தெர்மாப்பலே 74
நபோனிடஸ் 18
நாகரிகத்தின் லட்சணம் 35
நினேவே 17
நெப்போலியன் 55, 85
நெபுகாட்நெஸ்ஸார் 15
நெபெர்—ரோஹு 19
நைல் நதி 20
நோபெல் பரிசு 71
பண்பாட்டின் லட்சணம் 35
பர்மா 108
பர்மிய மக்கள் 31

பர்ஷிய நாகரிகம் 23
பாக்ஸர் கலகம் 107
பாபர் 12
பாபிலோனியா 13
பாபிலோனியா
ஏகாதிபத்தியம் 15
பாபிலோனியாவில்-ரசீது 46
பாபிலோனியாவில்
குடும்ப விசாரணை 45
பாபிலோனியப்
பழமொழிகள் 45
பாரசீக ஏகாதிபத்தியம் 15
பாரசீக வாசகங்கள் 37–38
பாஸ்டன் நகரம் 71
பிரமிட் கோபுரங்கள் 13, 31
பிரான்ஸ் 72, 79
பிரிட்டன் 72, 79, 84
பிரிட்டிஷார் 98
பிலிப்பைன் 108
பிளேட்டோ 96
பென்சில்வேனியா 69
பொனீஷியா 16
ப்ரஸ்ஸெல்ஸ் 84
ப்ளுண்ஷ்லி 78
ப்ளுட்டார்க் 49, 99
ப்ளாக் 65
மகா அலெக்ஸாந்தர் 15, 47, 53
,, சம்பாஷணை 47–48
மலேயா 108
முப்பத்திரண்டு வித்தைகள் 44
முப்பது வருஷ யுத்தம் 75
முஸோலினி 91
மேனுட்டார் 105
யாங்க்ட்ஸீகியாங் 20
யுத்த ஒழிப்புச் சங்கம் 73
யுத்த காரணங்கள் 87
யுத்தச் செலவு 58, 86
யுத்த சேதங்கள் 57
யுத்தத்திற்கு நால்வகைக்
காரணங்கள் 59
யுத்தம்-மூன்று வகை 58
யூத சாம்ராஜ்யம் 15
யூப்ரெட்டிஸ் 20, 25
ரஸ்கின் 62
ருஷ்யா 60
ரூஸ்ஸோ 76
ரோம் 14
ரோம ஏகாதிபத்தியம் 75, 104
லகோர்கெட் 59
லண்டன் 70
லார்ட் காஸல்ரே 77
லாவோத்ஸே 15, 46
லீப்னிட்ஸ் 76
லெனின் 97
வார்சேல் மகாநாடு 97
வாஷிங்க்ட்டன் மகாநாடு 84
விக்டர் ஹ்யூகோ 84
வில்லியம் கிரெமார் 71
வில் ட்யூரண்ட் 14
வில்லியம் பென் 64, 69
வில்லியம் ரோஷர் 42
வில்லியம் லாட் 78

விவேகானந்தர் 56
வூ-பாங் அரசன் 15
வெனிஸ் 75
வெஸ்ட் மினிஸ்டர்
மாதா கோயில் 22
ஸல்லி 76
ஸான்பியார் 76
ஸெர்வியா 60
ஷார்லமேன் 55
ஜப்பான் 12, 61, 104
ஜார்ஜ் காட்லின் 89
ஜார்ஜ் பாக்ஸ் 68
ஜான் மில் 78
ஜினீவா 70
ஜெக்கோஸ்லோவேகியா 104
ஜெரமி பெந்தாம் 77
ஜெர்மனி 72, 92, 97, 104
ஜேம்ஸ் மில் 78
ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல் 70
ஹாம்முராபி 18
ஹிட்லர் 92
ஹிட்டைட்டிஸ் 16, 23
ஹிந்துகுஷ் 20
ஹீப்ரு 23
ஹெரோட்டோடஸ் 9, 16, 25
ஹேக் நகரம் 72
ஹோயாங்கோ 20, 25
ஹ்யூகோ க்ரோஷியஸ் 76

இந்நூலாசிரியரின்
சமீப வெளியீடுகள்

❋

| | |
|---|---|
| அரசியல் வரலாறு | **2—62** |
| கார்ல் மார்க்ஸ் | **3—25** |
| ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு தீர்க்கதரிசி | **2—25** |
| மானிட ஜாதியின் சுதந்திரம் | **1—25** |
| ஆசியாவும் உலக சமாதானமும் | **2—50** |
| ஐக்கிய தேசஸ்தாபனம் | **2—00** |
| ருஷ்யாவின் வரலாறு | **6—50** |

(தபாற் செலவு தனி)

❋

**பிரபஞ்சஜோதி**
**பிரசுராலயம்**

**புதுக்கோட்டை**
**(திருச்சி ஜில்லா)**

இந்நூலாசிரியர் எழுதிய

# ஐக்கிய தேசஸ்தாபனம்

4935. XXV-B.23.

★

உலக சமாதானத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசஸ்தாபனத்தின் நோக்கம், அதன் அமைப்பு முறை, அதன் அங்கங்களாயுள்ள ஸ்தாபனங்களைப் பற்றிய விவரங்கள் யாவும் இந்நூலில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூ. 2/-
(தபாற் செலவு தனி)

MAHA... SW... TIRUVAN...

பிரபஞ்சஜோதி பிரசுராலயம்
புதுக்கோட்டை (திருச்சி ஜில்லா)

Wrapper Printed at the S. M. P. P., Vriddhachalam.